# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs - January 2021


**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்


1 **வரலாறு** 01

▪முக்கிய தினங்கள் ▪உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ▪பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ▪சிறந்த நபர்கள் ▪விளையாட்டு ▪புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ▪விருதுகள் மற்றும் கௌரவங்கள் ▪கலாச்சாரம் ▪சமீபத்திய புதிய சொற்கள் ▪இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ▪நியமனங்கள்



2 **அரசியல் அறிவியல்** 28

மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்




3 **புவியியல்** 30

▪சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை



4 **பொருளாதாரம்** 32

▪புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை



5 அறிவியல் 36

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு



6 தினசரி தேசிய நிகழ்வு 42



7 சர்வதேச நிகழ்வு 60



8 தமிழ்நாடு 64



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 6 | மகாராஷ்டிராவின் பத்திரிக்கை தினம் | ▪ மறைந்த பத்திரிக்கையாளர் பால்ஷாஸ்திரி ஜம்பெகரின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 6 ஆம் தேதி மகாராஷ்டிரா மாநில அரசு பத்திரிக்கை தினத்தை அனுசரிக்கிறது.<br>▪ முதல் மராத்திய பத்திரிக்கையை தொடங்கு வதற்கு மேற்கொண்ட முயற்சிக்காக “மராத்திய பத்திரிக்கையின் தந்தை“ என அழைக்கப்படுகிறார். |
| ஜனவரி 9 | பிரவாசி பாதியா தினம் | ▪ இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரவாசி பாரதிய திவாஸைத் தொடங்கி வைத்தார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த பிரவாசி பாரதிய திவாஸ் ஜனவரி 9 அன்று நடத்தப்படுகிறது.<br>▪ 16வது பிரவாசி பாரதிய திவாஸின் கருப்பொருள் “Contributing to Aatmanirbhar Bharat” என்தாகும்.<br>▪ முதல் பிரவாசி பாரதிய திவாஸ் 2003 ஆம் ஆண்டில் நடைபெற்றது. |
| ஜனவரி 10 | உலக ஹிந்தி தினம் | ▪ உலக ஹிந்தி தினம் ஜனவரி 10, 2006 முதல் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்திரா காந்தி கடந்த 1975 ஜனவரி 10 அன்று முதல் உலக ஹிந்தி மாநாட்டை நடத்தினார்.<br>▪ பிரதமர்மன்மோகன்சிங்2006ஜனவரி10அன்று உலக இந்திய தினம் கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.<br>▪ தேசிய ஹிந்தி தினம் செப்டம்பர் 14 அன்று கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 11 முதல் ஜனவரி 17 வரை | தேசிய சாலை பாதுகாப்பு வாரம் | ▪ தேசிய சாலை பாதுகாப்பு வாரம் 2021 ஜனவரி 11 முதல் 2021 ஜனவரி 17 வரை கொண்டாடப்பட்டது.<br>▪ இந்த வாரம் முதன் முதலாக 1989ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| **ஜனவரி 12** | தேசிய இளைஞர் தினம் | ▪ இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமான ஜனவரி 12 தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த நிகழ்வு 1984 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் இந்த நிகழ்வு முதன் முதலில் கொண்டாடப்பட்டது.<br>▪ 2021ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தரின் 158வது பிறந்த நாளை (12 ஜனவரி 1863) அனுசரிக்கப்படுகிறது.<br>▪ தேசிய இளைஞர் தினமாக 2021 இன் கருப்பொருள்: "Channelizing Youth power for Nation Building'. |
| **ஜனவரி 14** | ஆயுத படைவீரர்கள் தினம் | ▪ 14 ஜனவரி 53 அன்று ஓய்வு பெற்ற இந்திய ஆயதப்படைகளின் முதல் இந்தியத் தளபதி ஃபைல்ட் மார்ஷல் கே.எம்.கரியப்பா செய்த சேவைகளின் மரியாதை மற்றும் அங்கீகாரத்தின் அடையாளமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14ஆம் தேதி ஆயுதப்படை வீரர் தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **ஜனவரி 15** | இந்திய இராணுவ தினம் | ▪ ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 15ஆம் நாள் இந்திய இராணுவ தினம் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் 2021ஆம் ஆண்டு இந்தியா தனது 73வது இராணுவதினத்தைக்கொண்டாடப்படுகிறது.<br>▪ 1895ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று இந்திய இராணுவம் தோற்றுவிக்கப்பட்டது. எனினும் இந்தியா விடுதலை அடைந்த பின்பு, 1949ஆம் ஆண்டு ஜனவரி 15 அன்று தான் இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி பதவி இந்தியரின் கைக்கு மாறியது.<br>▪ ஆகவே அந்த நாளை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 15ஆம் நாள் இந்திய இராணுவ தினம் கொண்டாடப்படுகிறது. |
| **ஜனவரி 15** | திருவள்ளுவர் தினம் | ▪ திருவள்ளுவர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 15-ம் தேதி திருவள்ளுவர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.<br>▪ தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை 1971 முதல் ஏற்று 1972 முதல் அரசிதழிலும் வெளியிட்டு-தமிழக அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் ஆண்டு பின்பற்றப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| *ஜனவரி 19* | தேசிய சாலை பாதுகாப்பு மாதம் | ▪ சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் வாயிலாக இந்தியாவில் சாலை விபத்துகளை கட்டுப்படுத்துவதற்காக தேசிய சாலை பாதுகாப்பு மாதம் (ஜனவரி 19) தொடங்குகிறது.<br>▪ வாகா எல்லை முதல் கன்னியாகுமரி வரையிலான தேசிய சாம்பியன்ஷிப் பாதுகாப்பு விரைவு சவால் என்ற பயணமும் தொடங்கி வைக்கப்பட்டது. |
| *ஜனவரி 19* | தேசிய பேரிடர் மீட்பு படை தினம் | ▪ ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 19 அன்று தேசிய பேரிடர் மீட்பு படை தினம் கொண்டாடப்படுகிறது. தேசிய பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதன் கீழ் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் செயல்படுகிறது. |
| *ஜனவரி 23* | நேதாஜி பிறந்த தினம் | ▪ கடந்த 1897ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் பிறந்தார். அவரின் பிறந்ததினம் ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று மத்திய அரசு அண்மையில் அறிவித்தது. இந்த ஆண்டு அவரின் 125-ஆவது பிறந்த தினம் கொண்டாடியது. |
| *ஜனவரி 24* | பெண் குழந்தைகள் தினம் | ▪ தேசிய பெண் குழந்தைகள் தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்த கொண்டாட்டம் கடந்த 2008-ம் ஆண்டு முதல் ஜனவரி 24-ம் தேதி நடக்கிறது. |
| *ஜனவரி 25* | தேசிய வாக்களார் தினம் | ▪ தேசிய வாக்காளர் தினம் (ஜனவரி 25) கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்தியாவில் தேர்தல் ஆணையம் கடந்த 1950-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் ஆண்டு 25-ஆம் தேதியன்று அமைக்கப்பட்டது.<br>▪ கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் தேசிய வாக்காளர் தினம் கொண்டாட ஒப்புதல் அளிக்கப்பட்டு அந்த தினம் ஒவ்வொரு மாநிலத்திலும் விழா கொண்டாடப்படுகிறது.<br>▪ 2021-ம் ஆண்டு இந்தியாவின் 11-வது தேசிய வாக்காளர் தினம் (ஜனவரி 25) கொண்டாடப்பட்டு உள்ளது.<br>▪ ‘வாக்காளர்களை அதிகாரம், விழிப்பு, தகவல்களை அறிந்தவர்களாக மாற்றுவோம்“ என்பதே நிகழாண்டின் கருப்பொருளாக உள்ளது. |

| | | |
|---|---|---|
| *ஜனவரி 25* | ஜனவரி *25*ல் தேசிய சுற்றுலா தினம் நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. | |
| *ஜனவரி 26* | சர்வதேச சுங்க தினம் | ▪ மையக்கருத்து *2021* - *"Customs bolstering Recovery, Renewal and Resilience".*<br>▪ *1953*ஆம் ஆண்டில் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் சுங்க ஒத்துழைப்பு கவுன்சிலின் தொடக்க அமர்வு நடைபெற்ற நாளின் நினைவாக உலக சுங்க அமைப்பால் இந்த நாள் நிறுவப்பட்டது.<br>▪ *1994*இல் சுங்க ஒத்துழைப்பு கவுன்சில் உலக சுங்க அமைப்பு என பெயர் மாற்றப்பட்டது. |
| *ஜனவரி 30* | உலக தொழுநோய் தினம் | ▪ மையக்கருத்து - *"Beat Leprosy, End Stigma and advocate for Mental Wellbeing."* |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## டிஆர்டிஓ, இந்திய கடற்படை சஹாயக்–என்ஜி வெற்றிகரமான முதல் சோதனை

- கோவா கடற்கரையில் உள்ள ஐ.எல் -38 எஸ்.டி விமானத்தில் இருந்து சஹாயக்-என்ஜி ஏர்-டிராப் கொள்கலனை டி.ஆர்.டி.ஓ மற்றும் இந்திய கடற்படை வெற்றிகரமாக நடத்தியதாக தெரிவித்துள்ளது. சஹாயக்-என்ஜி SAHAYAK-NG இந்தியாவின் முதல் உள்நாட்டு வடிவமைக்கப்பட்ட கொள்கலன் என்று பாதுகாப்பு அமைச்சகம் அறிக்கை தெரிவித்துள்ளது.
- இது ஜி.பி.எஸ் உதவியுடன், 50 கிலோ வரை செலுத்தக்கூடியது மற்றும் கனரக விமானத்திலிருந்து இறக்கிவிட முடியும்.
- SAHAYAK-NG என்பது SAHAYAK Mk I காற்று கைவிடக்கூடிய கொள்கலனின் மேம்பட்ட பதிப்பாகும்.

## டி.ஆர்.ஓ.ஓ.வின் 63வது தினம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தனது 63வது தினம் ஜனவரி 1, 2021 அன்று கொண்டாடியது.
- டி.ஆர்.டி.ஓ. கடந்த 1958ஆம் ஆண்டு 40 ஆய்வகங்களுடன் தொடங்கப்பட்டது.

## ஜி.ஆர்.எஸ்.இ நிறுவனத்தில் கட்டப்பட்ட அதிநவீன கப்பல் கடற்படையிடம் ஒப்படைப்பு

- பொதுத் துறை நிறுவனமான கார்டன் ரீச்ஷிப்பில் டர்ஸ் அண்ட் என்ஜினியர்ஸ் நிறுவனத்தில் (ஜிஆர்எஸ்இ) கட்டப்பட்ட அதிநவீன தளவாட கப்பல், இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.
- கடற்படைக்காக மொத்தம் எட்டு ரக தளவாட கப்பல்களைக் கட்டி வழங்க, கொல்கத்தாவில் உள்ள ஜிஆர்எஸ்இ நிறுவனத்துக்கு பணி வழங்கப்பட்டிருந்தது.
- அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்டவை. மணிக்கு 15 கடல்மைல் வேகத்தில் செல்லக் கூடியவை. இதன் 90 சதவீத பாகங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

## மெட்ரோ ரயில் நிலையங்களில் பயோடயஜெஸ்டர் தொழில்நுட்பம்

- இந்திய அரசின் முன்னணி ஆராய்ச்சி முகமையான பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் (டிஆர்டிஓ), இந்திய, மகாராஷ்டிர அரசுகளின் கூட்டு நிறுவனமான மகாராஷ்டிரா மெட்ரோ ரயில் நிறுவனமும் (மகா-மெட்ரோ) தண்ணீர் சேமிப்பிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் இணைந்து பணிபுரிந்து வருகின்றன.
- மெட்ரோ ரயில் மையங்களில் மனிதக் கழிவுகளை கையாள்வதற்காக மேம்படுத்தப்பட்ட பயோ டயஜெஸ்டர் (எம்கே-II) தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆதரவை டிஆர்டிஓ வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், மகாராஷ்டிரா மெட்ரோ ரயில் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே கையெழுத்தானது.

## கடலோர ஆராய்ச்சி கப்பல் "சாகர் அன்வேஷிகா"–வை டாக்டர் ஹர்ஷ்வர்தன் நாட்டுக்கு அர்ப்பணித்தார்

- கடலோர ஆராய்ச்சி கப்பலான "சாகர் அன்வேஷிகா"-வை மத்திய சுகாதாரம், குடும்ப நலம், அறிவியல் & தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் சென்னையில் அர்ப்பணித்தார்.
- முன்னேறிய அறிவியல் உபகரணங்கள் மற்றும் கப்பலை செலுத்தும் நவீன சாதனங்களை கொண்ட இக்கப்பல், கடல்சார் மற்றும் சுற்றுச்சூழல் தரவுகளை சேகரிப்பதோடு, இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திற்குள் செயல்விளக்கம் மற்றும் நிலைநிறுத்தல் ஆகியவற்றில் உதவும்.

## மிகப்பெரிய கடலோரப் பாதுகாப்பு பயிற்சி சீ விஜில்–21

- இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் நாடு தழுவிய கடலோரப் பாதுகாப்பு பயிற்சியான 'சீ விஜில்-21', 2021 ஜனவரி 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- ஜனவரி 2019-இல் தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சி, 7516 கி.மீ நீளமுள்ள ஒட்டுமொத்த கடற்கரைப் பகுதியிலும், இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திலும் நடத்தப்பட்டது.

## இந்தியா–வியட்நாம் இடையிலான 13–வது பாதுகாப்புத்துறை பேச்சுவார்த்தை

- இந்தியா – வியட்நாம் இடையிலான 13-வது பாதுகாப்புத்துறை பேச்சுவார்த்தை இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு, இந்திய பாதுகாப்புத்துறை செயலர் டாக்டர் அஜய்குமார், வியட்நாம் பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் லெப்டினன்ட் ஜெனரல் குயன் சி வின் - உடன் இணைந்து தலைமைத் தாங்கினார்.
- இருநாடுகளுக்கு இடையே பல்வேறு பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தனர்.
- பாதுகாப்பு ஒத்துழைப்பின் புதிய அம்சங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திர துப்பாக்கி "அஸ்மி"

- இந்தியாவின் முதல் உள்நாட்டு 9 மிமீ இயந்திர துப்பாக்கியை ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு உருவாக்கியுள்ளது. காலப்படை பள்ளி மற்றும் டிஆர்டிஓவின் ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஸ்தாபனம்(ARDE), புனேஆகியவை இணைந்து இந்த ஆயதத்தை உருவாக்கியுள்ளது.
- உள்நாட்டு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சிறப்பாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- பிஸ்டல்இன்-சர்வீஸ்9மி.மீவெடிமருந்துகளை இதில் பயன்படுத்த முடியும்.

## இரு சக்கர அவசர சிகிச்சை ஊர்தி "ரக்ஷிதா"

- தில்லியில் இருக்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) ஆய்வகமான அணு மருத்துவம் மற்றும் தொடர்புடைய அறிவியலுக்கான நிறுவனம், இரு சக்கர அவசர சிகிச்சை ஊர்தியான "ரக்ஷிதாவை" மத்திய ரிசர்வ் காவல் படைக்கு புது தில்லியில் உள்ள சிஆர்பிஎஃப் தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் வழங்கியது.
- இதையடுத்து 21 இருசக்கர அவசர சிகிச்சை வாகனங்கள் தொடங்கி வைக்கப்பட்டன.

## "டெசர்ட் நைட்–21"

- இந்திய விமானப்படை, பிரான்ஸ் வான் மற்றும் விண் படை ஆகியவை இணைந்து 'டெசர்ட் நைட்-21' (பாலைவன வீரன்) என்ற பெயரில், கூட்டுப் பயிற்சியை, ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் விமானப்படை தளத்தில் ஜனவரி 21 முதல் ஜனவரி 24ம் தேதி வரை மேற்கொண்டன.
- இந்திய விமானப்படை சார்பில் மிராஜ்-2000, சுகாய், ரபேல், ஐஎல்-78, அவாக்ஸ் மற்றும் ஏஇடபிள்யூ&சி விமானங்கள் பங்கேற்றன.
- இந்தியா-பிரான்ஸ் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இரு நாட்டு விமானப்படைகளும், கருடா என்ற பெயரில் 6 முறை கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டன.

## துறைமுகங்கள் மேம்பாடு குறித்த ஆய்வு கூட்டம் "சிந்தன் பைதக்"

- துறைமுகங்கள் மேம்பாடு குறித்த ஆய்வு கூட்டம் (சிந்தன் பைதக்), குஜராத்தின் கட்ச் பகுதியில் உள்ள தோர்டோ என்ற இடத்தில் ஜனவரி 21-ம் தேதி முதல் 23ம் தேதி வரை நடைபெற்றது. இதற்கு மத்திய துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்து அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தலைமை வகித்தார். இதில் கடல்சார் தொலைநோக்கு - 2030-க்கான திட்டங்கள் இறுதி செய்யப்படுகின்றன.

## அந்தமான் கடலில், "கவாச்" என்ற பெயரில் பாதுகாப்பு படைகள் கூட்டு பயிற்சி

- இந்திய ராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடலோர காவல் படை ஆகியவை இணைந்து, அந்தமான் கடல் பகுதியில், மிகப் பெரியளவிலான கூட்டு பயிற்சியை மேற்கொண்டன.
- அந்தமானில் உள்ள கூட்டுப்படை கட்டுப்பாட்டு மையத்தின் தலைமையில் இந்த பயிற்சிகள் நடைபெற்றன.
- இதில் ராணுவத்தின் நீர் மற்றும் நிலப் பகுதியில் போரிடும் படைப் பிரிவு, கடற்படையின் போர்க்கப்பல்கள், விமானப் படையின் ஜாக்குவார் மற்றும் போக்குவரத்து விமானங்கள், கடலோர காவல் படை கப்பல்கள் பங்கேற்றன

## 2021ஆம் ஆண்டில் இராணுவ வலிமை கொண்ட நாடுகள் தரவரிசை

- 2021ஆம் ஆண்டின் இராணுவ வலிமை கொண்ட நாடுகள் தரவரிசையில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. 138 நவீன இராணுவ நாடுகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
- இந்தியா 0.1214 என்ற புள்ளிகள் பெற்று (உலகளவில் இராணுவ வலிமை கொண்ட நான்காவது நாடு ஆகும். 0.0000 என்ற புள்ளி சிறந்த இராணுவ வலிமை கொண்ட நாடு ஆகும்.
- கடந்த 2006 ஆண்டு ஆண்டு முதல் 'Power Index' இராணுவ வலிமை கொண்ட நாடுகள் தரவரிசை வெளியிடப்பட்டு வருகிறது.

## தரையில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன்மிகு வான்வழி எதிர்ப்பு ஆயுதம்

- உள்நாட்டு ராணுவ தளவாட உற்பத்தியில் இன்னுமொரு மைல்கல்லாக, நமது நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட திறன்மிகு வான்வழி எதிர்ப்பு ஆயுதத்தை (SAAW-Smart Anti Airfield Weapon) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- 2021 ஜனவரி 21 அன்று ஒடிசா கடற்கரைக்கு அருகில் உள்ள இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் லிமிடெட்டின் ஹாக்-I தளத்தில் இந்த சோதனை நடத்தப்பட்டது.
- இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் லிமிடெட்டின் ஹாக்-எம்கே132 விமானத்தில் இருந்து இந்த திறன்மிகு ஆயுதம் வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் நடத்தியுள்ள ஒன்பதாவது திறன்மிகு வான்வழி எதிர்ப்பு ஆயுத பரிசோதனை இதுவாகும்.
- 125 கிலோ எடையிலான இந்த ஆயுதம், எதிரியின் ரேடார்கள், பதுங்கு குழிகள், வாகன தளங்கள் மற்றும் ஓடுதளங்கள் ஆகியவற்றை தாக்கி அழிக்கும் வல்லமை படைத்தது.

## 2024 முதல் தேஜஸ் விமானங்கள் விமானப் படையிடம் ஒப்படைக்கப்படும்

- இந்திய விமானப் படையின் ரூ.48,000 கோடி கொள்முதல் ஒப்பந்தத்தின் படி, தேஜஸ் இலகுரக போர் விமானங்கள் தயாரிக்கப்பட்டு வரும் 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஒப்படைக்கும் பணி தொடங்கும் என்று ஹிந்துஸ்தான் விமான தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இந்திய விமானப் படையை மேலும் வலுப்படுத்தும் விதமாக, ஹெச்ஏஎல் நிறுவத்திடமிருந்து உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் 83 தேஜஸ் எம்கே-1 போர் விமானங்களை ரூ.48,000 கோடி மதிப்பில் மத்திய அரசு வாங்க திட்டமிட்டுள்ளது.

## குடியரசு தின விழா அணிவகுப்பில் வங்கதேச வீரர்கள்

- நாட்டின் 72-வது குடியரசு தின விழா நாளை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி டெல்லியில் ராணுவ வலிமை, கலாச்சாரத்தை பறைசாற்றும் பிரம்மாண்ட அணிவகுப்பு

நடைபெற்றது. இந்த அணிவகுப்பில் முதல் முறையாக வங்கதேசத்தை சேர்ந்த ராணுவ வீரர்கள் பங்கேற்றனர்.

### மேம்படுத்தப்பட்ட ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

- மேம்படுத்தப்பட்ட ஆகாஷ் ஏவுகணையின் புதிய ரகம் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது.
- ஒடிஸாவின் சண்டீபூர் கடற்கரைப் பகுதியில் இந்த புதிய ரக ஆகாஷ் ஏவுகணை பரிசோதிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது செலுத்தப்பட்ட ஆகாஷ் ஏவுகணை தரையில் இருந்து வானில் உள்ள இலக்கைத் துல்லியமாக இடைமறித்து அழித்தது.

### அந்தமான் கடலில் பாதுகாப்பு படைகள் கூட்டு பயிற்சி

- தரைப்படை, கடற்படை, விடானப்படை, கடலோரப் பாதுகாப்பு படை ஆகியவை இணைந்து "கவாச்" மற்றும் "ஆம்பெக்ஸ்-21" என்ற பெயரில் மாபெரும் கூட்டுப் பயிற்சியை அந்தமான் கடல் மற்றும் வங்க கடல் பகுதியில் நடத்தின.
- கூட்டு செயல்பாடு தயார்நிலையை அதிகரிப்பதற்காக இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- அந்தமான் மற்றும் நிகோபார் கட்டுப்பாட்டு மையம், கிழக்கு கடற்படை கட்டுப்பாட்டு மையம், ராணுவ தென் மண்டல கட்டுப்பாட்டு மையம் ஆகியவை இணைந்து இந்தக் கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டன.

## 1.3 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### சர்வதேச நிதிச் சேவை ஆணையம்

- சர்வதேச நிதி சேவை மையம் ஆணையம் (International Financial Services Centres Authority) சர்வதேச பத்திர ஆணையத்தின் (International Organization of Securities Commissions) உறுப்பினராக இணைந்து உள்ளது.
- சர்வதேச பத்திர ஆணையம் உலகின் பத்திர ஒழுங்குமுறைகளின் சர்வதேச அமைப்பாகும். இது உலகின் 95% அதிகமான சந்தை பத்திரங்களை உள்ளடக்கியது. மேலும் இது பத்திரத் துறைக்கான உலகளாவிய தர நிர்ணமாகும்.
- நாட்டின் சர்வதேச நிதி சேவை மையங்களில் உள்ள அனைத்து நிதி சேவைகளையும் ஒழுங்குப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த சர்வதேச நிதி சேவை மைய ஆணையம் 2020ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- இதன் தலைமையிடம் (காந்திநகர்) குஜராத்தில் அமைந்துள்ளது.

### ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரம் அல்லாத உறுப்பினராக இணைந்தது இந்தியா

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரம் இல்லாத உறுப்பினராக இந்தியா இணைந்தது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீனா, பிரான்ஸ், ரஷியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளன. இவை தவிர நிரந்தரம் அல்லாத 10 உறுப்பு நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. இரு ஆண்டுகள் பதவிக் காலம் கொண்ட நிரந்தரம் இல்லாத உறுப்பு நாடுகள் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்படுகின்றன.
- இந்தியா, பதிவான 192 வாக்குகளில் 184 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது.
- இதையடுத்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சலில் 2021-22 ஆகிய இரு ஆண்டுகளுக்கான

நிரந்தரம் இல்லாத உறுப்பினராக இந்தியா இணைந்துள்ளது. இக்கவுன்சிலில் இந்தியா தற்போது இணைவது 8-ஆவது முறையாகும்.

- உறுப்பு நாடுகள் தலா ஒரு மாதம் பாதுகாப்பு கவுன்சிலுக்கு தலைமை வகிக்கும். அந்த வகையில் வரும் ஆகஸ்ட் மாதமும், 2022-ஆம் ஆண்டு ஒரு மாதமும் இந்தியா தலைமை வகிக்கும்.

## 2020, செவிலியர் மற்றும் தாதியர் ஆண்டு – உலக சுகாதார நிறுவனம்

- நவீன செவிலியர் முறையை உருவாக்கியவரான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அவர்கள் பிறந்த 200வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 2020ம் ஆண்டு, செவிலியர் மற்றும், தாதியர் உலக ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2030ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் நலவாழ்வு வசதிகள் கிடைக்க வேண்டுமெனில், மேலும் 90 இலட்சம் செவிலியர் மற்றும், தாதியர் இவ்வுலகிற்குத் தேவைப்படுகின்றனர் என்று WHO எனப்படும் உலக நலவாழ்வு நிறுவனம் கூறியுள்ளது.

## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 3 குழுக்களுக்கு தலைமை வகிக்கிறது இந்தியா

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் முக்கியமான துணை அமைப்புகளான தலிபான், லிபியா பொருளாதாரத் தடைக் குழு, பயங்கரவாத எதிர்ப்புக் குழு ஆகியவற்றுக்கு இந்தியா தலைமை வகிக்கவுள்ளது.
- இந்நிலையில், இந்த மூன்று துணைக் குழுக்களுக்கு தலைமை வகிக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு கிடைத்துள்ளதாக ஐ.நா. வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி தெரிவித்தார்.
- 2022-ஆம் ஆண்டில் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவுக்கும் இந்தியா தலைமை வகிக்கும். இந்தியா சுதந்திரம் பெற்ற 75-ஆவது ஆண்டு நிறைவுடன் இது ஒருங்கிணைந்து வருகிறது.

## ஐ.நா. அமைப்பில் இடம்பெறுகிறது இந்தியாவின் தேசிய பேரிடர் மீட்புப் படை

- ஐ.நா.வின் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளில் இந்தியாவும் ஒரு பகுதியாக விரைவில் இடம்பெறவுள்ளதாக தேசிய பேரிடர் மீட்புப் படையின் (என்டிஆர்எஃப்) இயக்குநர் எஸ். என்.பிரதான் தெரிவித்தார்.
- சுவிட்சர்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட சர்வதேச தேடுதல் மற்றும் மீட்பு ஆலோசனைக் குழு இந்த அங்கீகாரத்தை வழங்கும்.
- ஐ.நா.வின் கீழ் செயல்படும் இந்தக் குழுவானது 90-க்கும் மேற்பட்ட நாடுகள், அமைப்புகளைக் கொண்டு நகர்ப்புற தேடுதல் மற்றும் மீட்பு தொடர்பான விஷயங்களை கையாண்டு வருகிறது.
- ஐ.நா. குழுவானது உலகெங்கிலும் உள்ள பேரிடர் மீட்புக் குழுக்களைத் தரப்படுத்துகிறது.
- பேரிடர் காலத்தில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில், இந்தியாவின் தேசிய பேரிடர் மீட்புப் படை 2006-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## ஜி7 மாநாடு

- அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி7 அமைப்பின் மாநாடானது, வரும் ஜுன் மாதம் 11-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரை பிரிட்டனின் கடற்கரை நகரான கார்ன்வாலில் நடைபெறவுள்ளது.
- அந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்குமாறு இந்தியா, தென் கொரியா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கு பிரிட்டன் அழைப்பு விடுத்திருந்தது.
- நடப்பாண்டில் பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பொறுப்பையும், 2023-ஆம் ஆண்டில் ஜி20 அமைப்பின் தலைமைப் பொறுப்பையும் ஏற்கவுள்ள இந்தியா, ஜி7 போன்ற சர்வதேச அமைப்புகளில் முக்கியப் பங்கை வகிக்கும்.

## உலக சுகாதார அமைப்பு நிர்வாக வாரியத்தின் 148–வது அமர்வு

- உலக சுகாதார அமைப்பின் (டபிள்யூஹெச்ஓ) நிர்வாக வாரியத்தின் 148-வது அமர்வுக்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் காணொலிக் காட்சி மூலம் தலைமை தாங்கினார்.

## டாவோஸ் செயல்திட்ட மாநாடு

- உலக பொருளாதார அமைப்பு நடத்தும் டாவோஸ் செயல்திட்ட மாநாட்டில் பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.
- உலக பொருளாதார அமைப்பின் (டபிள்யூஇஎஃப்) உச்சி மாநாடு மே மாதம் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
- சிங்கப்பூரில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் உலகத் தலைவர்கள் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் நேரடியாக பங்கேற்கவுள்ளனர்.
- அதற்கு முன்பாக டபிள்யூஇஎஃப் சார்பில் ஜனவரி 25-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை காணொலி வழியாக டாவோஸ் செயல்திட்ட மாநாடு நடைபெற்றது.

## டாவோஸ் மாநாடு

- உலக பொருளாதார அமைப்பு சார்பில் தொடங்கவுள்ள (ஜனவரி 24) டாவோஸ் காணொலி வழி செயல்திட்ட மாநாட்டில் பிரதமர் மோடி சீன அதிபர் ஷி ஜின்பிங் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்றனர்.
- இந்த மாநாட்டில் பொருளாதாரம், சுற்றுச்சூழல், கரோனா பாதிப்பைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் சமூக மற்றும் தொழில்நுட்ப சவால்கள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.
- உலக பொருளாதார அமைப்பின் (டபிள்யூஇஎஃப்) உச்சி மாநாடு இந்த ஆண்டு மே மாதம் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை சிங்கப்பூரில் நடைபெற உள்ளது. அதற்கு முன்பாக டபிள்யூஇஎஃப் சார்பில் ஜனவரி 24-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை காணொலி வழியில் டாவோஸ் செயல்திட்ட மாநாடு நடத்தப்பட்டது.
- இதில் ஜி20 அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் 15 சிறப்பு விருந்தினர்களுடன் ஹர்ஷ் வர்தன், பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்கேற்று உரையாற்ற உள்ளனர்.

## ஐ.நா. அமைதி மேம்பாட்டு நிதிக்கு ரூ.1 கோடி மத்திய அரசு அறிவிப்பு

- உலக அளவில் அமைதியை நிலைநாட்டும் பணிகளை சர்வதேச சமூகம் திறம்பட மேற்கொள்ள உதவும் வகையில் ஐ.நா.அமைதி மேம்பாட்டு நிதிக்கு இந்த ஆண்டு ரூ.1 கோடி அளிக்கப்படும் என்று இந்தியா சார்பில் ஐ.நா. சபையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.
- ஐ.நா. அமைதி மேம்பாட்டு நிதிக்கான உயர்நிலைக் குழு மாநாடு நடைபெற்றது.
- ஐ.நா.வின் இந்தத் திட்டம் தொடர்பாக அண்மையில் நிறைவடைந்த 2020-ஆம் ஆண்டு ஆய்வு முடிவில், அமைதி மேம்பாட்டு திட்டத்தை வலுப்படுத்த ஒருங்கிணைந்த வழிகாட்டி நடைமுறை உருவாக்கப்பட்டது.
- அதில் 2020 முதல் 2024-ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டு விரிவான திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டது.

## டாவோஸ் மாநாட்டில் பிரதமர் உரை

- உலக பொருளாதார அமைப்பின் டாவோஸ் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தில்லியில் இருந்தபடி ஜனவரி 28இல் உரை நிகழ்த்த உள்ளார்.
- உலகம் முழுவதிலுமிருந்து 400-க்கும் அதிகமான மிகப் பெரிய தொழில்நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்கும் இந்த நிகழ்வில், மனிதகுல நன்மைக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நான்காவது தொழில்புரட்சியை உருவாக்குவது குறித்து பிரதமர் மோடி பேச உள்ளார்.

# 1.4 சிறந்த நபர்கள்

## மூத்த ஒளிபரப்பாளர் இந்திரா ஜோசப் வென்யூர் காலமானார்

- புகழ்பெற்ற ஒளிபரப்பாளரான இந்திரா ஜோசப் வென்யூர் காலமானார். கேரளாவைச் சேர்ந்த முதல் ஆங்கில செய்தி வாசிப்பாளர் ஆவார். ஆங்கில சேவை திருவிந்தாங்கூர் வானொலியில் 1949 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டுள்ளது. அகில இந்திய வானொலியிலும் பணியாற்றி உள்ளார்.

## பிரதமர் மோடிக்கான அங்கீகார மதிப்பீடு 55% ஆய்வில் தகவல்

- உலகத் தலைவர்களுக்கான மக்களின் அங்கீகார மதிப்பீட்டை ஆய்வு செய்து வெளியிட்டு வரும் "மார்னிங் கன்சல்ட்" என்ற சர்வதேச நிறுவனத்தின் சமீபத்திய புள்ளி விவரத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒட்டு மொத்தமாக 55 சதவீத அங்கீகார மதிப்பீடு கிடைத்திருப்பது தெரிய வந்திருக்கிறது.
- பிரதமர் மோடிக்கு உலக அளவில் 75 சதவீதம் பேர் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

## எழுத்தாளர் இளவேனில் காலமானார்

- எழுத்தாளரும், திரைப்பட இயக்குநருமான இளவேனில் காலமானார்.
- தொடக்க காலத்தில் இடதுசாரி சிந்தனை யாளராக அறியப்பட்ட இவர். பின்னர் முன்னாள் முதல்வர் கருணாநிதியுடன் நெருக்கமாக இருந்தார். **"புயலுக்கு இசை வழங்கும் பேரியக்கம்"** உட்பட பல நூல்களை எழுதியுள்ளார்.
- கருணாநிதியின் கதை, வசனத்தில் வெளியான "உளியின் ஓசை" படத்தை இவர் இயக்கியுள்ளார்.

## பாகிஸ்தானிடமிருந்து சியாச்சின் பனி மலையை பாதுகாத்த கர்னல் புல் குமார் காலமானார்

- 1984 ஆம் ஆண்டில் பாகிஸ்தானிய ராணுவம் அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந்து இமயமலையின் இன்னொரு அங்கமாகத் திகழும் காரகோரம் மலைத்தொடரில் அமைந்துள்ள பனிபடர்ந்த சியாச்சின் சிகரத்தை கைப்பற்ற முனைந்தது. எனினும் பாகிஸ்தான் நடவடிக்கைகளை முறியடித்து சியாச்சினையும் அதனைச் பனிப்பாறையைப் பகுதிகளையும் தனது போர்த்திறனால் காத்துநின்றவர் கர்னல் புல் குமார்.

## எழுத்தாளர் ஆ.மாதவன் காலமானார்

- சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர் ஆ.மாதவன் திருவனந்தபுரத்தில் காலமானார்.
- கடைத்தெருவின் கதைசொல்லி என இலக்கிய விமர்சகர்களாலும், வாசகர்களாலும் கொண்டாடப்பட்ட ஆ.மாதவன் கடந்த 2015ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதை தன் **'இலக்கியச் சுவடுகள்'** என்னும் திறனாய்வு நூலுக்காக பெற்றவர்.
- 1953ம் ஆண்டில் இருந்து மிகத்தீவிரமாக இலக்கிய உலகில் இயங்கி வந்தார் ஆ.மாதவன்.
- **புனலும் மணலும், கிருஷ்ண பருந்து** உள்ளிட்ட இவரது நாவல்களும், கடைத்தெருக் கதைகள் என்னும் சிறுகதைத் தொகுப்பும் பரவலாகக் கவனம் பெற்றவை.

## முன்னாள் கிரிக்கெட் வீரர் ஆலன் புர்கெஸ் காலமானார்

- உலகின் மிகப் பழமையான முதல் வகுப்பு கிரிக்கெட் வீரர் ஆலன் புர்கெஸ் காலமானார்.
- 1940 முதல் 1952 வரை நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் விளையாடினார்.
- அவரது மரணத்திற்கு பிறகு, இந்தியாவின் ரகுநாத் சந்தோர்கர் இப்போது உயிருடன் உள்ள பழமையான முதல் தர கிரிக்கெட் வீரர் ஆவார்.

## கமலா ஹாரிஸின் செய்தித் தொடர்பாளராக இந்திய அமெரிக்கர்

- அமெரிக்க துணை அதிபராகத் தேர்வாகியுள்ள கமலா ஹாரிஸின் துணை செய்தித் தொடர்பாளர் பொறுப்புக்கு, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சபரீனா சிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## எழுத்தாளர் சோலை சுந்தர பெருமாள் காலமானார்

- தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சிறப்பு அழைப்பாளராக இருந்தவர் சோலை சுந்தரபெருமாள்
- இவர் இடதுசாரி சிந்தனையாளர். வெண்மணிப் படுகொலையை முன்வைத்து இவர் எழுதிய **"செந்நெல்"** நாவல் மிகவும் பாராட்டுப் பெற்றது.
- 1989 இல் இவர் எழுதிய **தலைமுறைகள் என்னும் முதல் சிறுகதை**, சாலை பணியில் ஈடுபடும் தொழிலாளர்களைப் பற்றி வெளிவந்தது.
- இது தவிர, உறங்க மறந்த கும்கர்ணர்கள் , ஒரே ஒரு ஊர்ல, நஞ்கை மனிதர்கள், தப்பாட்டம், பெருந்திணை, மரக்கால், தாண்டவபுரம், பால்கட்டு, எல்லை பிடாரி, வண்டல் உணவுகள் ஆகிய நாவல்களையும், மண் உருவங்கள், வண்டல், ஓராண்கானி, ஒரு கொடியாடுகளும், கப்பல்காரர் வீடு ஆகிய சிறுகதைத் தொகுப்புகளையும் எழுதியுள்ளார்.

## பிரபல ஹிந்துஸ்தானி இசையமைப்பாளர் குலாம் முஸ்தபா கான் காலமானார்

- பிரபல ஹிந்துஸ்தானி இசையமைப்பாளரும் பத்ம விபூஷண் பெற்றவருமான உஸ்தாத் குலாம் முஸ்தபா கான் மும்பையில் காலமானார்.
- கடந்த 1991-இல் பத்மஸ்ரீ விருதையும், 2006-இல் பத்ம பூஷண் விருதையும், 2018-ல் பத்ம விபூஷண் விருதையும் பெற்றுள்ளார். 2003-இல் சங்கீத நாடக அகாதெமி விருதையும் பெற்றுள்ளார்.

## உலக புகழ்பெற்ற புற்றுநோய் நிபுணர் டாக்டர் சாந்தா காலமானார்

- சென்னை உலக புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவ நிபுணரும், சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் தலைவருமான, டாக்டர் சாந்தா, உடல்நலக் குறைவால் காலமானார்.
- உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருந்தார்.
- தரமான மற்றும் மலிவு புற்றுநோய் சிகிச்சையை அனைவருக்கும் கிடைக்க செய்ததற்காக மதிப்புமிக்க பத்மஸ்ரீ (1986) மற்றும் பத்ம பூஷண் (2006) ஆகியவற்றைப் பெற்றவர்.
- அவருக்கு பத்ம விபூஷன் மற்றும் ரமோன் மகசேசே விருதுகளும் வழங்கப்பட்டன.
- 1955 அடையாறில் தொடங்கப்பட்ட மருத்துவமனையில் டாக்டராக தனது பணியை துவங்கினார்.

## அமெரிக்க அதிபரின் உரையை தயாரித்த இந்திய வம்சாவளி இளைஞர்

- அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் பதவியேற்கு உரையை தயாரித்து அளித்தது இந்திய வம்சாவளி இளைஞர் என்பது தெரியவந்துள்ளது. வினய் ரெட்டி என்ற அந்த இளைஞர் தெலங்கானா மாநிலத்தைப் பூர்விகமாகக் கொண்டவர்.
- தெலங்கானாவின் கரீம் நகர் மாவட்டத்தில் உள்ள போதிரெட்டிபோட்டை கிராமம்தான் வினயின் பூர்விகம் ஆகும்.
- அந்த உரையில் அமெரிக்க ஒருமைப்பாடு, அமெரிக்கர்களின் ஒற்றுமை குறித்து பைடன் பயன்படுத்திய வார்த்தைகள் அனைவரையும் மிகவும் கவர்வதாகவும் பாராட்டுக்குரியதாகவும் இருந்தது. தேர்தல் பிரசாரத்தின்போது ஜோ பைடன், கமலா ஹாரிஸ் பிரசார உரைகளையும் வினய் வழங்கியுள்ளார்.

## தேசிய பெண் குழந்தைகள் தினத்தையொட்டி ஒரு நாள் முதல்வராக செயல்பட்ட மாணவி

- தேசிய பெண் குழந்தைகள் (ஜனவரி 24) தினத்தையொட்டி, உத்தரகாண்டின் ஒரு நாள் முதல்வராக கல்லூரி மாணவி சிருஷ்டி கோஸ்வாமி செயல்பட்டார்.

## குடியரசு அணிவகுப்பு முதல்முறையாக 2 பெண் பைலட்கள் பங்கேற்பு

- குடியரசு தின அணிவகுப்பில் முதல்முறையாக விமானப் படையைச் சேர்ந்த 2 பெண் பைலட்கள் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர்.
- குடியரசு தினத்தை முன்னிட்டு டெல்லியில் நமது ராணுவ பலத்தை விளக்கும் வகையில் அணிவகுப்பு நடைபெற்றது.
- இந்த அணிவகுப்பில் முதல்முறையாக விமானப்படையைச் சேர்ந்த பாவனா காந்த், சுவாதி ரத்தோர் ஆகிய 2 பெண் பைலட்கள் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர்.

## சுபாஷ் போஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கர் விருது 2021

- ராஜேந்திர குமார் பண்டாரி 2021 ஆம் ஆண்டிற்கான சுபாஷ் போஷ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கர் விருது வென்றார். நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு சங்கம் என்ற பிரிவுக்காக இந்த விருது வழங்கப்பட்டது.
- இவ்விருது ரூ.51 லட்சம் ரொக்கப் பரிசும், தனிநபர் சான்றிதழ் மற்றும் நிறுவனத்திற்கான சான்றிதழ் மற்றும் ரூ.5 லட்சம் பரிசும் வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 23 நேதாஜியின் பிறந்த தினம் முன்னிட்டு, பேரழிவு மேலாண்மையில் தனிநபர் மற்றும் அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் தன்னலமற்ற சேவைகளுக்காக வழங்கப்படுகிறது.

## நோபல் பரிசு வென்ற பால் கரூட்சன் காலமானார்

- வேதியலுக்காக 1995ஆம் ஆண்டு நோபல் பரிசு வென்ற பால் க்ரூட்சன் காலமானார்.
- இவர் 1995 ஆம் ஆண்டு J. Molina மற்றும் F. Sherwood Rowland ஆகியோர் உடன் இணைந்து பரிசு வென்றார்.
- ஓசோன் அடுக்கு மற்றும் காலநிலை மாற்றம் பற்றி பணி செய்ததில் இவர் சிறப்பாக அறியப்படுகிறார். மேலும் 'Anthropocene' என்ற வார்த்தை அறிமுகம் செய்தார். மனிதனின் விளைவுகளால் பூமிக்கு ஏற்படும் பாதிப்புகளை பற்றி விவரித்து உள்ளார்.

## சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளர்

- சுதந்திர இந்தியாவின் முதல் வாக்காளருக்கு இப்போது வயது 103 வயதாகிறது. அவர் ஹிமாசலப் பிரதேசத்தில் நடைபெற்ற முதல்கட்ட உள்ளாட்சித் தேர்தலில் அவர் வாக்களித்தார்.
- ஷியாம் சரண் நேகி என்ற முதியவர், கடந்த 1951-52 ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் முதல் நபராக வாக்களித்தார்.
- அவர் 1917 ஜுலை 1-ஆம் தேதி பிறந்தார்.
- இந்தியாவின் முதல் வாக்காளர் என்ற பெருமையைப் பெறுவர்.
- 1951 அக்டோபர் 23-ஆம் தேதியே தேர்தல் நடைபெற்றது.

## போர் விமான சாகசம் முதல் பெண் விமானி

- குடியரசு தின விழாவில், போர் விமானங்களில் சாகச நிகழ்ச்சியில் இந்த ஆண்டு முதல் முறையாக, பெண் விமானி பாவனா காந்த், இதில் பங்கேற்க உள்ளார்.
- இந்த ஆண்டு, விமானப்படை வரலாற்றில் முதல் முறையாக, போர் விமானத்தை, பெண் விமானி பாவனா காந்த் இயக்க பெற்றார். இவரும், அவனி சதுர்வேதி மற்றும் மோகனா சிங் ஆகியோரும், 2016ல், இந்திய விமானப்படையின் முதல் பெண் போர் விமானிகளாக பொறுப்பேற்றனர்.

# 1.5 விளையாட்டு

## 14 வயதில் இந்தியாவின் 67–வது செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆன கோவாவைச் சேர்ந்த லியோன்

- இந்தியாவின் 67-வது செஸ் கிராண்ட் மாஸ்டராகியுள்ளார் கோவாவைச் சேர்ந்த 14 வயது லியோன் மெண்டோன்கா.
- 14 வருடங்கள் 9 மாதங்கள் 17 நாள்களில் கிராண்ட் மாஸ்டர் ஆகியுள்ள லியோன், உலகின் 29-வது இளம் கிராண்ட் மாஸ்டர் என்கிற பெருமையை எட்டியுள்ளார்.
- கோவாவின் 2-வது கிராண்ட் மாஸ்டர் ஆகியுள்ள லியோன், இத்தாலியில் நடைபெற்ற போட்டியில் கிராண்ட் மாஸ்டர் ஆவதற்கான இறுதித் தகுதியை அடைந்துள்ளார்.
- 16 போட்டிகளில் பங்கேற்ற லியோன், 2452 ஈஎல்ஓ புள்ளிகளில் இருந்து 2544 புள்ளிகளை எடுத்துள்ளார்.

## அனைத்திந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவராக சஞ்சய் கபூர் தேர்வு

- அனைத்திந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவராக சஞ்சய் கபூர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- சஞ்சய் கபூர் மொத்தம் 33 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

## புகழ்பெற்ற இந்திய ஹாக்கி வீரர் மைக்கேல் கிண்டோ இறந்தார்

- இந்தியாவின் முன்னாள் ஹாக்கி வீரரும் 1975 உலகக் கோப்பை வென்ற அணியின் உறுப்பினருமான மைக்கேல் கிண்டோ காலமானார்.
- அவர் 1972 மியூனிக்கின் ஒரு பகுதியாக இருந்த போது அந்த அணி ஒலிம்பிக் வெண்கலப் பதக்கம் வென்றது.
- இந்திய அணி இது மலேசியாவின் கோலாலம் பூரில் 1975 இல் உலகக் கோப்பையை வென்றது. இறுதிப் போட்டியில் இந்தியா 2-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை தோற்கடித்தது. முதல் முக்கியமான கோலை சுர்ஜித் சிங் அடித்தார்.

## கேலோ இந்தியா ஐஸ் ஹாக்கி போட்டி

- கேலோ இந்தியா ஐஸ் ஹாக்கி போட்டி லடாக்கின் கார்கில், சிக்தனில் தொடங்கியது.
- முதல் முறையாக கார்கில் மாவட்டத்தில் நடந்த கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் சிக்தானின் பெண்கள் அணியும் பங்கேற்றது.

## மிகப் பழமையான ஒலிம்பிக் சாம்பியன் ஆக்னஸ் கெலேட்டி

- மிகப்பழமையான ஒலிம்பிக் சாம்பியன் ஆக்னஸ் கெலேட்டி தனது 100வது வயதை கொண்டாடினார்.
- 1952ஆம் ஆண்டு Helsinki-ல் நடைபெற்ற போட்டியிலும், 1956ஆம் ஆண்டு மெல்போர்னில் நடைபெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டியிலும் 10 பதக்கங்கள் வென்ற நாட்டின் சிறந்த சாம்பியன்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- ஒலிம்பிக் பட்டத்தை வென்ற மிக வயதான பெண் ஜிம்னாஸ்டர் ஆவார்.

## ஒடிசாவில் 2023–ல் உலக கோப்பை ஹாக்கி போட்டி

- ஒடிசா மாநில விளையாட்டு கழகமும் இந்திய ஹாக்கி சம்மேளனமும் இணைந்து மாநிலத்தில் வரும் 2023 ல் ஆண்கள் ஹாக்கி போட்டி நடத்த உள்ளது. போட்டிகள் புவனேஸ்வர் மற்றும் ரூர்கேலா ஆகிய இடங்களில் நடைபெறும் என அறிவித்து உள்ளன.

## கேலோ இந்தியா ஜான்ஸ்கர் குளிர்கால விளையாட்டு

- கேலோ இந்தியா ஜான்ஸ்கர் குளிர்கால விளையாட்டு மற்றும் இளைஞர் திருவிழா 2021 லடாக் பகுதியில் தொடங்கியது.
- இந்த விளையாட்டு 13 நாள் நடைபெற உள்ளது. இப்பகுதியில் சுற்றுலாவின்

வருகை அதிகரிக்கவும் இளைஞர்களின் திறன் மேம்படுத்தவும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.

### இந்தியாவில் 2022 ஜனவரியில் மகளிர் ஆசிய கோப்பை கால்பந்து

- மகளிருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டி இந்தியாவில் 2022 ஜனவரி 20 முதல் பிப்ரவரி 6 வரை நடைபெறவுள்ளதாக ஆசிய கால்பந்து சம்மேளனம் அறிவித்தது.
- 2021-இல் மகளிர் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியை நடத்தும் இந்தியா, 2022-இல் 17 வயதுக்கு உள்பட்ட மகளிருக்கான ஃபிஃபா உலகக் கோப்பை போட்டியையும் நடத்தவுள்ளது.
- இந்தியா ஏற்கெனவே 2016-இல் 16 வயதுக்கு உள்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து போட்டியையும், 2017-இல் 17 வயதுக்கு உள்பட்டோருக்கான உலகக் கோப்பை கால்பந்து போட்டியையும் நடத்தியுள்ளது நினைவுகூரத்தக்கது.

### 87 ஆண்டுகளில் முதல் முறையாக ரஞ்சிக் கோப்பை போட்டிகள் ரத்து

- இந்திய கிரிக்கெட்டில் 87 ஆண்டுகள் முதல் முறையாக ரஞ்சிக் கோப்பைப் போட்டிகள் இந்த ஆண்டு நடைபெறாது என பிசிசிஐ அறிவித்துள்ளது.
- இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ) சார்பில் உள்ளூர் முதல் தர போட்டியான ரஞ்சி கோப்பை தொடர் கடந்த 1934 முதல் நடத்தப்பட்டு வருகிறது.
- இதில் மும்பை அணி, அதிகபட்சமாக 41 முறை கோப்பை வென்றுள்ளது.

## 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### "தமிழ்நாட்டின் ஈர நிலங்கள்–ஓர் பார்வை"

- தமிழக வனத் துறையின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் **பெ.துரைராசு எழுதிய "தமிழ்நாட்டின் ஈர நிலங்கள் – ஓர் பார்வை"** என்ற புத்தகத்தை தலைமைச் செயலர் க.சண்முகம் வெளியிட்டார்.

### சபரிமலை குறித்த புத்தகம் வெளியீடு

- கேரளா மாநில அரசின் ஆளுநர் அரிஃப் முகமது கான் சபரிமலை குறித்த புத்தகம் "Sabarimala Vijnaanakosham," என்ற புத்தகத்தை வெளியிட்டார். விஜயநாத் என்பவர் இப்புத்தகம் எழுதி உள்ளார்.
- மேலும் திருவனந்தபுரத்தில் செங்கல் உள்ள சிவ பரவர்த்தி கோயில் வளாகத்தில் 111 அடி சிவலிங்க ஸ்தூபத்தை அமைத்ததற்காக ஆளுநர் சுவாமி மகேஷ்வரானந்துவுக்கு லிம்கா புத்தக பதிவு சான்றிதழை வழங்கினார்.

### சுயசரிதையின் பிரணாப் முகர்ஜி

- குடியரசு முன்னாள் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான பிரணாப் முகர்ஜி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மறைந்தார். அவர் இறப்பதற்கு முன்பு **"தி பிரெஸிடென்ஷியல் இயர்ஸ் 2012-2017"** என்ற புத்தகத்தை எழுதினார்.

### 'Right Under our Nose'

- இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குநர் ஆர். கிரிதரன் என்பவர் 'Right Under our Nose' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இப்புத்தகம் காவல் துறையின் தடவியல் துறை பற்றி விவரிக்கிறது.

### 'India's 71–Year Test: The Journey to Triumph in Australia'

- இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி 'India's 71-Year

*Test: The Journey to Triumph in Australia'* என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

- இப்புத்தகத்தில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா நாட்டிற்கு இடையே நடைபெற்ற போட்டிகள் பற்றியும் இந்தியாவின் முதல் 12 ஆஸ்திரேலியா பயணம் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தை பத்திரிக்கையாளர் ஆர் சௌரிக் என்பவர் எழுதியுள்ளார்.

## 'Making of a General – A Himalayan Echo'

- மணிப்பூர் மாநில ஆளுநர் டாக்டர் நஜ்மா ஹெப்துல்லா *'Making of a General – A Himalayan Echo'* என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் கொன்சம் ஹிமாலயா சிங் என்பவர் எழுதியுள்ளார்.

## "மோடி இந்தியா அழைப்பு – 2021" என்ற புத்தகம் வெளியீடு

- 16வது பிரவாசி பாரதிய திவாஸை முன்னிட்டு, "மோடி இந்தியா அழைப்பு-2021" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.
- பிரதமர் நரேந்திர மோடியின் 107 வெளிநாட்டு மற்றும் இருதரப்பு வருகைகளின் போது எடுக்கப்பட்ட பல்வேறு புகைப்படங்களைக் கொண்டுள்ளது.
- இந்த புத்தகத்தை ஆதேஷ் குப்தா வெளியிட்டுள்ளார். பிரவாசி பாரதிய திவாஸ் ஜனவரி 9, 2021 அன்று கொண்டாடப்பட்டது.

## "The Population Myth: Islam, Family Planning and Politics in India"

- முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் *S Y Quraishi* என்பவர் இப்புத்தகம் எழுதி உள்ளார்.
- இப்புத்தகம் இந்தியாவின் புள்ளி விவரங்களை மதக் கண்ணோட்டத்தில் மதிப்பிடுகிறது.

## Gazing Eastwards:

- *"Gazing Eastwards: Of Buddhist Monks and Revolutionaries in China"* என்ற புத்தகம் இந்திய வரலாற்று ஆசிரியர் ரோமிலா தாபர் என்பவர் எழுதி உள்ளார்.
- கடந்த 1957 ஆம் ஆண்டு சீனாவின் *Gazing Eastwards* என்ற பகுதிக்கு சென்ற போது சீனா அரசால் கைது செய்யப்பட்டார்.

## Making of a General–A Himalayan Echo

- மணிப்பூர் ஆளுநர் டாக்டர் நஜ்மா ஹெப்துல்லா *Making of a General-A Himalayan Echo* என்ற புத்தகத்தை வெளியிட்டார். ஓய்வுபெற்ற ஆளுநரான கொன்சம் ஹிமாலயாசிங் என்பவர் இப்புத்தகத்தை எழுதியுள்ளார்.
- ஹிமாலாயா சிங் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து வந்த முதல் இராணுவ வீரர் (மூன்று நட்சத்திர குறியீடு) ஆவார். இவர் மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்தவர்.

## "Unscripted: Conversations on Life and Cinema"

- திரைப்பட தயாரிப்பாளர் வினோத் சோப்ரா என்பவர் இப்புத்தகம் எழுதி உள்ளார். சமகால இந்தி சினிமாவின் சிறந்த திரைப்பட தயாரிப்பாளர் ஒருவரின் மனம் பற்றியும் திரைப்படத்தை பற்றியும் விவரிக்கிறது.

## 'Manohar Parrikar – Off The Record',

- கோவா மாநில முதலமைச்சர் பிரமோத் ஸவாந்த் *'Manohar Parrikar – Off The Record',* என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- இப்புத்தகம் ஸ்ரீ வாமன் சுபா பிரபு என்பர் எழுதியுள்ளார். இதில் மனோகர் பாரிக்கர் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

## "அப்துல் கலாம் நினைவுகளுக்கு மரணமில்லை"

- மறைந்த முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் குறித்த 'அப்துல் கலாம் நினைவுகளுக்கு மரணமில்லை' என்ற நூலை சென்னையில் நடைபெற்ற விழாவில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு வெளியிட்டார்.
- டாக்டர் ஒய்.எஸ்.ராஜனும் இணைந்து கலாம் குறித்த, "அப்துல் கலாம் நினைவுகளுக்கு மரணமில்லை" என்ற புத்தகத்தினை எழுதி உள்ளனர்.

### A textbook of Urban Planning and Geography"

- துணை குடியரசுத் தலைவர் வெங்கய்ய நாயுடு *"A textbook of Urban Planning and Geography"* என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் டாக்டர் சர்மீர் சர்மா என்பவர் எழுதி உள்ளார்.

### "India 2030: Rise of a Rajasic Nation"

- இப்புத்தகம் கௌதம் சிக்கர் மனே என்பவர் எழுதி உள்ளார். இதில் பிபேக் தேப்ராய், விக்ரம் சூத், ரகுநாத் ஆனந்த் மகோடல்கர், ராம் மாத்தேவ் மற்றும் டிராவிட் பிராலே ஆகியோர் பற்றிய கட்டுரையாக எழுதி உள்ளார்.

### அன்சாரியின் சுயசரிதை புத்தகம்

- *'By Many A Happy Accident"* என்பது முன்னாள் துணை குடியரசுத் தலைவர் அமித் அன்சாரி அவர்களின் சுயசரிதை ஆகும். இப்புத்தகத்தை அன்சாரி அவர்களே எழுதி உள்ளார்.

### ரோஜமைன் ரொனால்ட் புத்தக விருது

- *'Le marriage de plaisir'* என்ற பிரெஞ்ச் நாவல் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. இப்புத்தகம் கொல்கத்தாவில் நடைபெற்ற இலக்கிய திருவிழாவில் "ரோமைன் ரொனால்ட் புத்தக விருதை வென்றது.
- இப்புத்தகம் Dr SA வெங்கட சூப்பிரியா நாயகர் என்பவர் மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.

### ஈழ இலக்கியவாதி டொமினிக் ஜீவா மறைவு

- ஈழ இலக்கியவாதி டொமினிக் ஜீவா கொழும்பில் காலமானார்.
- இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்த ஜீவா, எழுத்துலகின் மீது கொண்ட ஆர்வத்தால் "மல்லிகை" என்னும் இதழைத் தொடங்கினார். நவீன தமிழ் இலக்கிய இதழாக அதனை நடத்தினார்.
- "தண்ணீரும் கண்ணீரும்", "பாதுகை", "சாலையின் திருப்பம்", "வாழ்வின் தரிசனங்கள்", "டொமினிக் ஜீவா சிறுகதைகள்" உள்ளிட்ட சிறுகதைகளும், "அனுபவ முத்திரைகள்", அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவ பயணம்", "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்", "நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள்", "முப்பெரும் தலைநகரங்களில் 30 நாள்கள்" ஆகிய கட்டுரைத் தொகுப்புகளையும் உருவாக்கியுள்ளார்.
- இவற்றில் "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்தரம்" ஈழத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சுயவரலாற்று நூலாகும்.

## 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### 'கலைச் செம்மல்" விருது தொகை உயர்வு: அரசாணை வெளியீடு

- மரபு வழி, பாணி கலைஞர்களில் சிறந்து விளங்கும் ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் கலைச்செம்மல் விருது தொகை ரூ.1 லட்சமாக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- மேலும் விருதாளர்களின் எண்ணிக்கையை 2-இல் இருந்து 6 ஆக உயர்த்தப்படுவதாகவும் அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வீரயுக நாயகன் வேள்பாரி நாவலுக்கு மலேசியா விருது

- மதுரை மக்களவை உறுப்பினரும் எழுத்தாளருமான சு.வெங்கடேசனின் "வீரயுக நாயகன் வேள்பாரி" நாவல் மலேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் இவ்விருது, 10,000 அமெரிக்க டாலர்களை பரிசுத் தொகையாகக் கொண்டது. (இந்திய மதிப்பில் சுமார் ரூ.7 லட்சம்).
- சு.வெங்கடேசன் எழுதிய முதல் நாவலான **"காவல் கோட்டம்"**, 2011-ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றது.
- வீரயுகநாயகன் வேள்பாரி நாவலுக்கு மலேசியாவில் மலேசிய பல்கலைக்கழகத்தில்

தமிழ்மொழிப் புலனத்தின் பாடநூலாக வேள்பாரி நாவல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவருக்கு விருது

- ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தைச் சேர்ந்த முதியவர், பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் சிறந்த வீடு கட்டுமான விருதைப் பெற்றுள்ளார்.
- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (பிஎம்ஏஒய்) என்பது நகர்ப்புற ஏழைகளுக்கான வீடு கட்டும் திட்டமாகும். 2015-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வீடு கட்டுவதற்காக மத்திய அரசு சார்பில் ரூ.1.66 லட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- இந்த விருதுக்காக நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 88 பயனாளிகளில் மூவர் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்தவர்கள். அவர்களில் தோடா மாவட்டம் பதர்வா பகுதியைச் சேர்ந்த முதியவரான அப்துல் லத்தீப் கனய் என்பவரும் ஒருவர்.

## பிரவாசி பாரதிய சம்மான் விருது

- யு.எஸ்.ஐ.எஸ்.பி.எஃப் தலைவர் முகேஷ் ஆகி, இந்திய சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அமெரிக்கவாழ் இந்தியர்கள் மூன்று பேருக்கு மதிப்புமிக்க பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கப்பட்டுள்ளது.
- யு.எஸ்.ஐ.எஸ்.பி.எஃப் அமைப்பை ஒருசில ஆண்டுகளில் இந்தியாவை மையமாகக் கொண்ட அமெரிக்க வணிக வழிகாட்டுதல் குழுவாக மாற்றிய முகேஷ் ஆகி, வணிகப் பிரிவின் கீழ் இந்த விருதைப் பெற்றுள்ளார்.
- சுற்றுச்சூழல் தொழில்நுட்பத்தின் கீழ் அரவிந்த் புக்கான், இந்திய கலாசார மேம்பாட்டு பணிக்காக நீலு குப்தா, மருத்துவத்தில் சிறந்த பங்களிப்புக்காக மருத்துவர் சுதாகர் ஜோன்னலகட்டா ஆகியோருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- மேலும், நியூயார்க், நியூ ஜெர்சி, கனெக்டிகட் ஆகிய மூன்று மாகாண மலைப்பகுதிகளில் இந்திய சமூகத்தின் மிகப்பெரிய மதிப்புமிக்கதாக கருதப்படும் இந்திய சங்கங்களின் கூட்டமைப்புக்கு (எஃப்ஐஏ) சமூக சேவையின் கீழ் இந்த விருது கிடைத்துள்ளது.

## தேசிய மின்சார சிக்கன விருதுகள்–2020

- மின்சார சிக்கனத்துக்கான அலுவலகம் மற்றும் மத்திய மின்சார அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய மின்சார சிக்கனம் விருதுகள் வழங்கும் விழாவில் மூன்று மதிப்புமிக்க பிரிவுகளில் 13 விருதுகளை இந்திய ரயில்வே வென்றுள்ளது.
- போக்குவரத்து பிரிவில் மேற்கு ரயில்வேக்கு முதல் பரிசும், கிழக்கு ரயில்வேக்கு இரண்டாவது பரிசும், வடகிழக்கு மற்றும் தெற்கு மத்திய ரயில்வேக்கு சிறப்பாக செயல்பட்டதற்கான சான்றிதழும் வழங்கப்பட்டது.

## வாழ்நாள் சாதனையாளர் விருது

- உலக பெண்கள் அமைப்பு சார்பில், தெற்கு ரயில்வே கூடைப்பந்து வீராங்கனை அனிதா பால்துரைக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய சாம்பியன்ஷிப்பில் 12 தங்கம் உள்பட 30 பதக்கங்களையும், சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டிகளில் 4 தங்கப் பதக்கங்களையும் 2 வெள்ளி பதக்கங்களையும் பெற்று கொடுத்துள்ளார்.

## காயகல்ப விருதுகள்

- இந்தியாவின் பொது சுகாதார மையங்களில் சுகாதாரத்தையும் தூய்மையையும் உறுதி செய்வதற்காக கடந்த 2015 மே 15 ஆம் தேதி காயகல்ப் என்ற தேசிய முன்முயற்சியை இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.
- இதில் சிறந்த சுகாதாரம், உயர்த்தர வசதிகள், பொது மக்களுக்கு சிறந்த வசதி ஆகிய பிரிவில் எய்ம்ஸ் புவனேஸ்வர் மருத்துவமனை "காயகல்ப் விருது" வழங்கப்பட்டது.
- ரூ.2 கோடி பரிசு தொகையாக வழங்கப்பட்டது. மத்திய அரசின் சிறந்த மருத்துவமனை

என்ற B பிரிவின் கீழ் மூன்றாவது முறையாக புவனேஷ்வர் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

## 'தினமணி"–க்கு சி.பா. ஆதித்தனார் விருது

- "தினமணி" நாளிதழுக்கு "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது" வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழ் மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிற மொழி கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் நாளிதழ், வார இதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். இந்த விருது ஒவ்வொன்றுக்கும் விருது தொகையாக ரூ.1 லட்சம், கேடயம், பாராட்டுச் சான்றிதழ், பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என தமிழக சட்டப் பேரவையில் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் கடந்த 2019-ஆம் ஆண்டு ஜுலை மாதம் அறிவித்தார்.
- இதைத் தொடர்ந்து முதன் முதலாக 2020-ஆம் ஆண்டுக்கான "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது" தினமணிக்கு வழங்கப்படவுள்ளது.
- சி.பா.ஆதித்தனார் வார இதழ் விருது – "கல்கி" வார இதழ்
- சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது – "செந்தமிழ்" திங்களிதழ்
- தேவநேயப்பாவணர் விருது – முனைவர் கு.சிவமணிக்கும், வீரமாமுனிவர் விருது-ஹாங்காங்கைச் சேர்ந்த முனைவர் கிரிகோரி ஜேம்ஸுக்கும் வழங்கப்படும்.
- மதுரை, உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்: 2020-ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருது-பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க், இலக்கண விருது-இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசு, மொழியியல் விருது சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் சுப.திண்ணப்பன் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளன.

## திருவள்ளுவர் திருநாள்–சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகள் அறிவிப்பு

- தமிழக அரசின் சார்பில் திருவள்வுர் திருநாள் – சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- 2021-ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது - முனைவர் வைகைச் செல்வன்.
- 2020-ஆம் ஆண்டுக்கதன தந்தை பெரியார் விருது – அ.தமிமகன் உசேன்.
- அண்ணல் அம்பேத்கர் விருது – வரகூர் அ.அருணாச்சலம்.
- பேரறிஞர் அண்ணா விருது – அமரர் கடம்பூர் எம்.ஆர்.ஜனார்த்தனன்.
- பெருந்தலைவர் காமராஜர் விருது – முனைவர் ச.தேவராஜ்
- மகாகவி பாரதியார் விருது – கவிஞர் பூவை செங்குட்டுவன்.
- பாவேந்தர் பாரதிதாசன் விருது – கவிஞர் அறிவுமதி என்ற மதியழகன்
- தமிழ்த்தென்றர் திரு.வி.க. விருது – எழுத்தாளர் வி.என்.சாமி.
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது – முனைவர் வீ.சேதுராமலிங்கம்

**விருதுகள் பெறுவோர் விவரம்:**

- 2020 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருது – விஜிபி உலகத் தமிழ்ச்சங்கம்
- கபிலர் விருது – பேராசிரியர் செ.ஏழுமலை
- உ.வே.சா.விருது – எழுத்தாளர் கி.ராஜநாராயணன்
- சொல்லின் செல்வர் விருது - ஆன்மிகச் சொற்பொழிவாளர் நாகை முகுந்தன்
- உமறுப்புலவர் விருது – எழுத்தளர் ம.அ.சையத் அசன் என்ற பாரிதாசன்
- ஜி.யு.போப் விருது – ஜெர்மனியை சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் உல்ரீகே நிகோலசு
- இளங்கோவடிகள் விருது – பேராசிரியர் மா.வயித்தியலிங்கன்
- அம்மா இலக்கிய விருது – பேராசிரியர் தி. மகாலட்சுமி
- சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் விருது – எழுத்தாளர் ஆ.அழகேசன்
- மறைமலையடிகளார் விருது – மறை. மி.தாயுமானவன்
- அயோத்திதாசப் பண்டிதர் விருது – முனைவர் கோ.ப.செல்லம்மாள்

- அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் ஊரன் அடிகள்
- காரைக்கால் அம்மையார் விருது – முனைவர் மோ.ஞானப்பூங்கோதை

## ஸ்காட்ச் சேலஞ்சர் விருது

- இ-நிர்வாக செயல்பாட்டுக்காக பழங்குடியினர் விவாகர அமைச்சகத்துக்கு வழங்கப்பட்ட "ஸ்காச் சேலஞ்சர் விருதை" அத்துறையின் மத்திய அமைச்சர் திரு அர்ஜூன் முண்டாவுக்கு வழங்கப்பட்டது.
- பழங்குடியினர் விவாகரத்துறை அமைச்சகம் மாற்றங்களுக்கான பல நடவடிக்கைகளை சமீபத்தில் மேற்கொண்டது. காகித பயன்பாட்டை குறைக்கும் வகையில், அலுவலகத்தின் அனைத்து பணிகளும், டிஜிட்டல் மயமாக்கப்பட்டன.

## ஸ்கோச் (SKOCH) சேலஞ்சர் விருது

- 70வது ஸ்கோச் உச்சி மாநாட்டில் மத்திய பஞ்சாயத்து ராஜ் ஸ்கோச் சேலஞ்சர் விருதை வென்றுள்ளது.
- "ஆளுமையில் வெளிப்படைத்தன்மை" பிரிவின்கீழ் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு ஸ்கோச் சேலஞ்சர் விருது வென்றது.
- நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களில் ஐ.டி. தலைமையிலான முன்முயற்சிகள், மாற்றத்தக்க சீர்திருத்தங்கள் மற்றும் மின்-ஆளுமையை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக இந்த அமைச்சகம் இந்த விருதினை வென்றுள்ளது.

## 51வது சர்வதேச திரைப்பட விழா

- இந்தியாவின் 51வது சர்வதேச திரைப்பட விழா கோவா மாநிலம் பனாஜியில் தொடங்கியது. இந்த சர்வதேச திரைப்பட விழாவில் இந்த ஆண்டிற்கான, இந்திய ஆளுமை விருதுக்கு, இயக்குநரும் நடிகருமான பிஸ்வஜித் சாட்டர்ஜி தேர்வு செய்யப்பட்டுள்ளார்..
- பிஸ்வாஜித் சாட்டர்ஜி சாட்டர்ஜி பல. பெங்காலி படங்களில் நடித்து மிகப் பிரபலமாக அறியப்பட்டவர். மேலும் 51-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அசுரன் திரைப்படம் பனோராமா (Panorama) பிரிவில் இடம் பெற்றது.

## தெற்கு ரயில்வேக்கு "ஸ்கோச்" விருது

- கரோனா நோய்த்தொற்று காலத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக, தெற்கு ரயில்வேக்கு "ஸ்கோச்" (SKOCH) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவை சிறந்த தேசமாக மாற்றுவதில் பங்களிக்கும் நிறுவனங்கள், மக்களை கௌரவிக்கும் விதமாக, ஸ்கோச் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இந்த விருதுக்காக, சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள், விளக்கக்காட்சி ஆகியவை ஆய்வு செய்யப் படுகிறது. பல்வேறு மட்டங்களில் வெளிப்படை யான வாக்களிப்பு செயல்முறை ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல சரக்கு ரயில்கள் இயக்கியது. ரயில் பெட்டிகளை தனிவார்டுகளாக மாற்றியது. சானிடேசர், பாதுகாப்பு உடை, முகக்கவசம் தயாரிப்பு உள்பட பல்வேறு தகவல்களை ஆவணமாக பதிவு செய்து அனுப்பப்பட்டன. இந்த விவரங்களை விருதுக் குழுவினர் ஆய்வு செய்தனர். இதன் முடிவில், தெற்கு ரயில்வே ஸ்கோச் வெள்ளி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## உலக மனிதாபிமான விருது

- தானே மற்றும் கொங்கன் பிராந்தியத்தின் Philanthropist ரவி கெய்வத் (Ravi Gaiwad) என்பவர்க்கு "நெல்சன் மண்டேலா" உலக மனிதாபிமான விருது வழங்கப்பட்டது.
- இவர் செய்த மனிதாபிமான சேவைக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

## தங்க மயில் விருது

- 51-வது இந்திய சர்வதேச திரைப்படத் திருவிழாவின் உயரிய தங்க மயில் விருதை இரண்டாம் உலகப் போர் பற்றிய டேனிஷ் திரைப்படமான இன் டு தி டார்க்னஸ் வென்றுள்ளது. இந்த விருதுக்கான ரூ.40 லட்சம் ரொக்கப் பரிசை இந்தத் திரைப்படத்தின் இயக்குனர் ஆண்டர்ஸ் ரெஃபனும், தயாரிப்பாளர் லேனே போர்க்லும் சமமாக பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கு தலா ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

## வீரதீர செயலுக்கான அண்ணா விருது

- கொடைக்கானல் ரோடு-அம்பாத்துரை இடையே தண்டவாளத்தில் கிடந்த கற்பாறை களில் மோதாமல் துரிதமாக செயல்பட்டு வைகை விரைவு ரயிலை நிறுத்தி பயணிகளை காப்பாற்றிய மதுரை ரயில் ஓட்டுநர் சுரேஷ் வீரதீர செயலுக்கான அண்ணா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## 32 சிறார்களுக்கு ராஷ்ட்ரீய பால புரஸ்கார் விருது

- கல்வி, புத்தாக்கம், விளையாட்டு, கலை-காலாச்சாரம், சமூக சேவை, வீரதீரச் செயல்கள் ஆகிய பிரிவுகளில் சாதனைகள் நிகழ்த்தி வரும் தனித்திறமைகள் கொண்ட சிறார்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு ராஷ்ட்ரீய பால புரஸ்கார் விருதுகளை வழங்கி மத்திய அரசு கௌரவித்து வருகிறது. அதன்படி, 2021-ஆம் ஆண்டுக்கான ராஷ்ட்ரீய பால புரஸ்கார் விருது, 32 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 30 காவல் பதக்கங்களை சிபிஐ பெற்றுள்ளது

- சிபிஐ இந்த ஆண்டு சிறப்பு சேவைக்கான 30 ஜனாதிபதி பொலிஸ் பதக்கத்தையும், சிறப்பான சேவை விருதுகளுக்கான போலீஸ் பதக்கத்தையும் பெற்றுள்ளது.
- புகழ்பெற்ற சேவைக்கான ஜானதிபதியின் பொலிஸ் பதக்கங்கள் ஆறு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் 24க்கு பொலிஸ் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழக காவல் அதிகாரிகள் 20 பேருக்கு குடியரசுத் தலைவர் விருது

- தேசிய அளவில் தனிச் சிறப்புடன் பணியாற்றும் காவல் துறையினருக்கு சுதந்திர தினம், குடியரசு தினம் என ஆண்டுக்கு 2 முறை குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கப்படுகின்றன. காவல் துறைஅதிகாரிகளின் செயல்பாடு, சாதனைகள், நன்மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த நிலையில், குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு காவல் துறையை சேர்ந்த 20 பேருக்கு குடியரசுத் தலைவர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**தகைசால் பணி விருது**

- சென்னை காவல் ஆணையர் மகேஷ்குமார் அகர்வால், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், கோவைபுதூர் காவல் ஆய்வாளர் மணிகண்டகுமார் ஆகிய 3 பேருக்கு குடியரசுத் தலைவரின் தகைசால் பணிக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன.
- மீட்பு பணியில் உயிரிழந்த தீயணைப்பு வீரர் ராஜ்குமாருக்கு வீரதீர பதக்கம்

## 946 காவல் பணியாளர்கள் பதக்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்

- 2021 குடியரசு தினத்தை முன்னிட்டு மொத்தம் 946 காவல் துறையினருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- மொத்த விருது பெற்றவர்களினல் 207 காலன்ட்ரி மற்றும் 739 சேவை பதக்கம் வென்றவர்கள் உள்ளனர்.
- காலன்ட்ரி விருதுகளில், ஜார்கண்டின் ஏ.எஸ்.ஐ பானுவா ஓரான் மற்றும் சி.ஆர்.பி.எஃப் இன் ஏ.எஸ்.ஐ மோகன் லால் ஆகியோருக்கு இரண்டு ஜனாதிபதியின் காவல் பதக்கங்கள் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டுள்ளன.

## பத்மஸ்ரீ விருது

- சாலமன் பாப்பையா, சுப்பு ஆறுமுகம், டாக்டர் திருவேங்கடம் (மறைவு), சாந்தி கியர்ஸ் சுப்பிரமணியம் (மறைவு), பாம்பே ஜெயஸ்ரீ, பாப்பம்மாள், ஸ்ரீதர் வேம்பு.

## பத்ம விபூஷண் விருது

- எஸ்.பி.பாலசுப்பிரமணியம் (மறைவு), ஷின்சோ அபே, கே.எஸ்.சித்ரா, தருண் கோகோய் (மறைவு), ராம்விலாஸ் பாஸ்வான் (மறைவு), கேஷுபாய் படேல் (மறைவு), சுமித்ரா மகாஜன்

## தமிழக வீராங்கனை அனிதா உள்பட 7 பேருக்கு பத்மஸ்ரீ

- இந்திய மகளிர் கூடைப்பந்து அணியின் முன்னாள் கேப்டனும், தமிழகத்தைச் சேர்ந்த வருமான பி.அனிதா, டேபிள் டென்னிஸ் வீராங்கனை மௌமாதாஸ் உள்ளிட்ட 7 பேருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப் பட்டுள்ளது.
- பி.அனிதா: சென்னையைச் சேர்ந்த அனிதா தேசிய மகளிர் கூடைப்பந்து அணியில் 18 ஆண்டுகள் விளையாடியுள்ளார்.
- கேப்டனாகவும் இருந்த அவர், ஆசிய கூடைப்பந்து சம்மேளன சாம்பியன்ஷிப்பில் தொடர்ந்து 9 முறை பங்கேற்ற ஒரே, முதல் இந்திய வீராங்கனை.
- சுதா சிங்: 3,000 மீட்டர் ஸ்டீபிள்சேஸ் பந்தயத்தில் தேசிய சாதனையாளரான சுதா, 2012, 2016-ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ளார். ஆசிய விளையாட்டுப் போட்டிகள் உள்பட பலவற்றில் தங்கம் உள்ளிட்ட பதக்கங்கள் வென்றுள்ளார்.
- மாதவன் நம்பியார்: தடகள வீராங்கனை பி.டி.உஷாவுக்கு பயிற்சியாளராக இருந்த மாதவன், 1985-இல் துரோணாச்சார்யா விருது வென்றுள்ளார்.
- வீரேந்தர் சிங்: மல்யுத்த வீரரான வீரேந்தர், 1992 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் வெண்கலமும், 1995 காமன்வெல்த் போட்டியில் வெள்ளியும் வென்றுள்ளார்.
- கே.ஒய்.வெங்கடேஷ்: மாற்றுத்திறனாளி தடகள விரரான இவர், 2005-இல் உலக மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டியில் அதிக பதக்கங்கள் வென்றதற் காக "லிம்கா" சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.
- அன்ஷு ஜெம்சென்பா: மலையேற்ற வீராங்கனையான அன்ஷு ஒரே சீசனில் இரு முறை எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய உலகின் ஒரே வீராங்கனை.

## புல்வாமா தாக்குதலில் உயிரிழந்தவருக்கு குடியரசு தலைவரின் வீரதீர விருது

- புல்வாமா தாக்குதலுக்குக் காரணமான பயங்கரவாதியை துரத்திப் பிடிக்க முயன்று உயிரிழந்த மத்திய ரிசர்வ் காவல் படை (சிஆர்பிஎஃப்) வீரர் மோகன் லாலுக்கு வீரதீர செயலுக்கான குடியரசுத் தலைவரின் போலீஸ் விருது வழங்கப்படவுள்ளது.
- ஜார்கண்ட் காவல்துறையின் உதவி ஆய்வாளர் பனுவா ஓரோனுக்கும் வீரதீர செயலுக்கான குடியரசுத் தலைவரின் போலீஸ் விருது வழங்கப்படவுள்ளது.

## பழங்குடி இனத்தை சேர்ந்த கனகராஜுக்கு பத்மஸ்ரீ விருது

- மத்திய அரசு பத்ம விருதுகளை அறிவித்தது. இதில் தெலங்கானாவுக்கு ஒரே ஒரு விருது மட்டுமே கிடைத்துள்ளது.
- தெலங்கானா மாநிலம் குமரம்பீம் அசிஃபாபாத் மாவட்டத்தில் பழங்குடி இனத்தை சேர்ந்த கனகராஜுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இவர், மயில் இறகுகளை கட்டிக்கொண்டு ஆடும் குஸ்ஸாடி எனும் பழங்குடியின நடனத்தில் புகழ் பெற்றவர்.
- கடந்த 1981-ம் ஆண்டு டெல்லியில் நடந்த குடியரசு தின விழாவில் குஸ்ஸாடி நடனம் ஆடியுள்ளார்.
- நூற்றுக்கணக்கான குஸ்ஸாடி நடன கலைஞர்களை உருவாக்கி உள்ளார்.

## காரைக்கால் கே.கேசவசாமிக்கு பத்மஸ்ரீ விருது

- புதுச்சேரி யூனியன் பிரதேசம், காரைக்காலைச் சேர்ந்த பொம்மலாட்டக் கலைஞர் கே.கேசவசாமிக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப் பட்டுள்ளது.
- பள்ளியில் மாணவர்களிடம் கற்றல் திறனை அதிகரிக்க பொம்மலாட்டக் கலை மூலம் பாடங்களை நடத்தினார்.

## அரசுப் பள்ளி ஆசிரியைக்கு அண்ணா பதக்கம்

- வழக்கமாக குடியரசு தினத்தை ஒட்டி, அண்ணா பதக்கமும், வேளாண்மைத் துறையில் சிறந்து விளங்கியோருக்கும் விருதுகள் வழங்கப்படும்.
- ராணிப்பேட்டை மாவட்டம் புலிவலத்தைச் சேர்ந்த பா.முல்லை, ஓசூர் வனச்சரகத்துக்கு

உள்பட்ட கால்நடை உதவி மருத்துவர் எ.பிரகாஷ், மதுரை திருமங்கலம் ரயில் வண்டி ஓட்டுநர் ஜெ.சுரேஷ், நீலகிரி மாவட்டம் முல்லிமலை கண்டியைச் சேர்ந்த ஆர்.புகழேந்திரன் ஆகியோருக்கு வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் வழங்கப்பட்டன.

- விவசாயிகளுக்கான விருதுகள்: மத நல்லிணக்கத்தைப் போற்றிப் பாதுகாப்பு வருவோருக்கு "கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்" வழங்கப்படுகிறது. அதன்படி, நிகழாண்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.அப்துல் ஜப்பாருக்கு விருது அளிக்கப்பட்டது.
- திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கான சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது, விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த க.செல்வகுமாருக்கு வழங்கப்பட்டது.
- உழவர் உற்பத்தியாளர் குழு விருதுகள்: 500 முதல் ஆயிரம் விவசாயிகளை ஒருங்கிணைத்த உருவாக்கப்படும் அமைப்பே உழவர் உற்பத்தியாளர் குழுமம், அதன்படி, ஆளுமையில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் குழுமங்களுக்கான விருதுகள் வரிசையில், ஈரோடு துல்லிய பண்ணைய உற்பத்தியாளர் குழுமம், வெள்ளியங்கிரி உழவன் உற்பத்தியாளர் குழுமம் ஆகியன சிறப்பான செயல்பாடுகளைக் கொண்டிருந்தன.
- சேலம் நகர காவல் நிலையம் முதலிடம்: சேலம் நகர காவல் நிலையமானது, முதலிடத்தைப் பிடித்து சிறந்த காவல் நிலையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான கோப்பையை முதல்வர் பழனிசாமி வழங்கினார்.

## 'பரம் விசிஷ்ட் சேவா" விருது

- இந்தியக் கடலோர காவல்படையின் இயக்குநர் ஜெனரல் நடராஜனுக்கு குடியரசு தலைவரின் உயரிய விருதான "பரம் விசிஷ்ட் சேவா"விருது வழங்கப்பட்டு உள்ளது.
- கடலோர காவல்படையின் இயக்குநர் ஒருவர் இவ்விருது பெறுவது இதுவே முதல் முறை.
- பொதுவாக, ராணுவம், விமானம் மற்றும் கடற்படையைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்படுகிறது.
- இந்நிலையில், முதன்முறையாக இந்தியக் கடலோர காவல் படையின் இயக்குநர் ஜெனரல் கே.நடராஜனுக்கு குடியரசு தலைவரின் உயரிய விருதான "பாம் விசிஷ்ட் சேவா" விருது வழங்கப்பட்டு உள்ளது.

## சிறந்த பெண் தலைவருக்கான விருது

- ரெப்கோ வங்கியின் நிர்வாக இயக்குநர் ஆர்.எஸ்.இஸபெல்லாவுக்கு சிறந்த பெண் தலைவருக்கான விருது கிடைத்துள்ளது.
- தேசிய கூட்டுறவு வங்கிகளின் உச்சி மாநாடு ஜனவரி 22 மற்றும் 23-ஆம் தேதிகளில் நடைபெற்றது.
- இதில், ரெப்கோ வங்கிக்கு மூன்று பிரிவுகளின் கீழ் விருது வழங்கப்பட்டது.

## உத்தரபிரேதேசம் சிறந்த அட்டவணை விருது வென்றது (Best Tableau Award)

- குடியரசுத் தின விழாவில் 17 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், ஒன்பது வெவ்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் இராணுவ அமைப்பு மற்றும் ஆறு பாதுகாப்பு அமைப்புகள் பங்கேற்றன. இதில் சிறந்த அட்டவணை (32) வழங்கியதற்காக உத்தரபிரதேசத்திற்கு விருது வழங்கப்பட்டது.
- உத்தரபிரதேச அட்டவணை *Ayodhya: Cultural Heritage of Uttar Pradesh* என்ற மையக்கருத்து அடிப்படையில் அட்டவணை உருவாக்கப்பட்டது.
- இரண்டாவது மற்றும் மூன்றாவது விருது திரிபுரா மற்றும் உத்தரகாண்ட் மாநிலத்திற்கு வழங்கப்பட்டது.

## "Alert Being Icon Award"

- ஆஸ்கர் விருது வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் அவர்களுக்கு *'Alert Being Icon Award'* வழங்கப்பட்டது. இவ்விருது *Bicon Foundation* அமைப்பு வழங்கியது. பயோகான் நிறுவனத்தின் தலைவர் கிரைன் மஜீம்கார் ஷா வழங்கினார்.
- மேலும் மாற்றுத்திறனாளி, விதவைகள், பெண்கள் போன்ற பொருளாதார ரீதியாக

பின்தங்கியவர்களுக்கு உதவி, கர்ப்பிணி பெண்களுக்கு சத்தான உணவு (350) வழங்கியதற்காகவும் லியோ ஆகாஷ் ராஜ் என்பவர்க்கு இவ்விருது வழங்கப்பட்டது.

### கனடா இந்திய எழுத்தாளர் கில்டிக்கு சாகித்ய கௌரவ் சம்மன்

- கனடாவின் இந்தி எழுத்தாளர் கில்டிக்கு சாகித்ய கௌரவ் சம்மன் வழங்கி கௌரவித்தார் மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் போக்ரியால் நிகாஷ் கில்டியின் இலக்கிய பணிக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

### ஆஸ்கர் போட்டியில் "சூரரைப் போற்று"

- ஆஸ்கர் விருதுக்கான பொதுப் பிரிவு போட்டியில், "சூரரைப் போற்று" திரைப்படம் இடம் பெற்றுள்ளது.
- நிக்கத் பொம்மிரெட்டி ஒளிப்பதிவு செய்திருந்தார்.
- மேலும், கடந்த ஆண்டு ஓடிடி தளத்தில் வெளியான படங்களில் அதிகம் பேரால் பார்க்கப்பட்ட தமிழ்ப் படம் என்ற அபார சாதனையைப் படைத்தது "சூரரைப் போற்று".

## 1.8 கலாச்சாரம்

### 96வது தான்சேன் இசை விழா

- புகழ்பெற்ற தான்சேன் இசை விழாவின் 96வது பதிப்பு மத்திய பிரதேசத்தின் குவாலியர் பகுதியில் தொடங்கியது.
- இந்த விழா 1924 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படும் வருடாந்திர நிகழ்வாகும்.
- பண்டித் சதிஸ் வியாஸ் என்பவருக்கு தான்சேன் சம்மன் வழங்கப்பட்டது. மேலும் போபலை சேர்ந்த அபினவ் கலா பரிஷித் என்பவருக்கு ராஜா மன்சிங் தோமர் விருது வழங்கப்பட்டது.
- 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற இசைகலைஞர் மற்றும் பாடகர் ஆவார். அக்பரின் அவையில் 9 ரத்தினங்களில் இவரும் ஒருவர் ஆவார்.

### விழுப்புரம் அருகே சங்ககால உறைகிணறு

- விழுப்புரம் அருகே வேடம்பட்டியில் ஏரியில் மண் அள்ளப்பட்ட பகுதியில் சங்ககால உறைகிணறு கண்டறியப்பட்டது.
- இதேபோல, விழுப்புரம் அருகே விராட்டிக்குப்பம், ஆலாத்தூர், நன்னாடு, பெரும்பாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் புதிய கற்காலம் தொடங்கி பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த வரலாற்றுத் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அந்த வகையில், வேடம்பட்டும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

### செரி பூக்கள் திருவிழா

- மணிப்பூர் மாநிலத்தின் சேனாபதி மாவட்டத்தில் செரி பூக்கள் திருவிழா (Cherry Blossom Mao) கொண்டாடப்படுகிறது.
- Mao பகுதி சேனபதி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த பூ வகைகள் ஜப்பான் நாட்டின் "சக்குரா" என்ற பெயரில் பிரபலமாக அறியப்படுகிறது.

## 12 தமிழ் இலக்கியங்களை இந்தி உட்பட 10 மொழிகளில் வெளியிடுகிறது

- முன்னாள் முதல்வர் கருணாநிதியின் முயற்சியால் தொடங்கப்பட்ட மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் உருவாக்கப்பட்டது.
- கடந்த 2020ல் பேராசிரியர் இரா.சந்திரசேகரன் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- இந்தச் சூழலில் அந்த நிறுவனத்தில் இந்தி, தெலுங்கு உட்பட 10 மொழிகளில்திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட 12 தமிழ்இலக்கியங்களின் பதிப்புகளும் வெளிவர உள்ளன.

## கனுமா பொங்கல் பண்டிகை

- தெலுங்கானா பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டை போலவே கொண்டாடப்படுகிறது.
- இரண்டாவது நாள் மகர சங்கராந்தி என்ற பெயரில் பொங்கல் வைத்து கொண்டாடுகின்றனர். மூன்றாவது நாள் கனுமா என்று அழைக்கப்படுகிறது.
- இந்நாளில் கால்நடைகளுக்கு உணவளித்து கொண்டாடப்படுகிறது. நான்காவது நாள் வீர விளையாட்டுகளை விளையாடுகின்றனர். இந்நாளின் பெயர் முக்கனுமா.

## கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் பகுதிகளில் அகழாய்வுப் பணி

- சிவகங்கை மாவட்டம், கீழடி, மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய பகுதிகளில் வரும் பிப்ரவரி முதல் வாரத்தில் 7-ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட உள்ளதாக தமிழக தொல்லியல் துறை துணை இக்குநரகம் தெரிவித்துள்ளது.
- இந்நிலையில், கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கை கொண்ட சோழபுரம்-மளிகைமேடு ஆகிய பகுதிகளில் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ள மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியநிலைக் குழு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

## பண்டைய கால தானிய கிடங்கு அழிவின் விளிம்பில் உள்ளது

- விழுப்புரம் மாவட்டம் ஆதி திருவரங்கத்தில் உள்ள ரங்கநாத சுவாமி கோவிலில் உள்ள தானியகளஞ்சியம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- தமிழ்நாட்டின் கோவில்களில் உள்ள ஒரு சில தானியக் களஞ்சியங்களில் இதுவும் ஒன்று.
- மற்றஇடங்களில்உள்ளதானியகளஞ்சியங்கள் ஸ்ரீரங்கம் கோவில், திருவனைக்காவில் உள்ள ஜம்முகேஷ்ஹம் கோவில், தஞ்சாவூர் மாவட்டத்தின் திருப்பாலைவளத்தில் உள்ள பகலவநாத கோவில் ஆகியவை சமீபத்தில் மீட்கப்பட்டன.
- கோவில் தொட்டிகளை புதுப்பிக்க விஜயநகர மன்னர்கள் வழங்கிய மானியங்கள் பற்றிய குறிப்பும், ஊழியர்களுக்கு வழங்கிய நிலங்கள் பற்றிய குறிப்பும் கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த ரங்கநாத சுவாமி கோவில் உள்ள தானிய களஞ்சியம் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டது.

## பல்லவர் கால சிலை கண்டெடுப்பு

- காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அருகே பல்லவர் கால சிலை கண்டெடுக்கப்பட்டது.
- உத்திரமேரூரில் உள்ள குழம்பேஸ்வரர் கோயிலில் 565 கிராம் எடையுள்ள தங்கப் புதையல் கண்டெடுக்கப்பட்டது.
- இது பல்லவர் காலத்தைச் சேர்ந்த மூத்ததேவி என்ற ஜேஷ்டா தேவி சிலை என்று தெரிவித்தனர்.

# 1.9 நியமனங்கள்

## மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவராக நீதிபதி எஸ்.பாஸ்கரன் பொறுப்பேற்பு

- மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவராக சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ்.பாஸ்கரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.
- தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையச் சட்டப்படி, முதல்வர், சபாநாயகர், உள்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அடங்கிய குழு, மனித உரிமை ஆணையத் தலைவர் பதவிக்குத் தகுதியானவர்களைப் பரிந்துரைக்க வேண்டும்.

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு

- சென்னை உயர்நீதிமன்ற 50-ஆவது தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள சஞ்சீவ் பானர்ஜி பதவியேற்கிறார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் 49-ஆவது தலைமை நீதிபதியாக இருந்த ஏ.பி.சாஹி ஓய்வு பெற்றார். இதற்கான உத்தரவை குடியரசுத் தலைவர் பிறப்பித்தார்.

## இந்தியா துணைத் தேர்தல் ஆணையராக உமேஷ் சின்ஹா நியமிக்கப்பட்டார்

- இந்திய தேர்தல் ஆணையத்தில் துணை தேர்தல் ஆணையராக உமேஷ் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஒப்பந்த அடிப்படையில் தணைத் தேர்தல் ஆணையராக சின்ஹாவை மீண்டும் பணியமர்த்துவதற்கான கால நீட்டிப்புக்கு அமைச்சரவையின் தேர்தல் ஆணையத்தின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2021 ஜுன் 30 வரை அவரது பதவி காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**தேர்தல் ஆணையம் பற்றி:**

- இந்திய தேர்தல் ஆணையர் : சுனில் ஆரோரா
- உருவாக்கப்பட்டது : 25 ஜனவரி 1950.
- விதி : 324

## தெலுங்கானா உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நிதிபதியாக நியமனம்

- தெலுங்கானா உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி ஹிமா கோஹ்லி நியமிக்கப்பட்டுள்ளார்.
- தெலுங்கானா கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தராஜன் அவருக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார்.
- டெல்லி மாநில சட்ட சேவைகள் ஆணையத்தின் நிர்வாகத் தலைவராக ஹிமா கோலி பணியாற்றி உள்ளார்.

## அமெரிக்கா வாழ் தமிழர் ராஜ் ஐயர் அமெரிக்கா ராணுவ தலைமை தகவல் அதிகாரி ஆகிறார்

- அமெரிக்க வாழ் தமிழரான ராஜ் ஐயர் ராணுவ மிக உயரிய பதவியான தலைமை தகவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க அரசு இவரை ராணுவத்தின் மிக உயரிய பதவியான தலைமை தகவல் அதிகாரியாக நியமித்துள்ளது.
- இந்த பதவி 3 நட்சத்திர தளபதி பதவிக்கு ஒப்பானதாகும். இவருக்குக் கீழே 15000 வீரர்கள் உலகெங்கும் உள்ள 100 நாடுகளில் பணியாற்ற உள்ளனர்.
- இவர் 1600 கோடி டாலர் மதிப்பிலான ராணுவ தளவாட கொள்முதலை மேற்பார்வை செய்ய உள்ளார்.

## ஐ.நா. உரிமைகள் அமைப்பின் தலைவராக நஷாத் ஷமீம் கான் நியமனம்

- ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பிஜியின் நாட்டின் தூதர் நஷாத் ஷமீத் கான் 2021ஆம் ஆண்டிற்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 47 வாக்குகளில் 29 வாக்குகளைப் பெற்று புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அவர் ஆஸ்திரேலிய வழக்கறிஞர் எலிசபெத் டிக்சி-பிஸ்ல்பெர்கருக்கு பதில் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## முதல் பெண்: அமெரிக்க அதிபர் அலுவலக டிஜிட்டல் இயக்குநர்

- அமெரிக்காவின் 46-வது ஜனாதிபதியாக ஜோ பைடன் ஜனவரி 20-ஆம் தேதி பதவியேற்றார். மேலும் இந்திய-அமெரிக்கரான கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாக பதவியேற்றார்.
- அமெரிக்க வரலாற்றிலேயே கமலா ஹாரிஸ் தான் துணை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கும் முதல் பெண்மணி ஆவார்.
- அது மட்டுமின்றி ஜோ பைடன் தனது நிர்வாகத்தில் முக்கிய பதவிகளுக்கு 13 பெண்கள்உட்பட20 இந்திய-அமெரிக்கர்களை நியமித்துள்ளார்.
- இதில் கரிமா வர்மா முதல் பெண் அலுவலக டிஜிட்டல் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

## குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையராக சரஸ்வதி ரங்கசாமி நியமனம்

- தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவராக சரஸ்வதி ரங்கசாமி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**போக்சோ சட்டத்தை கண்காணிக்கும்**

- தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் கடந்த 2013-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இலவச கட்டாயக் கல்வி உரிமை சட்டம் மற்றும் போக்சோ சட்டத்தை அமல்படுத்துவதை கண்காணிக்கும் பொறுப்பு ஆணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. உயர்நிலை பொருளாதார ஆலோசனைக் குழுவில் ஜெயதி கோஷ்

- ஐ.நா. அமைப்பின் உயர்நிலை சமூக, பொருளாதார ஆலோசனைக் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் ஜெயதி கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவர் தவிர 19 சர்வதேச பொருளாதார நிபுணர்களும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.
- கரோனாவுக்கு பிறகு ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார சவால்கள், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சூழல் உள்ளிட்டவை குறித்தும், அவற்றை சமாளிப்பது குறித்தும் ஐ.நா. பொது சபைக்கு இக்குழுவினர் ஆலோசனை வழங்க இருக்கின்றனர்.
- கடந்த ஆண்டு தில்லியில் நடைபெற்ற வன்முறை தொடர்பான போலீஸாரின் துணை குற்றப்பத்திரிகையில் ஜெயதி கோஷின் பெயர் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மஹாவீர் சக்ரா விருது

- கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் சீன ராணுவத்தினருடனான மோதலில் உயிர் தியாகம் செய்த ராணுவ அதிகாரி சந்தோஷ் பாபுவுக்கு, போரில் வீரதீர செயல் புரிந்ததற்கான இரண்டாவது உயரிய விருதான "மஹாவீர் சக்ரா" விருது வழங்கப்பட இருக்கிறது. போரில் வீரதீர செயல் புரிந்ததற்காக அளிக்கப்படும் இந்த உயரிய விருது, முதன் முறையாக போர் அல்லாத மோதல் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு அளிக்கப்படுகிறது.

## ஆயுஷ்மான் பாரத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரி

- ஆயுஷ்மான் பாரத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக R.S.ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார். ஆயுஷ்மான் பாரத் திட்டம் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா எனவும் அழைக்கப்படுகிறது.

**ஆயுஷ்மான் பாரத் திட்டம்**

- கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பிரதமர் மோடி ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்தினார். உலகின் மிகப்பெரிய அரசு சுகாதார காப்பீடு திட்டமாக கருதப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் தரமான சிகிச்சையை ஏழைகள் இலவசமாக பெற முடியும்.

## ஆயுஷ் அமைச்சின் கூடுதல் பொறுப்பு கீரன் ரிஜிஜு

- இளைஞர்விவகாரங்கள்மற்றும்விளையாட்டு அமைச்சர் கிரென் ரிஜிஜுக்கு ஆயுஷ் அமைச்சகத்தின் பொறுப்பு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### கிசான் பசல் ரகத் யோஜனா ஜார்கண்ட் மாநில அரசு

- பிரதம மந்தரி பசல் பீமா யோஜனா (பிரதம மந்திரியின் பயிர்காப்பீட்டுத் திட்டம்) திட்டத்துக்கு மாற்றாக ஜார்கண்ட் அரசு, கிசான் பசல் ரகத் யோனா என்ற பெயரில் புதிய திட்டத்தை மாநில அரசு கொண்டுவந்துள்ளது.
- தற்போது நடைமுறையிலுள்ள தேசிய விவசாய காப்பீட்டுத் திட்டத்தையும், மாற்றம் செய்யப்பட்ட அதன் இன்னொரு வடிவத் தையும் நீக்கிவிட்டு இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.
- இந்த திட்டம் 2020ம் ஆண்டு டிசம்பர் 29ந் தேதி வெளியிடப்பட்டு உள்ளது.
- இந்த திட்டம் நிலமுள்ள மற்றும் நிலமற்ற விவசாயிகள் அனைவருக்கும் பொருந்தும். மேலும் இந்த திட்டமானது மாநில விவசாய அமைச்சகத்தின் கீழ் செயல்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### "பிரயாஸ்" திட்டம்

- மத்திய அரசு 'பிரயாஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம் 1995-ல் உறுப்பினர்களாக உள்ள ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

### 'கிசான் கல்யாண் திட்டம்"

- உத்தரபிரதேச மாநில அரசு கிசான் கல்யாண் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

### 3ம் கட்ட பிரதமரின் திறன் இந்தியா திட்டம் தொடக்கம்

- மூன்றாம் கட்ட பிரதமரின் திறன் இந்தியா திட்டம், நாடு முழுவதும் 600 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.
- மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகத்தின் தலைமையில் இந்த 3வது கட்டம், புதிய மற்றும் கோவிட் தொடர்பான தொழில் திறன்களில் கவனம் செலுத்தப்படுகிறது.
- "திறன் இந்தியா திட்டத்தை" பிரதமர் திரு நரேந்திர மோடி 2015ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி தொடங்கி வைத்தார். இந்தியாவை உலகின் திறன் தலைநகராக ஆக்கும் தொலைநோக்கை எட்டுவதற்காகத் தொடங்கப்பட்ட பிரதமரின் திறன் இந்தியா திட்டம் அதி வேகத்தை அடைந்துள்ளது.

### வீடு கட்டும் திட்டம்

- மத்திய அரசின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், உத்தரபிரதேச பயனாளிகளுக்கு ரூ.2,691 கோடி உதவித் தொகையை பிரதமர் மோடி விடுவித்தார்.
- கடந்த 2016-ஆம் ஆண்டு பிரதமரின் கிராமப்புற வீடு கட்டும் திட்டம் (பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-கிராமீண்) அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், சமவெளி பகுதிகளில் வீடு கட்ட மத்திய அரசு சார்பில் ரூ.1.20 லட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. மலைப் பிரதேசங்கள், வடகிழக்கு மாநிலங்கள், ஜம்மு-காஷ்மீர், லடாக், நக்ஸல்களால் பாதிக்கப்பட்ட

பகுதிகளில் வீடு கட்டுவதற்கு ரூ.1.30 லட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

- இந்த திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் இதுவரை 1.26 கோடி வீடுகள் கட்டப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### 'PANKH Abhiyan'

- மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தேசிய பெண் குழந்தைகள் தினம் (ஜனவரி 24) முன்னிட்டு 'PANKH Abhiyan' என்ற திட்டத்ததை அறிமுகப்படுத்தினார்.
- 'பேட்டி பசோ பேட்டி பதோ' என்ற திட்டத்தின் கீழ் 'PANKH Abhiyan' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளின் அதிகாரம் மற்றும் வளர்ச்சி ஆகியவை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.
- PANKH என்பது
  - 'P' – பாதுகாப்பு (protection)
  - 'A' – அவர்களின் உரிமை பற்றிய விழிப் புணர்வு (awareness of their rights)
  - 'N' – ஊட்டச்சத்து (nutrition)
  - 'K' – அறிவு (knowledge)
  - 'H' – சுகாதாரம் (health)

### மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்

- மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் அதிக பயன் கிடைக்கும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளதால், அதில் சேர்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2.50 லட்சம் பயனாளிகளுடன் நாட்டிலேயே 2-ம் இடத்தில் தமிழகம் உள்ளது.
- ஓய்வு காலத்தில் மூத்த குடிமக்கள் பொருளாதார ரீதியாக பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக, மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது.
- மத்திய அரசு கடந்த 2004-ல் தொடங்கிய மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டத்தை கடந்த ஆண்டு சீரமைத்து புதிய விதிகளை வகுத்துள்ளது. அஞ்சலகம், வங்கிகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் 60 வயது நிறைவடைந்தவர்கள் சேமிப்பு கணக்கு தொடங்கலாம். குறைந்தபட்ச வைப்புத் தொகையாக ரூ.1,000 முதல் அதிகபட்சம் ரூ.15 லட்சம் வரை டெபாசிட் செய்யலாம்.

### 'லைஃப் மிஷன் திட்டம்"

- கேரளா முதல்வர் பினராயி விஜயன் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் "லைஃப் மிஷன்" திட்டத்தை கடந்த 2020ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். இதையடுத்து 2.5 லட்சம் வீடுகள் "லைஃப் திட்டம்" கீழ் கட்டி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம்

- பிரதமரின் ஜன ஆரோக்கியா திட்டம் சுகாதாரத் துறையில் கடந்த இரண்டு ஆண்டு நல்ல பலன்களை ஏற்படுத்தி உள்ளதாக பொருளதார கணக்கெடுப்பு 2020-21ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பயனாளிகளின் எண்ணிக்கை 54% அதிகரித்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கியா திட்டம் கடந்த 2018 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட மிகப்பெரிய சுகாதாரத் திட்டம்.

## 2.2 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

### புதிய நாடாளுமன்றம் கட்ட உச்ச நீதிமன்றம் அனுமதி

- புதிய நாடாளுமன்ற வளாக கட்டிட பணியை மேற்கொள்ள உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. தற்போதைய நாடாளுமன்றம் 93 ஆண்டுகள் பழமையானது. இடநெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளை கருத்தில் கொண்டு புதிய நாடாளுமன்ற வளாகம் (சென்ட்ரல் விஸ்டா) கட்ட மத்திய அரசு முடிவு செய்தது.
- இதனிடையே புதிய நாடாளுமன்ற வளாகம் சுற்றுச்சூழல், நில வகைப்பாடு விதிகளை மீறி கட்டப்படுவதாக குற்றம்சாட்டி உச்ச நீதி மன்றத்தில் 10 வழக்குகள் தொடரப்பட்டன.
- இந்த வழக்குகளை நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, சஞ்சீவ் கண்ணா அமர்வு விசாரித்தது.

**2022-ல் புதிய நாடாளுமன்றம்**

- 2022-ல் நாட்டின் 75-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது புதிய நாடாளுமன்றம் தயாராகிவிடும்.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### ஆசியா பாதுகாக்கப்பட்ட பகுதிகள் கூட்டாண்மையின் இணை உறுப்பினராக இந்தியா

- ஆசியா பாதுகாக்கப்பட்ட பகுதிகள் கூட்டாண்மையின் இணை உறுப்பினராக இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியா வரும் நவம்பர் 2023 ஆம் ஆண்டு வரை பதவியில் இருப்பார்.
- ஆசியா பாதுகாக்கப்பட்ட பகுதியின் கூட்டாண்மை (APAP) இயற்கை சர்வதேச ஒன்றியத்திற்கு (IUCN) தலைமை தாங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுகள் தென் கொரியா இதற்கு தலைமை தாங்கியது.
- ஆசியாவில் உள்ள நாடுகளுக்கு இந்தியா பாதுகாப்பு அளிக்கும்.

### பறவைக் காய்ச்சல்

- ராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்தைத் தொடர்ந்து கேரள மாநிலத்திலும் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

**பேரிடராக அறிவித்தது கேரள அரசு**

- கேரளாவில் ஆலப்புழா மாவட்டம் குட்டநாடு மற்றும் கோட்டயம் மாவட்டத்தில் நீண்டூர் உள்ளிட்ட சில பகுதிகளில் பறவைக் காய்ச்சல் தாக்கியது. இந்நிலையில், பறவைக் காய்ச்சலை பேரிடராக கேரள அரசு அறிவித்துள்ளது.

### சென்னையில் 100 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனவரியில் கனமழை

- சென்னையில் ஜனவரியில் 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெய்துள்ளதாக தனியார் வானிலை தெரிவித்துள்ளது.
- “தமிழ்நாடு வெதர்மேன்“ என்ற பெயரில் வானிலை குறித்த பதிவுகளை சமூக வலைதளங்களில் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.
- கடந்த 1915-ஆம் ஆண்டுக்கு பிறகு, முதன்முதலாக சென்னை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில், ஜனவரி மாதத்தில் தற்போதுதான் அதிக மழை பெய்துள்ளது.

### 1901–லிருந்து 8வது வெப்பமான ஆண்டு 2020: இந்திய வானிலை தகவல் மையம் எச்சரிக்கை

- 1901-ம் ஆண்டிலிருந்து 8-வது வெப்பமான ஆண்டாக2020அமைந்திருக்கிறது. ஆனால், 2016-ம் ஆண்டோடு ஒப்பிடும்போது குறைவுதான் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.
- "1901-ம் ஆண்டிலிருந்து 8-வது வெப்பமான ஆண்டாக 2020-ம் ஆண்டு அமைந்திருக்கிறது. 2006-ம் ஆண்டிலிருந்து 2020-ம் ஆண்டுக்கு இடையே 12 ஆண்டுகள் அதிகமான வெப்பம் இருந்தது.
- 1901 முதல்2020-ம்ஆண்டுவரைஅதாவது100 ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுதோறும் 0.62 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரித்து வருகிறது. இதில் அதிகபட்சமாக 0.99 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரித்துள்ளது. குறைந்தபட்சமாக அதிகரித்த வகையில் 0.24 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளது.
- 2020-ம் ஆண்டில் 0.29 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரித்துள்ளது.

## பறவை திருவிழா "கல்ராவ்"

- பீகாரின் முதல் மாநில அளவிலான பறவை திருவிழா "கல்ராவ்" ஜனவரி 15 முதல் ஜமுய் மாவட்டத்தில் உள்ள உலக புகழ்பெற்ற நாகி-நக்தி பறவைகள் சரணாலயத்தில் நடைபெற்றது.

## பருவநிலை மாற்றத்தால் தென்னிந்தியாவில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் ஆய்வில் தகவல்

- பருவநிலை மாற்றங்களால் வெப்ப மண்டல மழைப் பகுதிகளில் சீரற்ற மாற்றங்கள் உருவாகும் என்றும் இதன் காரணமாக பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள இந்திய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு உருவாகும் என்றும் கலிஃபோர்னியா பல்கலைக்கழக ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- இயற்கை காலநிலை மாற்றம் என்ற ஆய்விதழ் வெளியிட்டுள்ளது. பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டு அளவு இந்த நூற்றாண்டின் இறுதி வரை உயர்ந்து கொண்டே சென்றால், அது வெப்ப மண்டல மழைப்பொழிவு பகுதிகளில் எந்த வகையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று 27 விதமான காலநிலை மாதிரிகளைக் கொண்டு ஆண்டு நடத்தப்பட்டது.
- அந்த ஆய்வின்படி, வெப்ப மண்டல மழைப் பொழிவு பகுதிகள் வடக்கு நோக்கி கிழக்கு ஆப்பிரிக்கா, இந்திய பெருங்கடலின் மீது நகர்வதால் தென்னிந்தியாவில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்படும்.
- மேலும் இது வரும் 2100-ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய பல்லுயிர் பெருக்கத்திலும் உணவுப் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

## கோரேவாடா சர்வதேச உயிரியல் பூங்காவின் பெயர் மாற்றம்

- மகாராஷ்டிராவின் நாக்பூரில் அமைந்துள்ள கோரேவாடா சர்வதேச உயிரியல் பூங்காவின் பெயர் பால் தாக்கர் கோரேவாடா சர்வதேச உயிரியல் பூங்கா என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பூங்கா 2000 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.

## சுந்தரவனப் பகுதியில் 428 பறவை இனங்கள் வாழ்கின்றன என ஆய்வில் தகவல்

- சுந்தர வன பகுதியில் 428 பறவை இனங்கள் வாழ்கின்றன என உயிரியல் இந்திய ஆய்வில் (Zoological; Survey of India) தெரிவித்துள்ளது. சுந்தர வன பகுதி உலகின் மிகப்பெரிய மாங்குரோவ் காடுகளை கொண்டுள்ளது.
- சமீபத்தில் 'Birds of the, Sundarban Biosphere Reserve' என்ற பெயரிலான அறிக்கையை உயிரியல் இந்திய ஆய்வு (ZSI) வெளியிட்டுள்ளது.
- இந்த சுந்தரவனம் 4200 ச.து.கிமீ பரப்பளவை உடையது. இதில் 2585 ச.து.கி.மீ புலிகள் காப்பகம் உள்ளடக்கியது. இங்கு 96 ராயல் வங்காள புலிகள் வாழ்கின்றன.
- ராம்சார் இடங்கள் மற்றும் உலக பாரம்பரிய இடங்கள் ஆகிய பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- இந்தியாவில் 1300க்கு மேற்பட்ட பறவைகள் மற்றும் 428 வகையான பறவைகள் சுந்தரவனம் காணப்படுகிறது. அதாவது நாட்டில் சுற்றுச்சூழல் அமைப்பில் மூன்றில் ஒரு பறவை கண்டுபிடிக்கப்படுகின்றன.

## இந்தோனேசியா எரிமலையான மவுண்ட் மெராபி வெடித்தது

- இந்தோனேசியாவின் மிக ஆக்டிவ் எரிமலையான மவுண்ட் மெராபி (2,968-m) வெடிக்கத் தொடங்கியுள்ளது.
- இதற்கு முன் 2010ஆம் ஆண்டில் மவுண்ட் மெராபி வெடித்தது. இதில் மிக செயல்படும் எரிமலையாக மெராபி அவ்வப்போது வெடித்து வருகிறது.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### ஜி.எஸ்.டி வசூல் ரூ.1.15 லட்சம் கோடியாக உயர்வு

- சரக்கு மற்றும் சேவை வரி கடந்த டிசம்பர் மாதத்தில் ரூ.1.15 லட்சம் கோடியை எட்டியுள்ளது. ஜிஎஸ்டி அறிமுகம் செய்யப் பட்டதில் இருந்து இதுவரையில் இல்லாத அதிகபட்ச வசூலாக இது பதிவாகியுள்ளது.

### ரூ.70 ஆயிரம் கோடி பொருளாதார நஷ்டம் தொழில் கூட்டமைப்பு தகவல்

- புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் தலைநகர் டெல்லியில் நடத்தி வரும் போராட்டம் காரணமாக மூன்றாம் காலாண்டில் ரூ.70 ஆயிரம் கோடி அளவுக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படும் என தெரிகிறது.
- உணவு பதப்படுத்துததல், ஜவுளித் தொழில், ஆட்டோ மொபைல், வேளாண் இயந்திர உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம், சுற்றுலா உள்ளிட்ட பல தொழில்கள் இந்த போராட்டம் காரணமாக முடங்கியுள்ளன.

### மேற்கு வங்காள மாநிலத்தின் நீர் வழிகளை மேம்படுத்த உலக வங்கி நிதியுதவி

- மேற்கு வங்காள மாநிலத்தின் நீர்வழிகளை மேம்படுத்த உலக வங்கி $105 மில்லியன் கடனாக வழங்கி உள்ளது.
- இதன் மூலம் கொல்கத்தாவை சுற்றியுள்ள பகுதிகளுக்கு தரமான வசதிகளை வழங்க உள்ளது.

### "2021–ல் உலகப் பொருளாதாரம் 4% அதிகரிக்கும்" – உலக வங்கி கணிப்பு

- கொரோனா பெருந்தொற்று காரணமாக பொருளாதார வளர்ச்சியும் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்த நிலையில், 2021-ல் உலகப் பொருளாதாரம் 4% அதிகரிக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது.
- கொரோனா தாக்கத்தால், பலர் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு இருப்பதாக உலக வங்கி கூறி உள்ளது. மேலும், வருமான பாதிப்பு பல நாட்களுக்கு தொடரும் என்றும் உலக வங்கி தெரிவித்து உள்ளது.

### 2020–21 நிதியாண்டில் பொருளதார வளர்ச்சி மைனஸ் 7.7% ஆக சரியும் என கணிப்பு

- நடப்பு நிதியாண்டில் இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சியானது மைனஸ் 7.7 சதவீதமாக சரியும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- முதல் காலண்டில் மைனஸ் 23.9 சதவீத சரிவைச் சந்தித்தது. இரண்டாம் காலாண்டில் சற்று மீண்டு வந்த ஜிடிபி மைனஸ் 7.5 சதவீதமாகப் பதிவானது.
- இந்நிலையில் நடப்பு நிதியாண்டுக்கான முதல் ஜிடிபி கணிப்பை அரசு வெளியிட்டுள்ளது. இதன்படி நடப்பு நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சியானது மைனஸ் 7.7 சதவீதம் சரிவை காணலாம் எனக் கூறியுள்ளது. 2019-20 நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சியானது 4.2 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 8.9% வளர்ச்சி காணும்"

- அடுத்த நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் சரிவிலிருந்து மீண்டு 8.9 சதவீத வளர்ச்சியைக் காணும் என ஐஹெச்எஸ் மார்கெட் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.
- வரும் மார்ச் மாதத்துடன் முடிவடையவுள்ள நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம்-7.7 சதவீதம் சரிவை சந்திக்கும் என தேசிய புள்ளியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத மிக மோசமான பின்னடைவாகும்.
- 2021 ஏப்ரலில் தொடங்கவுள்ள நிதியாண்டில் பொருளாதாரம் சரிவிலிருந்து மீண்டு 8.9 சதவீத வளர்ச்சியை தக்க வைக்கும் என ஐஹெச்எஸ் மார்கிட் தெரிவித்துள்ளது.

## இந்தியா ராணுவ அதிகாரிகளின் வங்கி கணக்குகள் வெளியிடு: பந்தன் வங்கி

- தனியார் வங்கி நிறுவனமான பந்தன் வங்கி கணக்குகளை இந்திய இராணுவத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதையடுத்து இந்திய இராணுவ வீரர்களுக்கு வங்கி சேவைகள் வழங்குகிறது.
- தற்போது இந்திய இராணுவ வீரர்களின் வங்கிகளை வெளியிட்டுள்ளது. Bank Shaurya Salary Account என்ற பெயரில் இயங்குகிறது.

## இந்தியாவின் 7வது வர்த்தகக் கொள்கை: உலக வர்த்தக நிறுவனம்

- இந்தியாவின் 7-வது வர்த்தகக் கொள்கை மீளாய்வு, ஜனவரி 6-ந் தேதியன்று உலக வர்த்தக நிறுவனத்தில் தொடங்கியது.
- உறுப்பு நாடுகளின் வர்த்தகக் கொள்கைகளை விரிவாக மீளாய்வு செய்வது என்பது உலக வர்த்தக நிறுவனத்தின் கண்காணிப்புப் பணியில் முக்கியமான முறையாகும்.
- இதற்கு முன்பு இந்தியாவின் வர்த்தகக் கொள்கை மீளாய்வு 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்திய வர்த்தகச் செயலர் டாக்டர் அனுப் வதவன் தலைமையிலான அலுவலகக் குழு இப்பணிக்காக அங்கு சென்றுள்ளது.

## 2020 ஆம் ஆண்டின் 500 சிறந்த நிறுவனங்கள்

- உலகளவில் 2020ஆம் ஆண்டின் சிறந்த 500 நிறுவனங்கள் பட்டியலில் இந்தியாவின் 11 தனியார் நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. உலகளவில் சிறந்த தனியார் நிறுவனங்கள் கொண்ட பட்டியலில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது.
- இந்த 11 நிறுவனங்களில் மொத்த மதிப்பு $805 பில்லியன் ஆகும்.
- இப்பட்டியலில் $2.1 டிரில்லியன் மதிப்புடன் ஆப்பிள் முதலிடத்திலும், அடுத்தபடியாக $1.6 டிரில்லியன் மதிப்புடன் ஆமேசான் மற்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவனமும் உள்ளன.
- இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனங்கள் $165.8 பில்லியன் மதிப்புடன் உலகளவில் 54வது இடத்தில் உள்ளது.
- மேலும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் இந்திய மதிப்புமிக்க இரண்டாவது நிறுவனமாக திகழ்கிறது.

## ஆதித்யா பிர்லா நிதி சேவைகளுக்காக எஸ் வங்கியுடன் கூட்டு சேர்ந்துள்ளது

- ஆதித்யா பிர்லா வெல்னஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் யெஸ் பேங்க் “யெஸ் பேங்க் வெல்னஸ்“ மற்றும் “யெஸ் பேங்க் வெல்னஸ் பிளஸ்“ கிரெடிட் கார்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த கிரெடிட் கார்டுகளின் முக்கிய நோக்கம் நுகர்வோரின் உடல்நலம், சுய பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய வளர்ச்சியை வளர்ப்பதாகும்.

## அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவேடு உருவாக்க அரசு முடிவு

- அரசின் நலத்திட்டங்களை தொழிலாளர்கள் பெற ஏதுவாக, அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவேட்டை உருவாக்குவது குறித்த அறிவிப்பு மத்திய பட்ஜெட்டில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நாடாளுமன்றத்தில் வரும் பிப்ரவரி 1-ம் தேதி 2021-22-ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.

## இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு 13% அதிகரிப்பு

- கடந்த 2020-ஆம் ஆண்டில் கரோனா பேரிடர் காரணமாக பல முக்கிய நாடுகளில் முதலீட்டு வரத்து சரிவடைந்த நிலையில், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 13 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.
- வர்த்தகம் மற்றும் மேம்பாடு தொடர்பான ஐ.நா. மாநாடு (யுஎன்சிடிஏடி) நடைபெற்றது.
- கரோனா பேரிடர் காரணமாக பிரிட்டன், அமெரிக்கா, ரஷியா, இத்தாலி, ஜெர்மனி, பிரேசில் உள்ளிட்ட பல முக்கிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் அந்நிய முதலீடானது கடந்தாண்டில் சரிவைக் கண்டுள்ளது.
- டிஜிட்டல் துறையில் காணப்பட்ட விறுவிறுப்பின் காரணமாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடானது 2020-இல் 13 சதவீதம் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.
- 2019-இல் 1.5 டிரில்லியன் டாலராக மிகவும் அதிகரித்து காணப்பட்ட சர்வதேச அந்நிய நேரடி முதலீட்டின் அளவு கரோனா இடையூறு காரணமாக 2020-இல் 42 சதவீதம் சரிவடைந்து 85,900 கோடி டாலராக சரிவடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டள்ளது.
- இது, 1990-க்கு பிறகு காணப்படும் மிக குறைந்தபட்ச அளவாகும். மேலும், உலக நிதி நெருக்கடி ஏற்பட்ட 2008-2009 ஆண்டுகளில் வந்தததைவிட கடந்தாண்டில் அந்நிய நேரடி முதலீடானது 30 சதவீதத்துக்கும் மேலாக சரிவைச் சந்தித்துள்ளது.
- டிஜிட்டல் துறை அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்ததே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.
- தெற்கு ஆசியாவைப் பொருத்தவரையில் கடந்த 2020-இல் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீடானது 10 சதவீதம் உயர்ந்து 6,500 கோடி டாலராக இருந்ததாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8% சுருங்கும்

- இந்தியாவின் 2020-21 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8% சுருங்கும் என இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை (FICCI) கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
- மேலும் விவசாயத்துறையில் 2020-21 ஆம் ஆண்டின் வளர்ச்சி 3.5% ஆக இருக்கும் என தெரிவித்துள்ளது.

## 7.3% வளர்ச்சி காணும்: ஐ.நா.

- இந்தியப் பொருளாதாரம் நடப்பாண்டில் 7.3 சதவீத வளர்ச்சியைக் காணும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.
- கரோனா பேரிடரால் உள்நாட்டு நுகர்வு சரிவடைந்துள்ளது. மேலும், கரோனா பரவலை கட்டுப்படுத்த அவ்வப்போது அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தால் பொருளாதாரம் கடுமையான பாதிப்புக் குள்ளாகியுள்ளது. இவற்றின் காரணமாக, இந்தியப் பொருளதாரம் 2020-இல் 9.6 சதவீதமாக பின்னடைவைச் சந்திக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2019-இல் இந்தியா 4.7 சதவீத பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருந்தது.
- உலக பொருளதாரத்தைப் பொருத்தவரையில் அதன் வளர்ச்சி 4.3 சதவீதமாக சுருங்கியுள்ளது.
- வேகமான வளர்ந்த வரும் முக்கிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.

## சர்வதேச நிதியத்தின் கணிப்பு

- கரோனா இடர்பாட்டுக்கிடையிலும் நடப் பாண்டில் இந்தியப் பொருளாதாரம் 11.5 சதவீதம் என்ற இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டும்.
- இருப்பினும், கடந்த 2020-இல் இந்தியப் பொருளாதாரத்தில் 8 சதவீதம் அளவுக்கு பின்னடைவு ஏற்பட்டது.

## 15 ஆண்டு பழைய வாகனங்களுக்கு பசுமை வரி

- சுற்றுச் சூழலை பாதிக்கும் பழைய வாகனங்களுக்கு பசுமை வரி விதிக்கலாம் என மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சகம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- அதேபோல 8 ஆண்டுக்கு மேலானபொது போக்குவரத்து வாகனங்களுக்கும் இவ்விதம்

கூடுதல் வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

- இதன் மூலம் பெருநகரங்களில் காற்று மாசுபடுவதைக் குறைக்க முடியும் என குறிப்பிட்டுள்ளது.
- பசுமை வரி என அழைக்கப்படும் இத்தகைய வரி விதிப்பானது அந்த வாகனம் பயன்படுத்தும் எரிபொருளின் தன்மைக்கேற்ப விதிக்கப்படும்.

## பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல்

- பாராளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்திய பொருளாதார ஆய்வறிக்கை சமர்பிப்பதுடன் தொடங்கப்பட உள்ளது.
- 2021-22ஆம் ஆண்டிற்கான நிதிக் கணக்கீடுகளில் ஒரு முக்கிய காரணி, பதினைந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் பற்றிய நிலைப்பாடாகும்.
- கடந்த ஆண்டு வழங்கப்பட்ட 2020-21க்கான இடைக்கால அறிக்கையில், ஜம்மு-காஷ்மீரின் யூனியன் பிரதேசங்களை உருவாக்குவதை மேற்கோளிட்டு, மாநிலங்களின் வரிகளில் பங்கை 42% லிருந்து 41% ஆக குறைக்க ஆணையம் முன்மொழிந்தது.

## பட்ஜெட் 2021: கீதா கோபிநாத் ஆலோசனை

- கொரோனா பாதிப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் நிவாரணத் திட்டங்களில் மத்திய அரசு தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார வல்லுநரும் இந்தியாவைச் சேர்ந்தவருமான கீதா கோபிநாத் ஆலோசனை வழங்கியுள்ளார்.
- பொதுத்துறை நிறுவனங்களுக்கான தனியார்மயமாக்கல் திட்டத்தை இந்தியா முன்மொழிய வேண்டும், ஜிஎஸ்டி வசூலில் உள்ள இடைவெளிகளைக் குறைக்க வேண்டும் மற்றும் கடன் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும், பட்ஜெட்டில் இருந்த வீணான செலவுகளைக் குறைக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர் கீதா கோபிநாத் தெரிவித்தார்

## இந்தியாவில் தங்கத்துக்கான தேவை 35% குறைந்தது

- இந்தியாவில் தங்கத்துக்கான தேவை கடந்த 2020-ஆம் ஆண்டில் 35 சதவீதம் சரிவடைந்துள்ளதாக உலக தங்க கவுன்சில் (டபிள்யூஜிசி) தெரிவித்துள்ளது.
- இதற்கு முன்பு தங்கத்தின் தேவை கடந்த 2009-இல் தான் மிகவும் குறைந்தபட்ச அளவாக 3,385.8 டன்னாக காணப்பட்டது என உலக தங்க கவுன்சில் தெரிவித்துள்ளது.

## பொருளாதார வளர்ச்சி 11% ஆக உயரும்

- பொருளாதாரத்தை மீட்டெடுக்க தேசிய உள்கட்டமைப்பை மையமாகக் கொண்ட பொது முதலீட்டை வரும் நிதிநிலை அறிக்கையில் அதிகரிக்க வேண்டும் என பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது.
- மேலும் நடப்பு ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார வளர்ச்சி வரும் 2021-22 ஆம் ஆண்டில் மீண்டு 11 சதவீத வளர்ச்சியை எட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் முதன்மை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி வி.சுப்பிரமணியன் தலைமையிலான குழு தயாரித்துள்ள இந்த பொருளாதார ஆய்வறிக்கையில் நடப்பாண்டு பொருளாதாரம் குறித்து விரிவாக்கப்பட்டது.
- 335 பக்கங்களைக் கொண்ட பொருளாதார ஆய்வறிக்கையில் சுமார் 30 பக்கங்களில் கரோனா காலகட்டம் குறித்த ஆய்வு விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# 5.அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### இஸ்ரோ தலைவர் கே.சிவனின் பதவிக்காலம் ஒரு ஆண்டு நீட்டிப்பு

- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவராக உள்ள கே.சிவனின் பதவிக்காலத்தை மேலும் ஒரு ஆண்டு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த கே.சிவன், இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி, விண்வெளி திட்டங்களில் முக்கிய பங்காற்றியுள்ளார். இவர் இஸ்ரோ விஞ்ஞானியாக 1982ஆம் ஆண்டு இணைந்தார்.
- இந்தியாவின் சாதனை திட்டமான மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்தும் பணியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் கே.சிவன் தலைமையில் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர்.

### கண் புற்றுநோய்க்கு புதுமை சிகிச்சை

- கண் புற்றுநோய்க்கான புதுமையான சிகிச்சையை மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளது.
- முதல் முறையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ருத்தினீயம் 106 திசு மூலம் கண் புற்றுநோய்க்கான புதுமையான சிகிச்சையை மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளது.
- பாபா அணு ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ள திசுவைக் கையாள்வது மிகவும் எளிமையானது. மேலும், இது உலகத்தரம் வாய்ந்ததாக உள்ளது.

### ஆக்ஸ்போர்டு தடுப்பூசி: இந்தியா ஒப்புதல்

- ஆக்ஸ்ஃபோர்டு தடுப்பூசியை புணேயில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவனம் அவசர காலத்தில் பயன்படுத்த அனுமதித்து, இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.
- இந்தியாவில் புணேயில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா (கோவிஷீல்ட்-ஆக்ஸ்ஃபோர்டு தடுப்பூசி), ஹைதராபாத்தைச் சேர்ந்த பாரத் பயோடெக் (கோவேக்ஸின்), ஆமதாபாதில் உள்ள ஜைடஸ் கடிலா (ஜைகோவ்-டி) ஆகிய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், கரோனா தொற்றுக்கு தடுப்பூசி தயாரித்து, வெவ்வேறு கட்ட களப் பரிசோதனையைில் ஈடுபட்டுள்ளன.

### ஃபைஸர் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி

- ஃபைஸர்-பயோஎன் டெக்கரோனா தடுப்பூசியை பொது மக்களுக்கு அவசர காலங்களில் செலுத்த ஐ.நா.வின் உலக சுகாதார அமைப்பு அனுமதி அளித்துள்ளது.
- அமெரிக்காவின் ஃபைஸர் மற்றும் ஜெர்மனியின் பயோஎன்டெக் நிறுவனங்கள் கூட்டாக உருவாக்கிய கரோனா தடுப்பூசி, ஏற்கெனவே, பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியனின் அங்கீகாரத்தைப் பெற்று அந்த நாடுகளில் பொதுமக்களுக்குச் செலுத்தப்பட்டு வருகிறது.

## மரத்தால் செய்யப்பட்ட உலகின் முதல் செயற்கைக்கோளை ஜப்பான் தயாரிக்கிறது

- கியோட்டோ: அமெரிக்க விண்வெளி ஏஜென்சி நாசாவின் கூற்றுப்படி, 5 மில்லியனுக்கும் அதிகமான குப்பைகள் நம் பூமியை சுற்றி வருகின்றன. இவற்றில் பல அதிக வேகத்தில் நகர்கின்றன, அவை நமது செயற்கைக்கோள்கள் அல்லது விண்கலங்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும்.
- இந்த குப்பைகள் சர்வதேச விண்வெளி நிலையத்தையும் அச்சுறுத்தும். ஜப்பானின் கியோட்டோ பல்கலைக்கழகமும் கட்டுமான நிறுவனமான சுமிட்டோமோ வனவியல் நிறுவனமும் இணைந்து 2023 க்குள் இந்த செயற்கைக்கோள் அனுப்ப உள்ளது.

## Fatah–1 ராக்கெட் அமைப்பு சோதனை

- பாகிஸ்தான் உள்நாட்டிலேயே வடிவமைக்கப் பட்ட வழிகாட்டி மல்டி லாஞ்ச் ராக்கெட் அமைப்பு ஃபத்தா-1 (Fatah-1) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது 140 கி.மீ வரை இலக்குகளை தாக்கி அழிக்க வல்லது. இது போர்களின் போது பயன்படுத்தப்பட உள்ளது.

## "கோவிஷீல்ட்" கரோனா தடுப்பூசி விலை ரூ.210

- இந்தியாவில் கோவில்ஷீல்ட் தடுப்பூசியின் விலை ரூ.210 என்று சீரம் இன்ஸ்டிடியூட் அறிவித்துள்ளது.
- இந்தியாவில் கோவிஷீல்ட், கோவாக்சின் ஆகிய கரோனா தடுப்பூசி மருந்துகளை பொதுமக்களுக்குச் செலுத்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம்-அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ள" கோவிஷீல்ட்" தடுப்பூசிக்கான விலையை, அதனை இந்தியாவில் தயாரித்து வரும் சீரம் நிறுவனம் அறிவித்துள்ளது.

## கரோனாவுக்கு மூச்சு வழி மருந்து

- மூச்சு வழியாக மருந்தைச் செலுத்தி, கரோனாவுக்கு சிகிச்சை அளிக்கும் புதிய முறை பிரிட்டன் மருத்துவமனைகளில் சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது.
- "இன்டர்ஃபெரான் பீட்டா-1ஏ" என்ற புரதத்தை மூச்சு வழியாக கரோனா நோயாளிகளுக்குச் செலுத்தும் சிகிச்சை முறையை பிரிட்டன் மருத்துவமனைகள் சோதனை முறையில் தொடங்கியுள்ளன.

## உலகின் மிகச்சக்தி வாய்ந்த ராக்கெட்டின் இறுதி கட்ட சோதனை

- உலகின் மிகச்சக்தி வாய்ந்த ராக்கெட்டின் இறுதிகட்ட சோதனை "Green Run" நாஸா தொடங்கி உள்ளது.
- இச்சோதனையின் எட்டாவது சோதனையாகும். Space Launch Systemன் மிக முக்கிய இறுதிகட்ட சோதனை இதுவாகும் என நாஸா தெரிவித்துள்ளது.
- நாஸாவின் அடுத்த இலக்கு மனிதனை விண்ணுக்கு அனுப்புதலுக்கு இச்சோதனை உதவிகரமாக இருக்கும் என நாஸா தெரிவித்துள்ளது.

## ரஷ்யாவிலிருந்து போர் விமானங்களை இந்தியா வாங்க உள்ளது

- ரஷ்யாவிலிருந்து 21 மிக்-29 மற்றும் 12 சுகோய்-30 எம்.கே.ஐ போர் விமானங்களை வாங்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இது தவிர, ரஷ்ய அரசு நடத்தும் பாதுகாப்பு ஏற்றுமதிப் பிரிவான ரோசோபொரோனெக்ஸ்போர்ட்டில் இருந்து சில விமானங்களை வாங்க உள்ளது.
- இந்திய விமானப்படையிடம் உள்ள 59 விமானங்களுடன் புதிய 21 மிக்-29 போர் விமானங்களை சேர்க்க உள்ளது. மேலும் 12 சுகோய்-30 எம்.கே.ஐ.கள், 272 விமானங்களுடன் தற்போது சேர்க்க உள்ளது.

## பால்வெளியில் இருக்கும் அரிதான நட்சத்திரங்களை அஸ்ட்ரோசாட்டின் புறஊதா தொலைநோக்கி கண்டறிந்துள்ளது

- நமது பால்வெளியில் உள்ள என்ஜிசி 2808 எனப்படும் புதிரான, உருண்டையான, குறைந்தது ஐந்து தலைமுறைகள் நட்சத்திரங்களை கொண்ட மிகப்பெரிய விண்மீன் தொகுப்பை ஆராய்ந்து வரும் வானியலாளர்கள், அரிதான சூடான மற்றும் வெளிச்சம் நிறைந்த புற ஊதா நட்சத்திரங்களை அதில் கண்டறிந்துள்ளனர்.
- உருண்டையான தொகுப்பில் வெளிச்சம் மிகுந்த சுமார் 34 விண்மீன்கள் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

## புலம் பெயர் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் "ஷ்ரம் சக்தி" இணையதளம்

- புலம் பெயரும் தொழிலாளர்களுக்காக, 'ஷ்ரம்சக்தி' (Shramshakti) என்ற இணையளத்தை கோவாவில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய பழங்குடியின விவகாரத்துறை அமைச்சர் திரு அர்ஜூன் முண்டா தொடங்கி வைத்தார்.
- இதன் மூலம் புலம் பெயர் தொழிலாளர்களுக்கான தேசிய மற்றும் மாநில அளவிலான திட்டங்களை திறம்பட வகுக்க முடியும். கோவாவில் புலம் பெயர் தொழிலாளர்களுக்கான பிரத்தியேக பிரிவையும், பழங்குடியினர் கண்காட்சி அரங்கத்தையும், 'ஷ்ரம்சக்தி' என்ற பயிற்சி கையேட்டையும் அவர் வெளியிட்டார்.

## பிஎஸ்எல்வி–சி51 ராக்கெட்

- இந்திய தனியார் நிறுவனங்கள் மற்றும் பிரேசில் நாட்டின் செயற்கைக்கோள்கள் பிஎஸ்எல்வி-சி51 ராக்கெட் மூலம் பிப்ரவரி இறுதியில் விண்ணில் செலுத்தப்பட உள்ளன.
- இந்த ராக்கெட்டில் இந்திய நிறுவனங்களான பிக்ஸல் ஸ்டார்ட்அப் மையத்தின் "ஆனந்த்", ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின் "சதிஷ்", பல்கலைக்கழகங்கள் கூட்டமைப்பின் "யுனிவ்சாட்" ஆகிய 3 செயற்கைக்கோள்களும் சேர்த்து விண்ணில் செலுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒரே நேரத்தில் 143 செயற்கைக்கோளை ஏவி உலக சாதனை படைத்தது ஸ்பேஸ்எக்ஸ்

- விண்வெளித் தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமான அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தனது பால்கன் 9 ராக்கெட் மூலம் ஒரே நேரத்தில் 143 செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- இதில் அரசு தொடர்பான மற்றும் வணிகரீதியிலானவை என 133 செயற்கைக்கோள்களும், 10 ஸ்டார்லிங்க் சாட்டிலைட்களும் அடங்கும். நாசாவின் செயற்கைக்கோள்களும் அனுப்பப்பட்டுள்ளன. இதன் மூலம், இஸ்ரோவின் சாதனையை முறியடித்து ஸ்பேஸ் எக்ஸ் புதிய உலக சாதனை படைத்துள்ளது.
- இஸ்ரோ நிறுவனம் 2017ம் ஆண்டு 104 செயற்கைக்கோள்களை ஒரே நேரத்தில் விண்ணில் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

## "ஸ்பேஸ் கிட்ஸ்" வழிகாட்டுதலுடன் செயற்கைக்கோள் தயாரிக்க திட்டம்

- இந்தியா, வங்கதேச மாணவர்கள் இணைந்து புதிய செயற்கைக்கோளை உருவாக்குவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக "ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா" நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்தியா-வங்கதேசம் இடையிலான 50 ஆண்டுகால நல்லுறவு மற்றும் 2021 மார்ச் 26ம் தேதி கொண்டாட உள்ள வங்கதேசத்தின் 50-வது சுதந்திர தினத்தை கொண்டாடும் விதமாக இரு நாடுகளைச் சேர்ந்த மாணவர்களின் கூட்டு முயற்சியில் செயற்கைக் கோள் தயாரித்து விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இதற்கு "வங்கம்-பாரத் மாணவர் செயற்கைக்கோள்" என்று பெயரிடப்பட உள்ளது.

### கோவாக்சின் இரத்த மெலிந்த நோயாளிகளுக்கு பாதுகாப்பானவை: ஐ.சி.எம்.ஆர்

- இந்தியாவில் அவசரகால பயன்பாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசிகள் கோவிஷீல்ட் மற்றும் கோவாக்சின் இரண்டும் இரத்த மெலிந்த நோயாளிகளுக்கு பாதுகாப்பானவை என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் தெரிவித்துள்ளது.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், அஸ்ட்ராஜெனகா நிறுவனத்துடன் இணைந்து சீரம் இன்ஸ்ட்டியூட் ஆப் இந்தியா நிறுவனம் கோவிஷீல்ட் என்ற கரோனா தடுப்பு மருந்தையும், ஐசிஎம்ஆர் மற்றும் புனேவில் உள்ள வைரலாஜி நிறுவனத்துடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனம் கோவாக்சின் எனும் தடுப்பு மருந்தையும் தயாரித்து வருகின்றன.

## 5.2 சுகாதார அறிவியல் பற்றிய சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு–5 ப்ரீத்தி பான்ட் பேனல் தலைமையில் குழு

- தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-5ன் ஆய்வு செய்ய சுகாதர மற்றும் குடும்ப நல அமைச்சகம் சமீபத்தில் ஒரு தொழில்நுட்ப நிபுணர் குழுவை உருவாக்கியுள்ளது.
- இணைச் செயலாளர் ப்ரீத்தி பந்த் தலைமையில் மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களின் தொழில்நுட்பக் குழுவை அமைச்சகம் அமைத்துள்ளது.
- நிபுணர் குழுவில் மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த மாநில திட்ட அலுவலர்களும் உள்ளனர்.
- இந்த குழு தேசிய குடும்ப சுகதார கணக்கெடுப்பு-5 இன் கண்டுபிடிப்புகளை ஆராய்வதுடன், இரத்த சோகை ஊட்டச்சத்து குறைபாடு, சி-பிரிவு மற்றும் ஸ்டாண்டிங் தொடர்பான குறிகாட்டிகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை பரிந்துரைக்கும்.

# 5.3 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

## இந்திய விமானப்படை அமைச்சகம் மின் அலுவலகம் இணையத்தளத்தை தொடங்கி உள்ளது

- இந்திய விமானப் படை அமைச்சகம் மின்-அலுவலகத்திற்காக புதிய இணையதளத்தை தொடங்கி உள்ளது.
- மின்-ஆளுமை ஊக்கப்படுத்த இந்த இணையத்தளத்தை தொடங்கி உள்ளது. டிஜிட்டல் இந்தியாவின் ஒரு பகுதியாகவும், காகித பணிகளை குறைப்பதற்காகவும் இந்த இணையத்தளத்தை தொடங்கி உள்ளது.

### 'Satark Nagrik'

- ஜம்மு & காஷ்மீரின் ஆளுநர் மனோஜ் சின்ஹா இந்த செயலியை வெளியிட்டார். ஜம்மு & காஷ்மீரின் ஊழல் ஒழிப்புத் துறை மற்றும் விழிப்புணர்வு ஆணையம் இணைந்து வெளியிட்டது.
- இச்செயலி மூலம் மாநிலத்தில் நடைபெறும் ஊழல் முறைகேடுகள் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படும்.

## கரோனா தடுப்பூசி திட்டத்துக்கான அடித்தளம் கோ–வின் செயலி Co–win App

- கரோனா தடுப்பூசி திட்டத்தை கண்காணிப்பதற்கு உதவும் கோ-வின் செயலி, தடுப்பூசி திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றுதற்கான அடித்தளமாக இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஹைதராபாத்தில் உள்ள பாரம் பயோடெக் நிறுவனம் தயாரித்துள்ள "கோவேக்ஸின்" தடுப்பூசி, பிரிட்டனின் அஸ்ட்ராஜெனிகா, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஆமதாபாத்தில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் தயாரித்துள்ள "கோவல்ஷீல்டு" தடுப்பூசி ஆகியவற்றை அவசர காலத்தில் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
- கரோனா தடுப்பூசி போடுவதில் குளறுபடிகள் ஏற்படாமல் இருக்க, அந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்கென கோ-வின் என்ற பிரத்யேக செயலியை மத்திய அரசு உருவாக்கி உள்ளது.

### 'Avolokana Software'

- கர்நாடகா மாநில அரசின் முதலமைச்சர் எடியூரப்பா *'Avolokana Software'* என்ற மென்பொருளை அறிமுகப்படுத்தினார். இந்த மென்பொருள் 1800 திட்டங்களுக்கு ஏற்படும் செலவு மற்றும் பொருளாதாரம் பற்றிய தரவுகளை காண மாநில அரசுக்கு உதவும்.
- தாழ்த்தப்பட்டவர்களுக்கான துணை திட்டங்கள், பழங்குடியினர்களுக்கான துணை திட்டங்கள், மத்திய அரசின் திட்டங்கள், நீடித்த நிலையான வளர்ச்சிக்கான செலவுகள் ஆகியவற்றை இந்த மென்பொருள் மூலம் கண்காணிக்கப்பட உள்ளது.
- மேலும் அரசாங்க மானியங்கள் மற்றும் பல்வேறு அரசாங்க திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்கும்.

## இந்தியாவின் முதல் குவாண்டம் கணினி ஆய்வகம்

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அமேசான் வெப் சேவையுடன் இணைந்து இந்தியாவின் முதல் குவாண்டம் கணினி ஆய்வகத்தை அமைக்க உள்ளது.
- அமேசான் நிறுவனம் இந்த ஆய்வகத்துக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க உள்ளது.

## பட்ஜெட் தயாரிப்புப் பணி : செல்லிடப்பேசி செயலியும் அறிமுகம்

- ஆண்டுதோறும் பட்ஜெட் தயாரிப்பு பணிகள், தில்லியில் உள்ள நிதியமைச்சகத்தில்

தொடங்குவது வழக்கம். அதன்படி, 2021-22ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் தயாரிப்புப் பணி தொடங்கியது.

**செயலி அறிமுகம்:**

- இந்த நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட் ஆவணங்கள், மானியக் கோரிக்கைகள், வரி விதிப்பு மற்றும் வரிச்சலுகைகள் இடம்பெறும் நிதி மசோதா உள்ளிட்ட 14 ஆவணங்களைப் பெறும் வகையில் "யூனியன் பட்ஜெட் ஆப்" என்ற செயலியை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிமுகம் செய்துவைத்தார்.
- பொருளாதார விவகாரங்கள் துறையின் வழிகாட்டுதல்படி, தேசிய தொழில்நுட்ப மையம் இந்த செயலியை உருவாக்கியுள்ளது.

## உலகின் வேகமாக வளர்ந்து வரும் முதிர்ந்த தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பு

- லண்டனின் சர்வதேச வணிக மற்றும் சுற்றுச்சூழல் முகமை உலகின் வேகமாக வளர்ந்து வரும் முதிர்ந்த தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பு கர்நாடகாவின் பெங்களூர் நகரம் உள்ளதாக தெரிவித்துள்ளது. 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 1.3 பில்லியன் அமெரிக்க டாலர் அதிகரித்து உள்ளதாக தெரிவித்துள்ளது.
- உலகளவில் அதிக முதலீடு பெற்ற முதல் 10 நகரங்களில் பெங்களூரு நகரம் ஆறாவது இடத்தில் உள்ளது. இதில் பெய்ஜிங், சான்பிரான்ஸிஸ்கோ, நியூயார்க், ஷாங்காய் மற்றும் லண்டன் ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளது.
- மேலும் லண்டன், முனிச், பெர்லின், மும்பை, மகாராஷ்டிரா ஆகிய நகரங்கள் (17 மடங்கு) 0.7 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து 1.2 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு அதிகரித்து உள்ளது.

## FAU–G என்ற விளையாட்டு

- FAU-G ஜனவரி 26 அன்று தொடங்கப்பட்டது. இந்த விளையாட்டை இந்திய நிறுவனமான nCore Games தயாரித்தள்ளது. சமீபத்தில், நடிகர் அக்ஷய் குமார் இந்த மொபைல் விளையாட்டைப் பற்றி அறிவித்தார்.

## உலகளவில், ஐந்தாவது, "வலுவான பிராண்டாக", ரிலையன்ஸ் ஜியோ

- உலகளவில், ஐந்தாவது, 'வலுவான பிராண்டாக', ரிலையன்ஸ் ஜியோ முன்னேறி உள்ளது.
- 'பிராண்டு பைனான்ஸ்' நிறுவனம், உலகளவிலான, 500 வலுவான பிராண்டுகளின் பட்டியலை தொகுத்து வழங்கி உள்ளது.
- இந்த பட்டியலில், முதலிடத்தில், சீனாவை சேர்ந்த மொபைல் செயலியான, 'விசாட்' உள்ளது. வாகன தயாரிப்பு நிறுவனமான, 'பெராரி' இரண்டாவது இடத்தையும்; ரஷ்ய வங்கியான, 'ஸ்பெர்' மூன்றாவது இடத்தையும்; கோக கோலா, நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## இந்தியாவின் முதல் மகரந்தச் சேர்க்கை பூங்கா திறப்பு

- இந்தியாவின் முதல் மகரந்தச் சேர்க்கை பூங்கா உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் மாவட்டத்தில் உள்ள ஹால்ட்வானியில் திறக்கப்பட்டது.
- மேலும், இது சுமார் 50 வெவ்வேறு மகரந்தச் சேர்க்கை இனங்களைக் கொண்டுள்ளது. இதில் பல்வேறு வகையான பட்டாம்பூச்சிகள், தேனீக்கள், பறவைகள் மற்றும் பிற பூச்சிகளும் நிறைந்துள்ளது.
- தற்போது, பூமியில் உள்ள அனைத்து பூச்செடிகளிலும் 75.95 சதவீதம் வரை மகரந்தச் சேர்க்கைகளைச் சார்ந்து 180,000க்கும் மேற்பட்ட வெவ்வேறு தாவர இனங்களுக்கு மகரந்தச்சேர்க்கை சேவைகளை வழங்குகின்றது.

## யுஎன்டிபி மற்றும் பிசி இந்தியாவின் முதல் சமூக தாக்கப் பத்திரதைத்தை உருவாக்க எம்.சி. கூட்டு சேர்ந்துள்ளது

- ஐக்கிய நாடுகளின் முன்னேற்ற திட்டம் மற்றும் புனேவின் பிம்ப்ரி சின்ச்வாட் மாநகராட்சி, இந்தியாவின் முதல் சமூக தாக்கப்பத்திரத்தை (எஸ்ஐபி) இணைந்து உருவாக்க கூட்டு சேர்ந்துள்ளது.
- இந்த பத்திரமானது விளைவு அடிப்படை யிலான ஒப்பந்தத்தின் ஒரு வடிவமாகும். இது ஒரு குறிப்பிட்ட குழு மற்றும் குடிமக்களுக் கான சமூக விளைவுகளை மேம்படுத்துவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நாட்டின் முதல் எத்தனால் ஆலை

- நாட்டின் முதல் எத்தனால் ஆலை சத்தீஸ்கர் மாநிலத்தில் அமைக்கப்பட்ட உள்ளது. இதற்காக சத்தீஸ்கர் மாநில அரசு தனியார் பொதுத்துறையுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இதற்காக கொல்கத்தா உள்ள போரம் தேவ் கூட்டுறவு சர்க்கரை தொழிற்சாலை மற்றும் சத்தீஸ்கர் டிஸ்டில்லரி நிறுவனத்துடன் 30 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் மேற் கொண்டுள்ளது.

## கிராமங்களில் வீடுகள் கட்டும் பணி விரைவுப்படுத்தப்படும்

- லைட் ஹவுஸ் : உலகளாவிய வீட்டு வசதித் தொழில்நுட்ப சவால்களில் – இந்தியா (ஜி. ஹெச்.டி.சி.ஐ.) என்கிற மாநாடு தில்லியில் கடந்த 2019 மார்ச்சில் நடைபெற்றது. பிரதமர் மோடி தொடங்கி வைத்த இந்த மாநாட்டில் புதிய கட்டுமானத் தொழில்நுட்பங்கள் அடையாளம் காணப்பட்டன.
- இதில் 6 சர்வதேச நாடுகளில் கட்டப்படும் வீடுகளில் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் அடிப்படையில் "லைட் ஹவுஸ்" (எல்.எச்.பி.) என்கிற முன்னோடித் திட்டம் உருவானது.
- அதன்படி, தமிழ்நாட்டில் சென்னை-பெரும்பாக்கம், இந்தூர் (மத்திய பிரதேசம்), ராஜ்கோட் (குஜராத்), ராஞ்சி (ஜார்கண்ட்), அகர்தலா (திரிபுரா), ரக்லௌ (உத்தரபிரதேசம்) ஆகிய நகரங்களில் "லைட் ஹவுஸ்" திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் சென்னை யில் 1,152 வீடுகளும், ராஜ்கோட்டில் 1,144 வீடுகளும் மற்ற நகரங்களில் தலா சுமார் 1,000 வீடுகள் நவீன முறையில் கட்டப்பட உள்ளன.

## தமிழ் அகாதெமியை அமைத்தது தில்லி அரசு

- தமிழ் மொழி, கலாச்சாரத்தை மேம்படுத்து வதற்காக தமிழ் அகாதெமியை தில்லி அரசு அமைத்து அறிவித்துள்ளது.

- இதன் தலைவராக தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, துணைத் தலைவராக தில்லி மாநகராட்சி முன்னாள் கவுன்சிலர் என்.ராஜா ஆகியோரை நியமித்து தில்லி அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

**செயல்பாடுகள்**

- தமிழ் மொழியிலும், கலாச்சாரத்திலும் சிறந்து விளங்குபவர்களை ஊக்குவிக்க புதிய அகாதெமியின் கீழ் விருதுகள் வழங்கப்படும் என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது.
- மேலும், தமிழ் மொழியைப் பயில படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தமிழக மக்களின் கலாச்சார திருவிழாக்களைக் கொண்டாடவும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் தில்லி அரசு தெரிவித்துள்ளது.

## 51–ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா

- 51-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கான நடுவர் குழு அறிவிக்கப் பட்டுள்ளது.
- வருடந்தோறும் இந்திய சர்வதேசத் திரைப்பட விழா கோவாவில் ஜனவரி 16-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு மொழித் திரைப்படங்களுடன் சேர்த்து இந்திய மொழித் திரைப்படங்களும் திரையிடப்படும்.
- இதில் சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்படும் இந்திய மொழிப் படத்துக்குத் தேசிய விருதும் கிடைக்கும்.

## தேசிய அளவியல் மாநாட்டு 2021 (National Metrology Conclave)

- தேசிய அளவியல் மாநாடு 2021-இல் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு தொடக்க உரை ஆற்றினார்.
- தேசிய அணு கால அளவு மற்றும் பாரதிய நிர்தேஷக் திரவியா பிரணாலி ஆகியவற்றை நாட்டுக்கு அர்ப்பணித்ததுடன், தேசிய சுற்றுச்சூழல் தரநிர்ணய ஆய்வுக்கான அடிக் கல்லையும் அவர் நாட்டினார்.
- தனது 75ஆவது ஆண்டுக்குள் நுழையும் புதுதில்லியின் அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மையம்-தேசிய இயற்பியல் ஆய்வகம் (சிஎஸ்ஐஆர்-என்பிஎல்) இந்த மாநாட்டை நடத்தியது. நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சிக்குஅளவியல்("MetrologyfortheInclusive Growth of the Nation") என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

## உலகின் மிகப்பெரிய ரயில்வே தளம் இந்தியாவில் அமையவுள்ளது

- உலகின் மிகப்பெரிய ரயில்வே தளம் ஹப்ளி ரயில் நிலையம் ஸ்ரீ சித்தாருத சுவாமிஜி ரயில் நிலையம்) கட்டப்பட்டு வருகிறது.
- தென்மேற்கு ரயில்வே (SWR) மண்டலத்தின் தலைமையகமான ஹூப்ளி நிலையம் (ஸ்ரீ சித்தாருத சுவாமிஜி ரயில் நிலையம்) மார்ச் 2021 தொடங்கப்பட உள்ளது.
- 1,400 மீட்டர் நீளம் 10 மீட்டர் அகலத்துடன் உயர்த்தப்படும். தற்போது, கோரக்பூர் உலகின் மிக நீளமான (1,366 மீட்டர்) தளத்தை கொண்டுள்ளது.

## நான்காவது உலகாளவிய ஆயுர்வேத திருவிழா 2021

- நான்காவது உலகாளவிய ஆயுர்வேத திருவிழா வரும் மார்ச் 12 முதல் 19 வரை கேரளாவில் நடைபெற உள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை மற்றும் உலகாளவிய ஆயுர்வேத திருவிழாவின் தலைவர் வி.முரளிதரன் அறிவித்தார்.
- இத்திருவிழாவை மத்திய புதுமை அறிவியல் மற்றும் சமூக செயல் (CISSA) மற்றும் இந்திய ஆயுர்வேத மருத்துவ சங்கம் (AMAI) ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

## தமிழ் அகாதெமிக்கு உறுப்பினர்கள் தில்லி அரசு நியமனம்

- தமிழ் மொழி, கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையில் தில்லி அரசு அறிவித்துள்ள தமிழ் அகாதெமிக்கு 13 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ் அகாதெமியின் தலைவராக தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, துணைத் தலைவராக தில்லி மாநகராட்சி முன்னாள் கவுன்சிலர் என்.ராஜா ஆகியோரை தில்லி அரசு நியமித்துள்ளது.

- தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ் கலாச்சாரத்தின் பெருமைகளையும் பரப்பும் வகையில் தில்லியில் தமிழ் அகாதெமி அமைக்கப்பட்டுள்ளது.

## உயிரி எரிவாயுவில் இயங்கும் ரயில்

- விலங்கு மற்றும் மனிதக் கழிவுகள், சமையலறை காய்கறிக் கழிவுகள் உள்ளிட்டவற்றின் வாயிலாக உற்பத்தியாகும் உயிரி எரிவாயுவின் உதவியுடன் இயங்கும் ரயிலை பிரிட்டன் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
- "பயோ அல்ட்ரா" ரயிலை வடிவமைப்பதற்காக பிரிட்டன் அரசின் ஆராய்ச்சிக்கான நிதியுதவி அமைப்பானது சுமார் ரூ.53.88 லட்சத்தை நிதியாக வழங்கியுள்ளது. ஒரு முறை எரிவாயு நிரப்பப்பட்டால் சுமார் 3,200 கி.மீ. வரை அந்த ரயில் பயணிக்கும்.

**இந்தியாவின் முயற்சிகள்**

- வரும் 2022-ஆம் ஆண்டுக்குள் 175 ஜிகா வாட் எரிசக்தியை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதற்கு இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை 2030-ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட்டாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பலன்கள்**

- காற்று மாசுபாடு குறையும்.
- டீசல் என்ஜினின் இரைச்சல் தவிர்க்கப்படும் ஒலி மாசு அறைவே இராது.
- ரயிலின் செயல்படும் திறன் அதிகரிக்கும்.
- குறைந்த எடை கொண்ட ரயில் பெட்டிகள் (டீசல் என்ஜின் கொண்ட ரயில் பெட்டிகளைவிட பாதியளவு).

**உயிரி எரிவாயுவில் இயங்கும் ரயில்**

- பெயர் – பயோ அல்ட்ரா
- எடை – 12 டன்
- நீளம் – 66 அடி
- பயணிகள் எண்ணிக்கை – 120
- வேகம் – மணிக்கு 50 கி.மீ.

**உயிரி எரிவாயு உற்பத்தி**

- மரத்துகள்கள், மரங்களின் வாடிய இலைகள், பயிர்க்கழிவுகள் உள்ளிட்டவற்றிலிருந்தும் உயிரி எரிவாயுவை உற்பத்தி செய்ய முடியும்.
- இந்த ரயிலைச் செலுத்தும் உயிரி எரிவாயு உற்பத்திக்கு விலங்கு, மனிதக் கழிவுகளும் பயன்படுத்தப்படும்.

## ரூ.320 கோடியில் ஐந்து துறைமுகங்கள் டிஜிட்டல் சூழலாக மாற்றப்பட உள்ளது

- ரூ.320 கோடி செலவில் நாட்டில் ஐந்து துறைமுகங்கள் டிஜிட்டல் சூழலாக மேம்படுத்த மத்திய அரசின் துறைமுக அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.
- ஐந்து துறைமுகங்கள்: மும்பை, சென்னை, தீனதயாள், பாரதீப் மற்றும் கொல்கத்தா (ஹால்டியா).

## உலகின் மிகப்பெரிய மதிப்புமிக்க இருசக்கர வாகன நிறுவனம்

- இந்தியாவின் பன்னாட்டு நிறுவனமான பஜாஜ் உலகின் மிகப்பெரிய மதிப்புமிக்க இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகன உற்பத்தி நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## Toycathon–2021

- மத்திய கல்வித்துறை அமைச்சர் ஸ்ரீ ரமேஷ் போக்ரியால் நிஷாங்க் மற்றும் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் அமைச்சர் ஸ்மிருதிராணி Toycathon-2021 மற்றும் Toycathon என்ற இணையத்தளத்தை அறிமுகம் செய்து வைத்தனர்.
- Toycathon என்பது உலகளாவிய பொம்மை உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- புதிய பொம்மைகள் உருவாக்குவதற்கான வசதிகளை Toycathon என்ற இணையத்தளம் மூலம் வழங்கப்படும்.
- Toycathon ஒன்பது மையக்கருத்துகள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## தெற்காசிய எரிசக்தி பாதுகாப்பிற்கான உயர்மட்ட குழு

- தெற்காசியாவை மையமாகக் கொண்ட எரிசக்தி பாதுகாப்பு கூட்டமைப்பை உருவாக்க மத்திய அரசு ஒரு உயர்மட்ட குழுவை அமைத்துள்ளது.

- எரிசக்திக்கான தெற்காசியா குழு *(South Asia Group for Energy)* என பெயரிடப்பட்ட உயர்மட்டக்குழுவுக்கு முன்னாள் மத்திய மின் செயலாளர் ராம் வினய் ஷாஹி தலைமை தாங்குவார்.
- எரிசக்திக்கான தெற்காசியாவிற்கான குழு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் ஆராய்ச்சி அமைப்பு மற்றும் தகவல் மேம்பாட்டு அமைப்பின் கீழ் இயங்க உள்ளது.

## அண்டார்டிகாவிற்கான 40–வது அறிவியல் பயணம்

- அண்டார்டிகாவிற்கான 40-வது அறிவியல் பயணத்தை இந்தியா தொடங்கியுள்ளது. 43 உறுப்பினர்களுடனான இந்தப் பயணம் கோவாவிலிருந்து (ஜனவரி 5) கொடியசைத்து துவக்கி வைக்கப்படுகிறது.
- பனிக்கட்டியில் பயணிக்கும் எம்வி விசிலி கோலோவ்நின் என்ற கப்பல், 30 நாட்களில் அண்டார்டிகாவைச் சென்றடையும்.

## கொச்சி–மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் பதிக்கப்படும் திட்டம்

- கேரள மாநிலம் கொச்சியில் இருந்து கர்நாடக மாநிலம் மங்களூரு வரையிலான 450 கி.மீ. தொலைவுக்கு இயற்கை எரிவாயு குழாய் பதிக்கப்பட்டுள்ளது. “கெய்ல்“ நிறுவனம் சார்பில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த எரிவாயு குழாயினை மக்கள் பயன்பாட்டுக்காக பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- நாடு முழுவதும் அடுத்த 5, 6 ஆண்டுகளில் 32 ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு இயற்கை எரிவாயு குழாய் பதிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

## 'Pad Scheme' மத்திய பிரதேசம்

- மத்திய பிரதேச மாநில அரசு ‘Pad Scheme’ என்ற திட்டத்தை தொடங்கி உள்ளது. மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இத்திட்டத்தை தொடங்க உள்ளது.
- கடந்த 2009-ம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.
- மாநிலத்தில் உள்ள 18 வயது பூர்த்தி அடைந்த ஆண்கள் மற்றும் பெண்கள் பயனடையும் வகையில் தொடங்கப்பட உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் இளைஞர்கள் தேநீர் கடை, நகல் கடை, கணினி தட்டச்சு மற்றும் இதர கடைகள் தொடங்கி கொள்ள இடங்களை அரசு வழங்கும்.
- இதன் மூலம் மாணவர்களுக்கு தங்கள் கல்வி மற்றும் பயிற்சிகள் தொடங்க தன்னம்பிக்கை அடைய முடியும்.

## மேற்கு ரயில்வேயில் ரேவாரி–மதார் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக சரக்கு வழித்தடம்

- மேற்கு ரயில்வேயின் பிரத்தியேக சரக்கு வழித்தடத்தில் 306 கி.மீ நீளமுள்ள ரேவாரி - மதார் இடையே சரக்கு ரயில் போக்குவரத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்த வழித்தடத்தில் மிக நீண்ட இரட்டை அடுக்கு கன்டெய்னர் ரயிலையும் அவர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இரட்டை அடுக்கு கன்டெய்னர்கள் ரயில்களைத் தொடங்கி வைத்ததன் மூலம் இந்த ரயில்களை இயக்கும் ஒரு சில நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைந்தது.

## 'எஜுகான் 2020": சர்வதேச ஒருங்கிணைந்த மாநாடு

- மத்திய கல்வி அமைச்சர் திரு ரமேஷ் பொக்ரியால் ‘நிஷாங்க்’, சர்வதேச ஒருங்கிணைந்த மாநாடு ‘எஜுகான் 2020’-ஐ காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.
- பஞ்சாபின் பதிண்டா மத்திய பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேச கல்வி ஆராய்ச்சி சங்கம் ஆகியவை இந்த மாநாட்டை நடத்துகின்றன.
- சர்வதேச அமைதியை மீட்டெடுப்பதற்காக இளைஞர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கல்வி குறித்த தொலை நோக்கு பார்வை என்பது இந்த மாநாட்டின் கருப் பொருளாகும்.

## காஷ்மீரில் தொழில் வளர்ச்சி திட்டத்துக்கு அரசு ஒப்புதல்

- ஜம்மு காஷ்மீரில் ரூ.28 ஆயிரம் கோடி மதிப்பிலான தொழில் வளர்ச்சி திட்டத்துக்கு

மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த 370-வது சட்டப்பிரிவை மத்திய அரசு கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரத்து செய்தது. மேலும் அம்மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என 2 யூனியன் பிரதேசங்களாகவும் பிரித்தது.
- புதிய முதலீடுகளை ஈர்க்க இத்திட்டம் வழிவகுக்கும். இதன் மூலம் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்".

## கேரளம்: "பசுமை" வளாகமாகும் அரசு அலுவலகங்கள்

- கேரளத்தில் 10,000 மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் குடியரசு தினமான ஜனவரி 26-ஆம் தேதி முதல் "பசுமை" வளாகங்களாக அறிவித்தது.
- அரசு அலுவலகங்களின் அன்றாட நடவடிக்கைகளில் பிளாஸ்டிக் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத பொருள்களைப் பயன்படுத்துவதை தவிர்க்கவும், மீண்டும் பயன்படுத்தக் கூடிய மற்றும் மறுசுழற்சி செய்யக் கூடிய பொருள்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதே பசுமை அலுவலகங்களை ஏற்படுத்துவதன் நோக்கம் ஆகும்.

## லடாக்கின் மொழி, கலாச்சாரம் மற்றும் நிலத்தைப் பாதுகாப்பதற்காக கிஷன் ரெட்டி தலைமையில் குழு

- லடாக்கின் மொழி, கலாச்சாரம் மற்றும் நிலத்தைப் பாதுகாப்பதற்காக கிஷன் ரெட்டி தலைமையில் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழு யூனியன் பிரதேசத்தின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும்.

## தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையம்

- பஞ்சாப் தேசிய வங்கி, ஐஐடி கான்பூருடன் இணைந்து தொழில்நுட்ப கண்டுபிடிப்பு ஆராய்ச்சி மையம் அமைக்க உள்ளது. இதன் மூலம் ஆராய்ச்சிகள் தொழில்நுட்ப தீர்வுகள் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

## கிருஷி சஞ்சீவானி திட்டம்

- 40 கிருஷி சஞ்சீவானி வாகனங்களை பெங்களூரில் முதல்வர் எடியூரப்பா தொடங்கி வைத்தார்.
- இந்த வேன்கள் தேசிய வேளாண் துறையால் தேசிய கிருஷி விகாஷ் யோஜனாவின் கீழ் மத்திய அரசு உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது.
- மேலும் வேளாண் பயிர்கள், மண்ணின் தரம், பூச்சி கட்டுப்பாடு போன்றவற்றை ஆராய்வதற்கு இந்த வண்டிகள் உதவும்.

## உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஆற்றல் திட்டம்

- உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஆற்றல் திட்டத்தை (largest floating solar energy project in the world) நர்மதா ஆற்றில் உள்ள ஓம்கரேஷ்வர் அணையில் (Omkareshwar Dam) இந்திய அரசு கட்ட உள்ளது. ரூ.3000 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் 600 மெகாவாட் சூரிய ஆற்றல் உற்பத்தி திறன் கொண்ட இந்த திட்டம் 2022-2023 ஆண்டு காலகட்டத்தில் தனது மின் உற்பத்தியைத் தொடங்கும்.

## நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125வது பிறந்த நாள்: பிரதமர் தலைமையில் உயர்மட்ட குழு

- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125-வது பிறந்தநாளை அனுசரிப்பதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஓர் உயர் மட்ட குழு அமைக்கப்பட்டது.
- வரும் ஜனவரி 23-ஆம் தேதி தொடங்கி ஒரு வருடம் வரை நடைபெறக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்து இந்த குழு முடிவு செய்யும். குடிமக்கள், வரலாற்று அறிஞர்கள், எழுத்தாளர்கள், வல்லுநர்கள், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருடன் இந்திய தேசிய ராணுவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர் இந்த குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்று இருந்தன.

## தங்க நாற்கர ரயில்பாதைத் திட்டம்

- தங்க நாற்கர ரயில்பாதைத் திட்டத்தில் 1612 கிலோமீட்டர் ரயில் பாதையில் 1280 கிலோமீட்டர் தூரத்திற்கு ரயில்களின் வேகத்தை 130 கிலோ மீட்டராக இந்திய ரயில்வே அதிகரித்துள்ளது.
- முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சி காலத்தில் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை தங்க நாற்கர சாலை அமைக்கப்பட்டு இன்றளவும் போக்குவரத்துக்கு துணை புரிந்து வருகிறது.
- டில்லி-மும்பை, மும்பை-சென்னை, சென்னை-கொல்கத்தா, கொல்கத்தா-டில்லி, டில்லி-சென்னை, மும்பை-கொல்கத்தா ஆகிய 6 ரயில் பாதைகளில் அதிவேக ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது.

## வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாடு

- **”கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா ”நாடென்ப நாட்டின் தலை”**
- என்ற திருக்குறளை பிரதமர் மோடி மேற்கோள் இம்மாநாட்டில் காட்டினார். எந்த வகையிலும் கெடுதலை அறியாமல், ஒருவேளை கெடுதல் ஏற்படினும் அதனைச் சீர் செய்யும் அளவுக்கு வளங்குன்றா நிலையில் உள்ள நாடுதான், நாடுகளிலேயே தலைசிறந்ததாகும் என்பது இந்தக் குறளின் பொருள்.
- உலகின் இக்கட்டான நேரத்தில் இந்தியாவும், இந்தியர்களும் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உதவி செய்வார்கள் என்று பிரதமர் மோடி உறுதிபட தெரிவித்தார்.

## தேசிய வேலைவாய்ப்பு கொள்கை

- மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்பபுத் துறை அமைச்சகம் தேசிய வேலைவாய்ப்பு கொள்கைக்கு (என்இபி) இறுதி வடிவம் கொடுக்க உள்ளது.
- நான்கு தொழிலாளர் சட்டங்கள் நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ளன.
- தொழில்முறை உறவு, சமூக பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதார பாதுகாப்பு & பணி நிலைமை தொடர்பான மூன்று தொழிலாளர் சட்டங்களை மத்திய அரசு நாடாளுமன்றத்தில் கடந்த 2020ஆம் ஆண்டு நிறைவேற்றியது.

## இந்திய தரநிர்ணய வாரியத்தின் 74வது நினைவு ஆண்டு

- இந்திய தரநிர்ணய வாரியத்தின் (Bureau of Indian Standards) 74வது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. கடந்த 2016ம் ஆண்டு தேசிய தரநிர்ணய வாரியம் Bureau of Indian Standards Act மூலம் ஏற்படுத்தப்பட்டது.

## மணிப்பூர் மாநில அரசு "COSFOM" என்ற இணையதளம்

- மணிப்பூர் மாநில அரசின் சுற்றுச்சூழல் காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ‘COSFOM’ என்ற இணையத்தளத்தை வெளியிட்டது.
- COSFOM என்பது Community-based Sustainable Forest Management for Water Resource Conservation in Manipur என்பதாகும்.
- COSFOM என்பது இந்தியா-ஜெர்மன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இந்த போர்டல் மூலம் மாநிலத்தில் உள்ள சமூக காடுகள் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## பர்சுரம் குந்து மேம்படுத்த ரூ.37.8 கோடி ரூபாய் ஒதுக்கீடு

- மத்திய அரசு அருணாச்சல பிரதேசத்தில் உள்ள “பர்சுரம் குந்த்“ மேம்படுத்த ரூ.37.8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தியாவில் யாத்ரீகர்கள் அதிக செல்லக்கூடிய பகுதிகளில் “பர்சுரம் குந்த்“ ஒன்றாகும். மேலும் சிறந்த சுற்றுலா தளங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த இடத்தில் தான் லோஹித் ஆறு அமைந்துள்ளது.

## 2021–ம் ஆண்டின் குடியரசுத் தினத்தின் விருந்தினர்

- இந்திய வம்சாவளியை சேர்ந்த சுரினாம் ஜனாதிபதி சந்திரிகா போகத் சந்தோகி, இந்தியாவின் குடியரசுத் தின விழாவில் இந்த ஆண்டு கலந்து கொண்டனர்.
- முன்னதாக இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதாக இருந்தது. இவர் வருகை ரத்து ஆனது அடுத்து சுரினாம் ஜனாதிபதி கலந்து கொள்ள உள்ளார்.

## 'ஸ்டார்ட் அப் இந்தியா" சர்வதேச மாநாடு இளைஞர்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு

- வரும் 15, 16-ம் தேதிகளில் நடைபெற உள்ள ஸ்டார்ட் அப் இந்தியா இண்டர்நேஷனல் மாநாட்டில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
- தொழில்துறை, கல்வித்துறை, முதலீடு, வங்கித் துறை மற்றும் நிதி சார்ந்த அனைத்து ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைவர்களையும் ஒருங்கிணைக்கும் முகமாக இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

## 26வது கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழா

- மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கொல்கத்தா சர்வதேச திரைப்பட விழாவை (KIFF) துவக்கி வைத்துள்ளார்.
- இந்த விழா ஜனவரி 13 வரை நடைபெற்றது.
- இந்த விழாவில் 45 நாடுகளைச் சேர்ந்த 131 திரைப்படங்கள் திரையிடப்பட்டது.

## டெல்லியில் புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டுவதற்கு பாரம்பரிய பாதுகாப்பு குழு அனுமதி

- டெல்லியில் புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டுவதற்கு பாரம்பரிய பாதுகாப்பு குழு அனுமதி அளித்துள்ளது.
- மத்திய அரசின் முக்கிய துறைகளுக்கான கட்டிடங்களை அமைக்கும் சென்ட்ரல் விஸ்தா திட்டத்திற்கு பாரம்பரிய பாதுகாப்பு குழு அனுமதி அளித்துள்ளது.
- பாரம்பரிய கட்டிடங்களை பாதுகாப்பதற்காக 1983ஆம் ஆண்டு டெல்லி பில்டிங் பைலாவில் பிரிவு 263ன் கீழ் நகரப்புற விவகார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தலைமையில் பாரம்பரிய பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.
- டெல்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள கட்டிடங்கள் மட்டுமே இந்தச் சட்டங்களால் நிர்வகிக்கப்படுகின்றன.
- இதே போன்ற பாதுகாப்புக் குழுக்கள் மாநில மட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

## இந்தியாவில் வனேடியம் தயாரிக்கும் முதன்மை மாநிலம்

- இந்தியாவில் வனேடியம் என்ற கனிமப் பொருட்களை உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் அருணாச்சலப் பிரதேச மாநிலம் ஆகும். வனேடியம் என்பது டைட்டானியம் மற்றும் எஃகு ஆகியவற்றை வலுப்படுத்த பயன்படுத்தப்படும் உயர் மதிப்புடைய உலோகமாகும்.

## "Period Room" அமைப்பு

- மகாராஷ்டிரா மாநில அரசு பெண்களின் மாதவிடாய் காலங்களில் உதவியாக பொது கழிப்பறையில் 'Period Room' என்ற வசதியை அமைத்து உள்ளது. இவ்வசதியை மகாராஷ்டிரா மாநிலத்தின் தானே நகரில் அமைத்து உள்ளது.

## 2021ம் ஆண்டின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் குறியீடு

- உலக நாடுகளில், குடிமக்கள் தங்களது நாடுகளில் இருந்து சுற்றுலா, வாழ்க்கை தேவைகள் உள்ளிட்ட விசயங்களுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு பாஸ்போர்ட் வைத்திருக்க வேண்டும். எனினும், அவற்றுடன் விரும்பிய நாடுகளுக்கு உடனடியாக செல்ல விசா அனுமதி அவசியம்.
- இவற்றில் ஜப்பான் நாட்டு மக்கள் 191 நாடுகளுக்கு செல்ல எளிதில் விசா அனுமதி வழங்கப்படுகிறது என ஹென்லே பாஸ்போர்ட் குறியீடு தெரிவித்து உள்ளது. இதன்படி, உலக நாடுகளில் 2021ம் ஆண்டின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் குறியீட்டு வரிசையில் ஜப்பான் நாட்டுக்கு (191 புள்ளிகள்) முதல் இடம் கிடைத்துள்ளது.
- 2வது இடத்தில் சிங்கப்பூர் (190 புள்ளிகள்).
- 3வது இடத்தில் தென்கொரியா மற்றும் ஜெர்மனி நாடுகள் (189 புள்ளிகள்).
- 7வது இடத்தில் உள்ளன (185 புள்ளிகள்).
- 8வது இடத்தில் ஆஸ்திரேலியா (184 புள்ளிகள்) உள்ளன.
- இவற்றில் 58 புள்ளிகளுடன் இந்தியா 85வது இடத்தில் உள்ளது.
- நேபாளம் 104வது இடத்திலும், பாகிஸ்தான் 107வது இடத்திலும் உள்ளன.

## மாட்டுச் சாணத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட இயற்கை பெயிண்ட் அறிமுகம்

- மாட்டுச் சாணத்தில் இருந்து தயாரிக்கப்பட்ட காதி இயற்கை பெயிண்டை மத்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறை அமைச்சர் நிதின் கட்கரி அறிமுகம் செய்து வைத்தார்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த, நச்சுத்தன்மை இல்லாத, பாக்டீரியா எதிர்ப்புத் திறன் கொண்ட பெயிண்டை காதி, கிராமத்தொழில் ஆணையம் (கேவிஐசி) தயாரித்துள்ளது.

## முதல் ஐஸ் ஏறும் (ice climbing) திருவிழா

- லே பகுதியின் நுப்ரா சமவெளியில் முதல் ஐஸ் ஏறும் திருவிழா கொண்டாடப்பட்டது. இத்திருவிழா ஏழு நாள் கொண்டாடப்பட்டது.
- நுப்ரா சமவெளியில் குளிர்கால சுற்றுலாவை அதிகரிப்பதே இதன் நோக்கம் ஆகும்.

## பணிக்குச் செல்லும் பெண்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும்

- மத்திய பிரதேசத்தில் பணிக்குச் செல்லும் பெண்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக அந்த மாநில முதல்வர் சிவராஸ் சிங் சௌஹான் தெரிவித்தார்.
- இதற்காக அவர்கள் தங்கள் பெயர், தங்கியிருக்கும் இடம் உள்ளிட்ட விவரங்களை அருகில் உள்ள காவல் நிலையங்களில் பதிவு செய்யும் திட்டம் விரைவில் அமல்படுத்தப்படும். ஆபத்து நேரங்களில் அவர்களுக்கு உதவிடும் விதமாக, அவசர உதவி எண்கள் வழங்கப்படும்.

## ஜம்மு–காஷ்மீரில் 150 மீட்டர் நீள சுரங்கப் பாதை கண்டுபிடிப்பு

- ஜம்மு-காஷ்மீரில் கதுவா மாவட்டம் ஹிரா நகர் செக்டாரில் பயங்கரவாதிகள் தோண்டிய 150 மீட்டர் நீள சுரங்கப்பாதையை எல்லைப் பாதுகாப்புப் படையினர் (பிஎஸ்எஃப்) கண்டுபிடித்தனர்.
- ஜம்மு-காஷ்மீரில், பாகிஸ்தானையொட்டிய எல்லைப்புற மாவட்டம் கதுவா. கடந்த ஆண்டு ஆகஸ்ட் 28, நவம்பர் 22 ஆகிய நாள்களில் ஜம்மு-காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் இது போன்ற இரண்டு சுரங்கப் பாதைகளை பிஎஸ்எஃப் கண்டறிந்தது குறிப்பிடத்தக்கது.

## மத்திய பிரதேசத்தில் 3–ம் பாலினத்தவருக்கு அடையாள அட்டை

- மத்திய பிரதேச மாநிலம் போபாலில் மூன்றாம் பாலினத்தவருக்கு அடையாள அட்டை வழங்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதல்முறையாக தொடங்கப் பட்டுள்ளது.
- நாட்டிலேயே முதல் மாவட்டமாக போபாலில் மூன்றாம் பாலினத்தவருக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.
- இது அவர்களுக்கு தனித்துவமான அங்கீகாரமாக இருக்கும்.
- மூன்றாம் பாலினத்தவர்களுக்கானஅரசின் நலத்திட்டங்களின் பலனை பெறவும் உதவும்.

## Fire Park

- இந்தியாவின் முதல் "தீயணைப்பு பூங்காவை" (Fire Park) ஒடிசாவின் புவனேஷ்வரில் அம்மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் திறந்து வைத்தார்.
- தீயணைப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை வழங்குவதற்கான முதல் முயற்சியாக ஃபயர் பார்க் உள்ளது.
- தீயணைப்பு தொடர்பான 16 சேவைகளை வழங்கும் மெய்நிகர் தளமான "அக்னிஷாம சேவா" (Agnishama Seva) வையும் நவீன் பட்நாயக் அறிமுகப்படுத்தினார்.

## இந்தியாவில் தொழில் தொடங்கும் டெஸ்லா

- மின்சாரவாகனதயாரிப்பில்உலகின்முன்னணி நிறுவனமாக உள்ள அமெரிக்காவின் டெஸ்லா, இந்தியாவில் தனது வாகனங்களை விற்பனை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

- தற்போது பெங்களூருவில், இந்திய அலுவலகத்தை அமைக்க உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
- பெங்களூரு மத்திய வணிக மாவட்டத்தில் அமைய உள்ளது.

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில்

- உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரான முதல் ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயிலை, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் அறிமுகம் செய்து வைத்தார்.
- பெங்களூரில் உள்ள பிஇஎம்எல் நிறுவனம் உள்நாட்டு தொழில்நுட்பத்தில், ஓட்டுநர் இல்லா நவீன மெட்ரோ ரயில்களை தயாரிக்கிறது.
- மும்பை பெருநகர வளர்ச்சி ஆணையத்துக்காக தயாரிக்கப்பட்ட ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயிலை, பெங்களூரில் உள்ள பிஇஎம்எல் வளாகத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் அறிமுகப்படுத்தினார்.

## வணிக நடைமுறைகளை திருத்தம் செய்ததில் 8வது மாநிலம் கேரளா

- எளிய வணிகம் நடைமுறையில் *(Ease of Doing Business)* திருத்தம் செய்வதில் எட்டாவது மாநிலம் கேரளா ஆகும்.
- திறந்தவெளி சந்தை கடனில் *(Open Market Borrowings)* கேரளா மாநிலத்தின் நிதி வளம் ரூ.2,373 கோடியை கொண்டுள்ளது.
- கேரளாவை தொடர்ந்து ஆந்திரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்கள் வணிக நடவடிக்கைகள் சீர்திருத்தங்கள் மேற்கொண்டுள்ளது.

## நாட்டின் முதல் "ஓட்டுநர் அல்லாத மெட்ரோ கார்"

- மத்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் பெங்களூருவில் உள்ள பிஇஎம்எல் உற்பத்தி நிலையத்தில் நாட்டின் முதல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட மற்றும் ஓட்டுநல் அல்லாத மெட்ரோ காரை அறிமுகப்படுத்தினார்.
- ஆறு மெட்ரோ கார்கள் 2280 பயணிகளை ஏற்றிச்செல்லும் திறன் கொண்டவை ஆகும்.

## புதிய தொழில் நிறுவனங்களுக்கு ரூ.1,000 கோடி நிதி

- தொழில்முனைவோர்கள் புதிய தொழில் நிறுவனங்களை தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1,000 கோடி மதிப்பிலான நிதித் தொகுப்பு அமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- புதிய தொழில் தொடங்குவோரை ஊக்குவிப்பதற்காக "ஸ்டார்ட்-அப் இந்தியா" திட்டம் கடந்த 2016-ஆம் ஆண்டு மத்திய அரசால் தொடங்கப்பட்டது.
- அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, "பிராரம்ப்: ஸ்டார்ட்-அப் இந்தியா சர்வதேச மாநாடு" காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.
- புதிய தொழில் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

## கேரளத்தில் 2-ஆவது அரசு குடிநீர் உற்பத்தி ஆலை

- கேரளத்தில் 2-ஆவது அரசு குடிநீர் உற்பத்தி ஆலையை மாநில முதல்வர் பினராயி விஜயன் திறந்து வைத்தார்.
- கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள தொடுபுழையில் அரசு குடிநீர் உற்பத்தி ஆலை செயல்பட்டு வருகிறது.
- தற்போது திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள அருவிக்கரையில் 2-ஆவது அரசு குடிநீர் உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் தொழிலாளர் இயக்கம் அருங்காட்சியகம்

- இந்தியாவின் முதல் தொழிலாளர் இயக்கம் அருங்காட்சியகம் *(India's First Labour Movement Museum)* கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.
- உலக தொழிலாளர் இயக்கம் முன்னிட்டு இந்தியாவில் எவ்வாறு தொழிலாளர் இயக்கம்

உருவானது என்பது பற்றிய ஆவணங்கள் இந்த அருங்காட்சியகத்தில் இருக்கும் என மாநில சுற்றுலாத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஒற்றுமை சிலைக்கான சுற்றுலாவை அதிகரிக்க 8 ரயில்கள் அறிமுகம்

- பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தின் கெவாடியாவுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் எட்டு ரயில்களை கொடியசைத்து திறந்த வைத்தார்.
- இந்த ரயில்கள் கெவாடியாவை வாரணாசி, தாதர், அகமதாபாத், ஹஸ்ரத் நிஜாமுதீன், ரேவா, சென்னை மற்றும் பிரதாப்நகர் ஆகியவற்றுடன் இணைக்கும்.
- இந்த ரயில்கள் பழங்குடி பிராந்தியத்தில் சுற்றுலாவை மேம்படுத்தவும், உலகின் மிக உயரமான சிலை, ஒற்றுமை சிலைக்கான இணைப்பை அதிகரிக்கவும் உதவும் என்று சர்தார் வல்லாபாய் படேலின் 143வது பிறந்த நாளை முன்னிட்டு 2018 அக்டோபரில் அவர் திறந்து வைத்தார்.

## ஒரு பள்ளி ஒரு மாவட்ட ஆட்சியர் திட்டம் (One School One IAS Sheme)

- கேரள மாநில அரசின் ஆளுநர் ஆரிப் முகமது கான் ஒரு பள்ளி ஒரு மாவட்ட ஆட்சியர் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- *Vedhik Erudite Foundations Scholarship Programme* என்ற திட்டத்தின் கீழ் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் மாநிலத்தில் உள்ள சிறந்த மாணவர்களை முடிவு தேர்வு செய்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். மற்றும ஐ.பி.எல் அதிகாரிகள் கொண்டு குடிமைப் பணி தேர்வுகளுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது.
- இதற்காக மாநிலம் முழுவதும் 10,000 மாணவ, மாணவிகள் தேர்வு செய்ய உள்ளனர்.

## 'சக்ஷம்" பிரச்சாரம்

- பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களை சிக்கனமாக பயன்படுத்தியதற்காக, மத்திய பெட்ரோலிய அமைச்சகம், தமிழகத்திற்கு விருது வழங்கியுள்ளது.
- பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள், 'சாக் ஷம்' என்ற பெயரில், பெட்ரோல், டீசல், சமையல் காஸ் சிலிண்டர் உள்ளிட்ட, பெட்ரோலிய எரிபொருட்களை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பாக, பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.
- இணையதளம் வாயிலாக, மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக செயலர் தருண் கபூர், 2020ல், பெட்ரோலிய பொருட்களை சிக்கனமாக பயன்படுத்தியதற்காக, தமிழகத்திற்கு விருது பெற்றது.

## இந்தியாவின் முதல் கோவிட்–19 தடுப்பூசி பெற்ற நபர்

- இந்தியாவின் முதல் கோவிட்-19 தடுப்பூசி பெற்றவர் டெல்லியின் துப்புரவு பணியாளர் மணிஷ் குமார் என்பவர் ஆவார்.
- பிரதமர் நரேந்திர மோடி நாடு முழுவதும் கோவிட்-19 வைரஸ்க்கான தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஜனவரி 16 அன்று தொடங்கி வைத்தார்.

## நேதாஜி பிறந்த தினம் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும்

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த தினம் ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று மத்திய கலாசார துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் அறிவித்தார்.
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த தினமான ஜனவரி 23-ஆம் தேதி ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும். இந்த ஆண்டு அவரின் 125-ஆவது பிறந்த தினம் கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி அவரின் பிறந்த தினத்தன்று மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் முதலாவது வலிமை தின நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
- கடந்த 1938-ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் சூரத் மாவட்டம் ஹரிபுராவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்தான் அக்கட்சியின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, ஹரிபுராவிலும் தேசிய வலிமை தின நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

## முதல் ஆயுஷ்மான் சிஏபிஎஃப் திட்டம்

- நாடு முழுவதும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டமான ஏபி பிஎம்-ஜேஏஒய் எனப்படும் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை கடந்த 2018-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.
- 10.74 கோடி ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு (சுமார் 53 கோடி பயனாளிகள்) அதிகபட்சமாக ஒரு குடும்பத்துக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரையிலும் அரசு சார்பில் நிதியுதவி வழங்கும் மிகப் பெரிய சுகாதாரத் திட்டத்தின் மூலம் பணமில்லா, காகிதமில்லாத பரிவர்த்தனைக்கு இத்திட்டம் அடித்தளமிட்டது.
- இந்நிலையில் மத்திய துணை ராணுவப் படையின் பல்வேறு பிரிவுகளான மத்திய ரிசர்வ் காவல்படை (சிஆர்பிஎஃப்), எல்லை பாதுகாப்புப்படை (பிஎஸ்எஃப்), மத்திய தொழிலக பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எஃப்), இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்புப்படை (ஐடிபிபி), சஷஸ்த்ரா சீமாபால் (எஸ்எஸ்பி), அஸ்ஸாம் ரைபிள்ஸ் படையைச் சேர்ந்த வீரர்களையும், இந்தத் திட்டத்தின் கீழ் ஜனவரி 23-ஆம் தேதி முதல் இணைக்கப்பட்டது.

## கொச்சி விமான நிலைய பயன்பாட்டுக்காக மிதக்கும் சூரியமின் தகடுகள் மூலம் மின் உற்பத்தி

- கேரள மாநிலம் கொச்சி விமான நிலைய பயன்பாட்டுக்காக செயற்கை குளங்களை உருவாக்கி, அதில் மிதக்கும் வகையில் சூரியமின் சக்தி தகடுகள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யும் பணிகள் தொடங்கியுள்ளன.
- சிஐஏஎல் நிறுவனத்துக்குச் சொந்தமான 130 ஏக்கர் கோல்ஃப் விளையாட்டு மைதானத்தில் இரண்டு செயற்கை குளங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் மிதக்கும் விதமான ஒரு ஏக்கர் பரப்பளவில் 1,300 சூரியமின் தகடுகள் அனைத்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- உலகளவில் முற்றிலும் சூரியமின் சக்தி மூலம் இயங்கத் தொடங்கிய முதல் விமான நிலையம், கேரள மாநிலம் கொச்சி சர்வதேச விமான நிலையம் ஆகும். கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் இந்த விமான நிலையத்தின் மின்சார தேவைகள் முழுவதுமாக சூரியமின் சக்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

## டிராகன் பழத்தின் பெயர் கமலம் என மாற்றம்

- டிராகன் பழத்தின் பெயரை கமலம் என்று மாற்றுவதற்கு குஜராத் அரசு முடிவு செய்திருப்பதாக, அந்த மாநில முதல்வர் விஜய் ரூபானி கூறியுள்ளார்.
- கட்ச், நவஸாரி மற்றும் சௌராஷ்டிர பிராந்தியத்தின் பல பகுதிகளில் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது.
- கமலம் என்ற வார்த்தைக்கு தாமரை என்று பொருள்.

## புதிய கண்டுபிடிப்புகளுக்கான நிதி ஆயோக் குறியீடு

- நிதி ஆயோக் வெளியிட்ட புதிய கண்டுபிடிப்புக்கான குறியீட்டு பட்டியலில் தமிழகம் மூன்றாமிடம் பிடித்துள்ளது.
- மாநிலங்களிடையே புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தும் முயற்சியாக, சர்வதேச புதிய கண்டுபிடிப்பு குறியீட்டு பட்டியலின் அடிப்படையில் தேசிய புதிய கண்டுபிடிப்பு குறியீட்டு பட்டியலை நிதி ஆயோக் வெளியிட்டு வருகிறது. 36 வகையிலான அலகுகளின் அடிப்படையில் இந்த குறியீடு பட்டியல் தயார் செய்யப்படுகிறது.
- 2020-ஆம் ஆண்டுக்கான புதிய கண்டுபிடிப்பு குறியீட்டு முதல் பட்டியலை நிதி ஆயோக் அண்மையில் வெளியிட்ட நிலையில், இரண்டாவது பட்டியலை வெளியிட்டது.
- இதில் கர்நாடகம், மகாராஷ்டிரம், தமிழகம், தெலங்கானா, கேரளம் ஆகிய மாநிலங்கள் முதல் 5 இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஜார்கண்ட், சத்தீஸ்கர், பிகார் ஆகிய மாநிலங்கள் பட்டியலில் கடைசி இடத்தில் இடம் பெற்றுள்ளன.

## லக்னௌவில் "ஹுனார் ஹத்"

- பாரம்பரிய கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் "ஹுனார் ஹத்" எனப்படும் கைவினைஞர்களின் கண்காட்சி லக்னௌவில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- சிறுபான்மை விவகார அமைச்சகத்தின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஹுனார் ஹத் கண்காட்சியை உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் முறைப்படி திறந்து வைப்பார் என அந்த அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## முதல்வர் பகயாத் விகாஷ் யோஜனா

- குஜாரத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி "முதல்வர் பகயாத் விகாஷ் யோஜனா"என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- தோட்டக்கலை மேலாண்மை திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. விவசாயம், தோட்டக்கலை மற்றும் விவசாயிகள் இயற்கை தாவரங்கள் வளர்த்தல் ஆகியவை மேம்படுத்தப்படுவதும் இத்திட்டம் நோக்கம்.
- தோட்டக்கலை விவசாயம் மூலம் விவசாயிகளின் வருவாய் இரண்டு மடங்காக உயர்த்துவதே இதன் முக்கிய நோக்கம்.
- சில உற்பத்தி பொருள்களின் ஏற்றமதியை அதிகரிப்பதும் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவது இத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது.

## புதிய தொழில்களுக்கான 15வது இந்தியா– சர்வதேச உச்சி மாநாடு (15th India Digital Summit 2021)

- புதிய தொழில்களுக்கான இந்தியா – சர்வதேச உச்சி மாநாடு தொடங்கியது.
- 2018-ஆம் ஆண்டு காட்மாண்டுவில் நடைபெற்ற பலதுறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன் முயற்சி அமைப்பான பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டின்போது அறிவித்ததற்கேற்ப இந்தியாவில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது.
- மேலும் 2016 ஜனவரி 16-ஆம் தேதி பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட புதிய தொழில்கள் இந்தியா திட்டத்தின் ஐந்தாவது ஆண்டினை குறிக்கும் வகையிலும் இந்த மாநட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- புதிய தொழில்கள் இந்தியா திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மத்திய அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த துறைக்கான மிகப்பெரிய மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது.
- மையக்கருத்து : *'Aatmanirbhar Bharat – Start of New Decade'.*

## "நேதாஜி எக்ஸ்பிரஸ்"

- ரயில்வே அமைச்சகம் ஹவுரா-கல்கா மெயில் ரயிலுக்கு நேதாஜி எக்ஸ்பிரஸ் என்று பெயரில் மாற்றியுள்ளது.
- ஹவுரா-கல்கா ரயில் மிகவும் பிரபலமான மற்றும் இந்திய ரயில்வேயின் மிகவும் பழைய ரயில்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## சிக்கிமில் அமைகிறது திரைப்பட நகரம்

- கேங்க்டாக்கில் 10 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் திரைப்பட நகரத்தை அமைக்க சிக்கிம் அரசு முடிவெடுத்துள்ளது.
- தலைநகரான கேங்க்டாக்கில் 10 ஏக்கருக்கும் அதிகமானநிலப்பரப்பில்திரைப்படநகரத்தை அமைக்க சிக்கிம் அரசு முடிவெடுத்துள்ளது.
- நடிப்பு பள்ளி, பல்வேறு திரைப்பட அரங்குகள், ஃபேஷன் ஷோக்களுக்கான தளங்கள், திரையரங்குகள், திறந்தவெளி அரங்கம், நாடக அரங்கம், கூட்ட அரங்குகள், பூங்கா, எடிட்டிங் அரங்குகள், ஒலி அரங்குகள் ஆகியவை இங்கு அமைக்கப்படும்.

## சீரம் ஆலை வளாகத்தில் தீ விபத்து

- மகாராஷ்டிர மாநிலம், புணேயில் கரோனா தடுப்பூசியான கோவிஷீல்டை உற்பத்தி செய்துவரும் சீரம் நிறுவனத்தின் ஆலை வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது.
- உலகின் மிகப் பெரிய மருந்து உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான சீரம் நிறுவனம் பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் கோவிஷீல்ட் கரோனா

தடுப்பூசி மருந்தை இந்தியாவில் தயாரித்து வருகிறது.

- இந்த தடுப்பூசிக்கு மத்திய அரசு அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, முதல் கட்டமாக நாடு முழுவதும் 3 கோடி மருத்துவப் பணியாளர்கள் மற்றும் கரோனா தடுப்பு முன்கள பணியாளர்களுக்கு போடப்பட்டு வருகிறது.
- ஹைதராபாதில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனமும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலும் (ஐசிஎம்ஆர்) இணைந்து உருவாக்கிய கோவேக்ஸின் தடுப்பூசியும் நாடு முழுவதும் போடப்பட்டு வருகிறது.

## 850 மெகாவாட் நீர்மின் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- செனாப் ஆற்றின் குறுக்கே 850 மெகாவாட் நீர்மின் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.
- ஜம்மு-காஷ்மீரின் கிஷ்வாட் மாவட்டத்தின் செனாப் ஆற்றில் இந்த உற்பத்தி நிலையம் அமைக்கப்பட உள்ளது.
- தேசிய நீர்மின் நிறுவனம் மற்றும் ஜம்மு – காஷ்மீர் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து உருவாக்க உள்ளது.

## முதல் இணையவழி இளைஞர் வானொலி நிலையம்

- இமாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் ஜெய் ராம்தாகூர் நாட்டின் முதல் இணையவழி இளைஞர் வானொலி நிலையத்தை ("Radio Hills-Youngistan Ka Dil") தொடங்கி வைத்தார்.
- மாநிலத்தின் கலாச்சாரம் மற்றும் மரபுகளை இந்த வானொலி மூலம் வெளிப்படுத்த உள்ளனர்.
- இந்த வானொலி நிலையத்தை தீபிகா மற்றும் சௌரப் என்பவர்கள் தொடங்கி உள்ளனர்.

## அஸ்ஸாம்: 1 லட்சம் பழங்குடியினருக்கு பட்டா வழங்கும் திட்டம்

- அஸ்ஸாம் மாநிலத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களுக்கு இலவச நிலப் பட்டாக்கள் வழங்கும் சிறப்பு திட்ட தொடக்க விழா நடைபெற்றது.
- சுதந்திரத்துக்குப் பிறகு அஸ்ஸாம் மாநிலத்தில் இவ்வளவு பேருக்கு ஒரே நேரத்தில் பட்டாக்கள் வழங்கப்படவுள்ளது இதுவே முதல் முறையாகும்.

## பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டதின் கீழ் 1,68,606 வீடுகள்

- 2022-இல் நாட்டின் 75-ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது அனைவரும் வீட்டு வசதியைப் பெறும் நோக்கத்துடன் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடு இல்லாதவர்களுக்கு மானியத்துடன் கூடிய வீடுகள் கட்டித்தரப்படுகிறது. நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 லட்சம் முதல் ரூ.1.30 லட்சம் வரை மானியம் அளிக்கப்படுகிறது.

## கொல்கத்தாவில் நடைபெறும் நேதாஜி பிறந்த நாள் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாளை 'பராக்கிரம திவாஸ்" என்ற பெயரில் கொண்டாட மத்திய அரசு சமீபத்தில் முடிவு செய்தது.
- கொல்கத்தாவில் உள்ள விக்டோரியா நினைவிடத்தில் ஜனவரி 23-ம் தேதி நேதாஜியின் 125-வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

## தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துக்காக மத்திய அரசிடம் இருந்து 2020-21ஆம் நிதி ஆண்டுக்கு ரூ.9,200 கோடி நிதி பெறப்படும் உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் 9-ஆவது மாநில வேலை உறுதி மன்ற குழுக் கூட்டம் உள்ளாட்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம்**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் அல்லது என்பது இந்திய அரசு கொண்டுவந்த வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகும். இச்சட்டம் 25.05.2005 முதல் அமலாக்கப்பட்டது.

## 24ஆவது கண்காட்சி (ஹுனார் ஹாத்)

- உத்தரபிரதேச மாநிலம் லக்னௌவில் மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் சார்பில் கைவினைப் பொருள்கள், பாரம்பரிய கலைப்பொருள்களுக்கான 24 ஆவது கண்காட்சி (ஹுனார் ஹாத்) தொடங்கி உள்ளது.
- இந்தக் கண்காட்சியில், 31 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 500 கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.
- இதுபோன்ற கண்காட்சிகளை மைசூரு, ஜெய்ப்பூர், சண்டீகர், இந்தூர், மும்பை, ஹைதராபாத், புதுதில்லி, ராஞ்சி, கொச்சி, புதுவை உள்ளிட்ட பகுதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஜார்கண்ட் கனிம சுரங்கம்

- கோடர்மாவின் புல்வரியா பகுதியில் மைக்கா கனிம சுரங்கம் உள்ளது.

## 7வது மாஸ்கிரேட் 2021

- ஃபிக்கி (FICCI) எனப்படும் இந்திய தொழில், வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பின் பொருளாதாரத்தை CASCADE (Committee Against Smuggling and Counterfeiting Activities Destroying the Economy) சீர்குலைக்கும் கடத்தல், போலியான நடவடிக்கைகளுக்கு எதிரான குழு ஏற்பாடு செய்திருந்த 7-வது மாஸ்கிரேட் 2021- கடத்தல், போலியான வர்த்தகங்களுக்கு எதிரான இயக்கத்தை மத்திய சுகாதார, குடும்ப நல அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் தொடங்கி வைத்தார்.
- கொவிட்-19 பெருந்தொற்று, சட்டத்திற்கு புறம்பான மருந்துகளின் புழக்கம் ஆகிய சவால்கள் குறித்து விவரிக்கப்பட்டது.
- ”கொவிட் தொற்றுக்குப் பிந்தைய காலத்தில் கடத்தல், போலி நடவடிக்கைகளுக்கு எதிராக புதிய, நடைமுறைக்கு உகந்த யூகங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமாக விவாதிப்பதே இந்த மாஸ்கிரேட் 2021-இன் முக்கிய நோக்கமாகும்.

## இந்தியாவின் மிக நீளமான வளைவு சாலை பாலம்

- இந்தியாவின் மிக நீளமான வளைவு சாலை பாலம் “Wahrew Bridge” மேகாலயா மாநிலத்தின் கிழக்கு காசி ஹில்ஸ் மாவட்டத்தில் சோஹபார் என்ற இடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- ரூ.49.39 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநில பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் Non-Lapsable Central Pool of Resources என்ற அமைப்பு இந்த பாலத்தை கட்டியது.

## உலகளாவிய இடர் அறிக்கை 2021 (Global Risk Report)

- உலகளாவிய இடர் அறிக்கை 2021ஆம் ஆண்டின் 16வது பதிப்பு உலக பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ளது.
- உலக பொருளாதார மன்றத்தின் 650 உறுப்பினர்கள் கொண்ட நாடுகள் ஆய்வுக்குவுட்பட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.
- உலகளாவிய இடர் அறிக்கை மூன்று அலகுகளை கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அவை தீவிர வானிலை (extreme weather), காலநிலை நடவடிக்கையில் தோல்வி (Climate Action Failure), மனித சுற்றுச்சூழல் பாதிப்பு (human Environment Damage) ஆகியவை அடங்கும்.
- மேலும் அடுத்த 10 ஆண்டுகளில் இவை நிகழ வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதுதவிர தொற்று நோய்கள் (infectious diseases) மற்றும் ஆயுத போர்கள் (weapon of mass destruction) ஆகிய மூன்று நிகழ்வுகள் நடைபெற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் உலகளாவிய இடர் அறிக்கை தரவரிசையுடன் ஒப்பிடும்போது கோவிட்-19 தொற்றின் தாக்கம் 2021 தரவரிசையில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

## 42வது கொக்போரோக் தினம் (42nd Kokborok Day)

- திரிபுரா மாநில அரசு Kokborok மொழியை பேச்சு வழக்காக அங்கீகரித்ததையடுத்து அதன் 42வது நினைவு ஆண்டு அனுசரித்தது.
- மேலும் மாநிலத்தின் சட்ட பேரவை 'Hathai Kotor' என பெயர் மாற்றம் செய்வதாக மாநில முதலமைச்சர் பிப்லாப் குமார் தேப் அறிவித்தார்.

## முதல் குழந்தைகள் நட்பு காவல் நிலையம் (First Child–Friendly Police Station)

- உத்தரகாண்ட் முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத் முதல் குழந்தை நட்பு காவல் நிலையத்தை திறந்த வைத்தார்.
- உத்தரகாண்ட் மாநில குழந்தை பாதுகாப்பு குழுவின் பரிந்தரையின் படி ரூ.5 லட்சம் செலவில் குழந்தை நட்பு காவல் நிலையத்தை தலன்வாலா காவல் நிலையத்தில் அமைக்கப்பட்டது.

## புதிய 4 வழிச்சாலை திறப்பு

- அகமதாபாத்தில் புதிய நான்கு வழிச்சாலை தல்தேஜ்-ஹாலாஜ் ராஞ்சார்தா ரயில்வே மேம்பாலத்தை உள்துறை அமைச்சர் அமித்ஷா திறந்த வைத்தார். ரூ.55 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

## தற்சார்பு இந்தியா

- கடந்த 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்தார். அவரின் பிறந்ததினம் ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று மத்திய அரசு அண்மையில் அறிவித்தது. இந்த ஆண்டு அவரின் 125-ஆவது பிறந்த தினம் கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி மேற்கு வங்கத்தில் நடைபெறவுள்ள தேசிய வலிமை தின நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார்.

## சக்ஷம் உதவித் தொகை

- பொறியியல் படிப்புகளில் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு ஏஐசிடிஇ சார்பில் பிரகதி மற்றும் சக்ஷம் திட்டங்களின் கீழ் ஆண்டுதோறும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## சர்வதேச கல்வி விவகாரங்களுக்கு மையம்

- உயர்கல்வி நிறுவனங்களில் சர்வதேச கல்வி விவகாரங்களுக்கான சிறப்பு மையம் அமைக்கப்பட வேண்டும் என்று யுஜிசி உத்தரவிட்டுள்ளது.
- புதிய கல்விக் கொள்கையில் கூறப்பட்டுள்ள அம்சங்களின்படி, இந்திய மாணவர்கள் உலகளவில் வேலைவாய்ப்புகளை பெறு வதற்கான சாத்தியங்கள் உயர்கல்வி நிறுவனங் களில் உருவாக்கப்பட வேண்டும்.
- இதை கருத்தில்கொண்டு நாடு முழுவதுமுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சர்வதேச கல்வி விவகாரங்களுக்கான சிறப்பு மையங்கள் அமைக்க வேண்டும்.

## இரண்டு வான்வழி நெடுஞ்சாலை பாதை கொண்ட முதல் மாநிலம்

- உத்தரபிரதேச மாநிலத்தில் 3300 மீட்டர் நீளம் கொண்ட வான்வழிப் பாதை (airstrip) பூர்வாஞ்சல் நெஞ்சாலைக்கு அருகில் உள்ள குரேபர் (Kurebhar) என்ற இடத்தில் கட்டப்பட உள்ளது.
- இரண்டு வான்வழி நெடுஞ்சாலை பாதை கொண்ட இந்தியாவின் முதல் மாநிலம் உத்தரபிரதேசம் ஆகும்.
- உத்தரபிரதேசத்தில் லக்னோ ஆக்ரா அதிவேக நெடுஞ்சாலையில் ஒரு வான்வழிப் பாதை அமைந்துள்ளது. விமானங்கள் ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் இங்கு இறக்கு வதற்காக இப்பாதைகள் கட்டப்பட உள்ளன.

## உலகளாவிய காலநிலை இடர்குறியீடு 2021 (Global Climate Risk Index 2021)

- உலகளாவிய காலநிலை இடர் குறியீடு 2021-ஐ ஜெர்மன் வாட் என்ற சுற்றுச்சூழல் அமைப்பு வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய காலநிலையால் அதிகம் பாதிப்பு அடைந்த முதல் 10 நாடுகளில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.

- 2019ஆம் ஆண்டில் காலநிலை மாற்றத்தைப் பெற்றுத்தர வரையில் இந்தியா மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஏழாவது இடத்தில் இருந்தது.
- உலகளாவிய காலநிலை மாற்ற இடர்குறியீடு 2021 என்பது 16வது பதிப்பு ஆகும். இதில் 2000ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு காலநிலை மாற்றங்கள் பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளது.
- புயல்கள், வெளிச்சம், வெப்ப அலைகள் ஆகியவற்றால் உலக நாடுகள் எவ்வாறு காலநிலை மாற்றம் அடைந்துள்ளன என இக்குறியீட்டில் விவரிக்கப்பட்டுள்ளது.
- 2019ஆம் ஆண்டில் காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிப்பு அடைந்த முதல் மூன்று நாடுகள் மொசாம்பிக், ஜிம்பாவே, பஹாமாஸ்.
- கடந்த 20 ஆண்டுகளில் (2000-2019) பாதிப்பு அடைந்த முதல் மூன்று நாடுகள் புவோட்டோ ரிக்கோ, மியான்மர், ஹைட்டி

## புதிய கிராமத்தை சீனா கட்டமைத்துள்ளது

- அருணாச்சல பிரதேசத்தில் தாரி சூ நதிக் கரையில் ஒரு புதிய கிராமத்தை சீனா கட்டமைத்துள்ளதாகச் சர்ச்சை எழுந்துள்ளது. இந்தக் கிராமம் சர்வதேச எல்லைக் கோடான மக்மோகன் கோட்டுக்குத் தெற்கே அமைந்துள்ளது.

## எந்தப் பகுதியில் இருந்தும் தேர்தலில் வாக்களிக்க விரைவில் புதிய முறை

- வாக்காளர்கள் தங்கள் தொகுதிக்கு செல்லாமல் நாட்டின் எந்தப் பகுதியில் உள்ள நகரங்களில் இருந்தும் வாக்களிக்கும் புதிய முறைக்கான (ரிமோட் ஓட்டிங்) சோதனைகள் விரைவில் தொடங்கும் என்று தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா தெரிவித்துள்ளார்.

## "இ–கியாஸ்க்" மூலம் வாக்காளர் அடையாள அட்டை பெறும் வசதி

- தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, இ-கியாஸ்க் முறை தொடங்கப்பட்டது.
- இதன்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் அடுத்த ஒரு மாதத்துக்குள் ‘இ-கியாஸ்க்’ தானியங்கி இயந்திரம் நிறுவப்படும்.
- ஏற்கெனவே வைத்திருக்கும் அடையாள அட்டை தொலைந்து விட்டாலோ,சிதைந்து விட்டாலோ இங்கு அச்சிட்டுக்கொள்ளலாம்.
- புதிய வாக்காளர்களும் அடையாள அட்டையை அச்சிட்டுக் கொள்ளலாம்.
- நியாயாமான, நேர்மறையான தேர்தல் நடத்துவதற்காக இந்திய தேர்தல் ஆணையம் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அதன்படி E-Epic (Electronic-Election Photo Identity Card) என்ற புதிய தொழில்நுட்பம் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த எலெக்ட்ரானிக் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டையை வாக்காளர்களே தங்கள் செல்போனில் பதிவிறக்கம் செய்து பிரின்ட்-அவுட் எடுக்கலாம்.

## பாரத் பர்வ் 2021 என்ற தேசிய கண்காட்சி

- பாரத் பர்வ் 2021 என்ற தேசிய கண்காட்சிக்கு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் மற்றும் பிரசார் பாரதி ஆகியவை நடைபெற்றது.
- குடியரசு தின விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு, பாரத் பர்வ் என்ற பிரம்மாண்ட தேசிய கண்காட்சி தில்லி செங்கோட்டை வளாகத்தில் ஆண்டுதோறும் ஜனவரி 26ம் தேதி முதல் ஜனவரி 31ம் தேதி வரை நடத்தப்படுகிறது.

## இந்திய ரயில்வேயில் முதல் முறையாக 3.5 கி.மீ நீளமுள்ள சரக்கு ரயில் இயக்கம்

- இந்திய ரயில்வேயில் முதல்முறையாக 3.5 கி.மீ நீளம் கொண்ட பிரம்மாண்டமான சரக்கு ரயிலை இயக்கிசாதனை படைக்கப் பட்டுள்ளது.
- 5 சரக்கு ரயில்களை இணைத்து 3.5 கி.மீ. நீளம் கொண்ட சரக்கு ரயில் உருவாக்கப்பட்டது.
- இந்த நீண்ட சரக்கு ரயில் மூலம் முதல்முறையாக பிலாஸ்பூர் ரயில்

கோட்டத்தில் உள்ள பிலாய்-யில் இருந்து கோர்பாவுக்கு நிலக்கரி கொண்டு செல்லப் பட்டுள்ளது. மொத்தம் 224 கி.மீதொலைவை 7 மணி நேரத்தில் கடந்துள்ளது. "வாசுகி" என்று பெயர்வைக்கப்பட்டுள்ள இந்த சரக்குரயில் இயக்கியது.

## அந்தமான்–நிகோபார் தீவுகளில் 14 மின்சார பேருந்துகள்

- அந்தமான்-நிகோபார் தீவுகளில் 14 மின்சார பேருந்துகளை அந்த யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர் டி.கே.ஜோஷி மக்கள் பயன்பாட்டுக்கு கொடியசைத்து தொடக்கி வைத்தார்.
- இந்த பேருந்துகள் அந்தமான்-நிகோபார் தீவுகளில் கரியமில வாயு (கார்பன்-டை-ஆக்ஸைடு) வெளியேற்றத்தை குறைக்க உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய தகவல் சேவைகள் மையத்தின் வெள்ளி விழா

- மத்திய மின்னனுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தேசிய தகவல் மையத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனமான என்ஐசிஎஸ்ஐ தனது வெள்ளி விழாவை 2021 ஜனவரி 28ம் தேதி கொண்டாடப்பட்டது.
- தேஜஸ் என்ற - மெய்நிகர் நுண்ணறிவு கருவியையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

## கோவா சுதந்திர போராட்ட வீரர்களின் குடும்பத்தாருக்கு அரசுப்பணி வழங்கப்படும்

- கோவா சுதந்திரப் போராட்ட வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு அளிப்பது தொடர்பான கோரிக்கை நிறைவேற்றப்படும் என அம்மாநில முதல்வர் பிரமோத் சாவந்த் உறுதியளித்தார்.
- இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்ற பிறகும், போர்த்துகீசியர் கட்டுப்பாட்டில் இருந்த கோவா மாநிலம், 1961-ஆம் ஆண்டு டிசம்பரில் விடுதலை பெற்றது.
- இந்த விடுதலைக்காகப் போராடிய பலரின் குடும்ப உறுப்பினர்கள் தங்களது குடும்பத்தினருக்கு அரசுப்பணி வழங்கக் கோரி பானாஜியில் உள்ள ஆசாத் மைதானத்தில் ஜனவரி 22-ஆம் தேதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கொல்கத்தாவில் படகு நூலகம் திறப்பு

- மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் சிறார்களுக்காக படகு நூலகம் திறக்கப் பட்டுள்ளது. "கொல்கத்தாவில் ஹுக்ளி நதியில் பயணித்தவாறு நகரின் அழகை ரசித்துக் கொண்டே சிறார்கள் புத்தகம் வாசிக்க ஏதுவாக படகு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

## "AYU SAMVAD" – "ஆயூ சம்வத்"

- "ஆயூ சம்வத்" (My Health My Responsibility) என்ற மிகப்பெரிய மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஆயுஷ் அமைச்சகம் தொடங்கியது. ஆயுர்வேதம் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்று குறித்த மிகப்பெரிய பொது விழிப்புணர்வு பிரச்சாரம் ஆகும்.
- இப்பிரச்சாரத்தின் மையக்கருத்து "Ayurveda for COVID-19 Pandemic" என்பதாகும். தலைநகர் டெல்லியில் இப்பிரச்சாரம் நடைபெற்றது.

## நகர்புற உள்ளாட்சி அமைப்புகளை சீர்திருத்தம் செய்வதில் ராஜஸ்தான் 5வது மாநிலம்

- நகர்புற உள்ளாட்சி அமைப்புகளை சீர்திருத்தம் செய்வதில் ஐந்தாவது மாநிலம் ராஜஸ்தான் ஆகும்.
- இதையடுத்து கூடுதல் கடன்கள் பெற்று கொள்ள இம்மாநிலம் தகுதி பெறுகிறது. இதையடுத்து ரூ.2731 கோடி திறந்தவெளி சந்தை கடன் பெற்றுள்ளது.
- மேலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை சீர்திருத்தம் செய்ய ஆந்திரா, மத்திய பிரதேசம், மணிப்பூர், தெலங்கானா ஆகிய நான்கு மாநிலங்கள் இணைந்துள்ளன.

**குறைந்தபட்ச தேவைகள்**

- 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டில் எல்லா மாநிலங்களிலும்

'குறைந்தபட்ச தேவைகள்' நிலை மேம்பட்டிருக்கிறது.

- கேரளா, பஞ்சாப், ஹரியானா, குஜராத் மாநிலங்களில் இது அதிகபட்ச அளவிலும், ஒடிசா, ஜார்க்கண்ட், மேற்குவங்கம் மற்றும் திரிபுராவில் குறைந்தபட்ச அளவாகவும் உள்ளன.
- தண்ணீர் கிடைத்தல், வீட்டுவசதி, கழிப்பறை வசதி, மைக்ரோ - சுற்றுச்சூழல் மற்றும் இதர வசதிகள் என்ற ஐந்து விஷயங்களில் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.
- 2012க்கும் 2018க்கும் இடைப்பட்ட காலத்தில், பின்தங்கிய மாநிலங்கள் ஓரளவுக்கு ஆதாயம் பெற்ற காரணத்தால், மாநிலங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் கிராம மற்றும் நகர்ப்புறங்களில் குறைந்துள்ளன.
- 'குறைந்தபட்ச தேவைகள்' கிடைக்கும் நிலை மேம்பட்டிருப்பதால், சிசு மரணம், 5 வயதுக்கும் குறைவான குழந்தைகள் மரணம் போன்ற சுகாதாரக் குறியீடுகள் மேம்பட்டுள்ளன.

## ஊழல் அட்டவணை 2020 (Corruption Perception Index)

- ஊழல் அட்டவணை 2020-ல் இந்தியா 86வது இடத்தில் உள்ளது. இவ்வறிக்கையை டிரான்ஸ் பிரான்ஸி சர்வதேசம் வெளியிட்டுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டு இந்தியா 80-வது இடத்தில் இருந்தது.
- இதில் 182 நாடுகள் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. பொதுத்துறையில் ஊழல்கள் பற்றிய ஆய்வுகள் நடத்தி ஊழல் கொண்ட நாடுகளின் தரவரிசை வெளியிடப்படுகிறது.

## ஷரத்து 176

- ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் சட்டப் பேரவை கூடும்போது ஆளுநர் உரை நிகழ்த்த வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தின் 176 பிரிவு கூறுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் குடியரசு தலைவர் சிறப்புரிமை ஆற்றுவது விதி எண் 87ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆளுநரின் பதவி மற்றும் அதிகாரங்கள் உட்பட ஆளுநர் பற்றிய குறிப்புகள் இந்திய அரசியலமைப்பில் விதி எண் 152-162ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "பிரபுத்தா பாரதா"-வின் 125-ஆம் ஆண்டு பிரதமர் உரை

- 1896 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரால் தொடங்கப்பட்ட ராமகிருஷ்ண இயக்கத்தின் மாதாந்திர சஞ்சிகையான "பிரபுத்த பாரதா"-வின் 125-ஆம் ஆண்டு விழாவில் 31 ஜனவரி அன்று பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றவிருக்கிறார்.

**"பிரபுத்த பாரதா" பற்றி**

- இந்தியாவின் பண்டைய ஆன்மிக ஞானம் குறித்த செய்திகளை பரப்புவதற்கான முக்கிய ஊடகமாக "பிரபுத்த பாரதா" திகழ்கிறது. சென்னையில் தொடங்கப்பட்ட இந்த பத்திரிகை, இரண்டு வருடங்கள் கழித்து ஆல்மோராவில் இருந்து வெளியடப்பட்டது. 1989 ஏப்ரலில் இருந்து அத்வைத ஆசிரமத்தில் இருந்து வெளியாகி வருகிறது.
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், பால கங்காதார திலகர், சகோதரி நிவேதிதா, குடியரசு முன்னாள் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் "பிரபுத்த பாரா"-வுக்கு பங்களித்துள்ளனர்.

## பாலின பூங்கா"

- நாட்டின் முதல் பாலின பூங்கா கேரளாவின் திருவனந்தபுரம் மாவட்டத்தில் அமைய உள்ளது. இந்த பூங்காவினை அம்மாநில முதல்வர் பினராய் விஜயன் துவங்கவுள்ளார்.
- இதனை துவங்கும் போது சர்வதேச மகளிர் வர்த்தக மற்றும் ஆராய்ச்சி மையத்தினையும் துவங்க உள்ளார். கேரளத்தில் பாலின சமத்துவம் குறித்த 2-வது சர்வதேச மாநாடு பிப்ரவரி 11 முதல் 13 வரை நடைபெறுகிறது.

## நாட்டிலேயே முதல் முறையாக காஷ்மீரில் பனிக் குடில் உணவகம்

- காஷ்மீரில் தொடங்கப்பட்டுள்ள பனிக் குடில் உணவகம். காஷ்மீரின் குல்மார்க் நகரில் உள்ள கோலஹோய் ஸ்கை ரிசார்ட், பனிக் குடில் உணவகத்தை திறந்துள்ளது.
- 15 அடி உயரம், 26 அடி சுற்றளவுடன் அமைந்துள்ள இந்த உணவகத்தின் கூரை, மேசை உள்ளிட்டவை பனிக்கட்டிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆர்க்டிக் பகுதியில் உள்ள குடியிருப்புகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

# 7 சர்வதேச நிகழ்வு



## புத்தாண்டு தினத்தில் இந்தியாவில் 60,000 குழந்தைகள் பிறப்பு : உலக நாடுகளில் முதலிடம்

- ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் உலகம் முழுவதும் 3.71 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் பிறந்துள்ளன. அன்றைய தினம் அதிகபட்சமாக இந்தியாவில் 59,995 குழந்தைகள் பிறந்துள்ளன என்று ஐ.நா.வின் யுனிசெஃப் அமைப்பு தெரிவித்துள்ளது.
- இந்தியா – 59,995, சீனா – 35,615, நைஜீரியா – 21,439.
- இந்த ஆண்டு உலகம் முழுவதும் 14 கோடி குழந்தைகள் பிறக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் குழந்தைகளின் சராசரி ஆயுள் 84 வயதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்காசிய கரோனா மாநாடு

- கரோனா தடுப்பு மற்றும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் தெற்காசிய நாடுகளிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்து வதற்கான மாநாட்டை சீனா முதல் முறையாக நடத்தியது.
- இதில், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், இலங்கை, வங்கதேசம் ஆகிய நாடுகள் பங்கேற்று, கரோனா தடுப்பு மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பாக ஆலோசனை நடத்தின.

## வட துருவத்தின் வான்வழியாக சவால் நிறைந்த உலகின் நீண்ட பயணம்

- சான் பிரான்ஸிஸ்கோ-பெங்களூரு இடையிலான ஏர் இந்தியாவின் இடை நிறுத்தம் இல்லாத விமானத்தை முழுக்க பெண் விமானிகளே இயக்கியுள்ளனர்.
- சான் பிரான்சிஸ்கோவுக்கும், பெங்களூருக்கும் இடையிலான வான் வழி தூரம் உலகின் மிக நீளமான ஒன்றாகும்.
- அதன்படி ஏர் இந்தியாவின் ஏஐ176 விமானம் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் இருந்து புறப்பட்டது. பெங்களூர் நகரை வந்தடைந்தது.

## இந்திய சர்வதேச திரைப்பட திருவிழாவின் கவனிக்கத்தக்க நாடு

- இந்திய சர்வதேச திரைப்படத் திருவிழாவின் கவனிக்கத்தக்க நாடு அறிவிக்கப்பட்டுள்ளது. 51- ஆவது இந்திய சர்வதேச திரைப்படத் திருவிழாவின் கவனிக்கத்தக்க நாடாக வங்கதேசம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- தலைசிறந்த திரைப்படங்களுக்கு நாடு வழங்கிய பங்கை அங்கீகரிக்கும் வகையில் கவனிக்கத்தக்க நாடு என்னும் சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## கார்கள் இல்லாத பசுமை நகரம் சவுதி அரேபிய அரசின் புது திட்டம்

- கச்சா எண்ணெய் உற்பத்தியில் உலகின் முன்னணி நாடாக விளங்கும் சவுதி அரேபியா, கார்கள் மற்றும் கார்பன் வாயுக்கள் வெளியேற்றம் இல்லாத பசுமை நகரம் ஒன்றை உருவாக்க உள்ளது.
- செங்கடலை ஒட்டிய பாலைவனப் பகுதியில் 50 ஆயிரம் கோடிஅமெரிக்க டாலர்கள் செலவில், ‘நியோம்’ என்ற பெயரில் நவீன நகரத்தை சவுதி அரேபியா உருவாக்குகிறது.
- நாட்டின் வடமேற்கு தொலைதூரப் பகுதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சதுர மைல் பரப்பளவில் இத்திட்டம் அமையவுள்ளது.
- 2030-ல் சவுதி அரேபியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 4,800 கோடி டாலர் பங்களிப்பு செய்யும்” என தெரிவித்தது.

## 'One Planet Summit'

- பிரான்ஸ் நாடு ஐ.நா. மற்றும் உலக வங்கி ஒத்துழைப்புடன் 'One Planet Summit'-ன் நான்காவது மாநாட்டை நடத்தியது. இதன் முக்கிய நோக்கம் உலகின் பல்யுரிகளை (World Biodiversity) பாதுகாப்பது ஆகும்.
- "Let's act together for nature" என்பது இம்மாநாட்டின் மையக்கருத்தாகும்.
- இம்மாநாட்டை உலக வங்கியும், ஐ.நா. சபையும் இணைந்து ஏற்பாடு செய்தது.

## இந்தோனேசியாவில் பழமையான குகை ஓவியம் கண்டுபிடிப்பு : 45,000 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட ஓவியம்

- இந்தோனேசியாவில் மிகவும் பழமையான குகை ஓவியம் ஒன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த ஓவியம் சுமார் 45 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. பன்றியின் உருவத்தை மையமாக கொண்டு வரையப்பட்டுள்ள ஓவியம், அது சண்டையிட தயாராக இருப்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- ஓவியம் கண்டுபிடிக்கப்பட்ட இந்த குகைக்குள் வறண்ட காலங்களில் மட்டுமே செல்ல முடியும் என்றும், மழை காலங்களில் இந்த குகை நீரினால் சூழப்பட்டிருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## கிளர்ச்சியை தூண்டியதாக ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு

- அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் ட்ரம்ப் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல் காரணமாக பல்வேறு சர்ச்சைகளுக்கு ஆளாகி இருக்கும் அதிபர் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இரண்டு முறை குற்றச்சாட்டுக்கு உள்ளான முதல் அமெரிக்க அதிபர் என்ற பெயரை பெற்றுள்ளார்.

## உலக இடம்பெயர்வு அறிக்கை 2020

- சர்வதேச குடியேற்றத்திற்கான அமைப்பின் (UN-IOM) உலக இடம்பெயர்வு அறிக்கை 2020 இன் மதிப்பீடுகளின்படி, உலகின் மிகப்பெரிய எண்ணிக்கையிலான புலம்பெர்ந்தோரை இந்தியா கொண்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்து உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து 18 மில்லியன் மக்கள் தங்கள் தாயகத்திற்கு வெளியே வசித்து வருகின்றனர்.
- மெக்ஸிகோ மற்றும் ரஷ்யா (தலா 11 மில்லியன்), சீனா (10 மில்லியன்) மற்றும் சிரியா (8 மில்லியன்), ஐக்கிய அரபு அமீரகம் (3.5 மில்லியன்), அமெரிக்கா (2.7 மில்லியன்) மற்றம் சவுதி அரேபியா (2.5 மில்லியன்) ஆகியவை அடங்கும்.
- 2000 மற்றும் 2020க்கு இடையில், வெளிநாடுகளில் குடியேறிய மக்களின் அளவு உலகின் அனைத்து நாடுகளில் பாதியாகும். சிரியா, வெனிசுலா, சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளை காட்டிலும் இந்தியா மிகப்பெரிய (10 மில்லியனாக) சர்வதேச குடியேற்றத்தை கண்டு உள்ளது.

## வாஷிங்டனை அலங்கரிக்கும் வண்ண கோலங்கள்

- பிடன், துணை அதிபர் கமலா ஹாரிசை வரவேற்க மக்கள் வாஷிங்டன் நகரத்தில் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தாலும் அங்கு வசிக்கும் அமெரிக்க வாழ் இந்தியர்கள் பாரம்பரியமான முறையில் வண்ண வண்ண கோலங்களை வரைந்து வருகின்றனர்.
- ஜனவரி 20ஆம் தேதி அமெரிக்காவின் 46வது அதிபராக பதவியேற்கிறார் ஜோ பிடன். அமெரிக்காவில், துணை அதிபராக பதவியேற்க இருக்கும் முதல் பெண் என்ற பெருமையை பெற இருக்கும். இந்திய வம்சாவளியான கமலா ஹாரிசுக்கு உச்சிநீதிமன்ற நீதிபதி சோனியா சோடோமேயர், பதவிப் பிரமாணம் செய்து வைக்க உள்ளார்.

## அமெரிக்காவின் 46–ஆவது அதிபர் ஜோ பைடன்

- அமெரிக்காவின் 46-ஆவது அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட ஜோ பைடன், முதல் நாளிலேயே பல்வேறு அரசாணைகளில் கையெழுத்திட்டார்.
- முதலாவதாக, நாட்டில் தீவிரமாகப் பரவி வரும் கரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான 15 அரசாணைகளில் அதிபர் பைடன் கையெழுத்திட்டார்.
- பருவநிலை ஒப்பந்தம்: அதையடுத்து, பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கான அரசாணையில் அதிபர் ஜோ பைடன் கையெழுத்திட்டார்.
- உலக சுகாதார அமைப்பில் மீண்டும் இணைவதற்கான அரசாணையில் கையெழுத்திட்டு, டிரம்ப் அரசு ரத்து செய்த அந்த அமைப்புக்கான நிதியுதவியை மீண்டும் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

## யுனெஸ்கோ பாரம்பரிய இடங்களைக் காண சிறப்பு ரயில் சுற்றுலா: ஐ.ஆர்.சி.டி.சி

- பிப்ரவரி 18-ஆம் தேதி சிறப்பு ரயில் புறப்பட்டு கோயம்புத்தூர், போத்தனூர், ஈரோடு, சேலம், சென்னை, பெரம்பூர் வழியாக யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்ற மத்திய பிரதேசத்தின் சாஞ்சி ஸ்தூபி, கஜுராஹோ சிற்பங்கள், குவாலியரில் உள்ள அழகான கோட்டைகள், ஜான்சியில் உள்ள ஜான்சி ராணி லட்சுமிபாய் அரசாட்சி செய்த கோட்டை மற்றும் கோயில்கள், ஹவாலி அணை, போபாலில் பிம்பேட்கா குகை மற்றும் போஜ்பூர் சிவாலயம் ஆகியற்றைக் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இந்திய ஆப்பிரிக்க வணிக கவுன்சில் 2021

- இந்திய ஆப்பிரிக்க வணிக கவுன்சில் 2021ஆம் ஆண்டின் மாநாடு தமிழ்நாட்டின் சென்னை மாவட்டத்தில் நடைபெற்றது.
- இந்திய-ஆப்பிரிக்கா வர்த்தக சபையை இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் நக்மாமல்லிக் மற்றும் இந்தியாவின் எத்தியோப்பியா தூதர் டாக்டர் திஜிதா முலுகேதா யிமாம் திறந்த வைத்தனர்.

## துபையில் ரூ.149 கோடியில் கட்டப்படும் ஹிந்து கோயில்

- ஐக்கிய அரசு அமீரகத்தின் துபை நகரில் ரூ.149 கோடி செலவில் கண்கவரும் வகையில் ஹிந்து கோயில் கட்டப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு (2022) அக்டோபரில் இந்த கோயில் பக்தர்களுக்காக திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- 25 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இந்தக் கோயில் கட்டப்படுகிறது. ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள மிகவும் பழைமையான கோயில்களில் ஒன்றான, 1950 களில் கட்டப்பட்ட சிந்தி குரு தர்பாருக்கு அருகே இந்தப் புதிய கோயில் அமைகிறது.
- 11 ஹிந்து கடவுள்களின் சிலைகள் கோயிலில் நிறுவப்படவுள்ளன. அரேபிய பாணியில் கோயில் கட்டுமானம் செய்யப்படவுள்ளது.

## முதல் பெண் பிரதமர் பதவியேற்பு

- வடகிழக்குஐரோப்பியநாடானஎஸ்டோனியா பிரதமராக கஜா கலாஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். அந்த நாட்டின் முதல் பெண் பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவிட்–19 செயல்திறன் குறியீடு

- COVID-19 "செயல்திறன் குறியீட்டின்" படி தொற்றுநோய்க்கு சிகிச்சை வழங்குவதில் நியூசிலாந்து மற்றும் வியட்நாம் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளாக இடம் பெற்றன.
- COVID-19 வழக்குகள் மற்றும் ஒரு மில்லியன் மக்களுக்கு இறப்பு மற்றும் சோதனையின் அளவு உள்ளிட்ட ஆறு வெவ்வேறு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த குறியீடு, "நாடுகளின் ஒப்பீட்டு செயல்திறனை அளவிட்டது.
- 98 நாடுகளில் இந்தியா 86வது இடத்தையும், அமெரிக்கா 94 மற்றும் பிரேசில் குறியீட்டின் கீழே உள்ளது. இந்த பட்டியலில் நியூசிலாந்து மற்றும் வியட்நாம் முன்னிலை வகிக்கின்றன. முதல் ஐந்து இடங்களில் தைவான், தாய்லாந்து மற்றும் சைப்ரஸ் உள்ளன.

## ஆசிய–பசிபிக் தனி பயனாக்கப்பட்ட சுகாதார குறியீடு (Asia–Pacific Personalised Health Index)

- பொருளாதார புலனாய்வு அலகு (EIU) ஆசிய-பசிபிக் தனி பயனாக்கப்பட்ட சுகாதார குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- 11 ஆசிய நாடுகளில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது. ஆசிய நாடுகளில் சுகாதாரம் பற்றிய ஆய்வுகள் மேற்கொண்டு அதனடிப்படையில் நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டன.
- மொத்த நாடுகள் பட்டியலில் சிங்கப்பூர் முதல் இடத்திலும், தாய்வான், ஜப்பான், ஆஸ்திரேலியா இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இடத்திலும் உள்ளன.
- ஆசிய நாடுகள் பட்டியலில் இந்தோனேஷியா கடைசி 11வது இடத்தில் உள்ளது.
- ஆசிய நாடுகள் தரவரிசை: ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, நியூசிலாந்து.

**பொருளாதார புலனாய்வு பிரிவு**

- இது ஒரு பொருளாதார ஆலோசனை பிரிவு ஆகும். உலகளவில் பொருளாதாரம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கைகளை வெளியிடுகிறது.
- இரண்டு அலுவலகங்கள் உள்ளன. அவை ஒன்று சீனாவிலும் மற்றொன்று ஹாங்காங்கிலும் உள்ளன.

**தனிபயனாக்கப்பட்ட சுகாதார குறியீடு (EIU)**

- இது 27 வெவ்வேறான குறியீடுகளைக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில் நாடுகளை வரிசைப்படுத்தப்படுகின்றன. சுகாதாரம், தகவல், தொழில்நுட்பம், சுகாதார சேவைகள் ஆகியவை உள்ளடக்கியது.

## நாட்டின் மிகப் பெரிய புத்தர் சிலை

- பௌத்த மதத்தை தோற்றுவித்த கவுதம புத்தரின் 100 அடி சிலை கொல்கத்தாவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. புத்தகயாவில் உள்ள ஒரு கோயிலில் இது 2022 ஆண்டு திறக்கப்பட உள்ளது.
- கொல்கத்தாவின் பாராநகர் பகுதியில் கோஷ்பாரா என்றஇடத்தில் உள்ள ஒரு மைதானத்தில் மின்ட்டு பால் என்ற கலைஞர் இதனை உருவாக்கி வருகிறார். இந்தச் சிலை, பைபர்கிளாசில் தயாரிக்கப்படுகிறது.
- மின்ட்டு பால் இதற்கு முன்பு கடந்த 2015-ல் கொல்கத்தாவின் தேசப்ரியா பூங்கா பகுதியில் 80 அடி உயர துர்கா சிலையை அமைத்துள்ளார். உலகின் மிகப் பெரிய துர்கா சிலையாக இது கருதப்படுகிறது.

# 8 தமிழ்நாடு



## பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டம்: தேசிய அளவில் சேலம் மாநகராட்சிக்கு மூன்றாமிடம்

- பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், பயனாளிகள் சுயமாக வீடு கட்டிக் கொள்ளும் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியதில் தேசிய அளவில் சேலம் மாநகராட்சி மூன்றாம் இடம் பிடித்துள்ளது.
- மேலும், தேசிய அளவில் சிறந்த பேரூராட்சியாக சேலம் மாவட்டத்தி லுள்ள தெடாவூர் பேரூராட்சி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## ரூ.14,000 கோடியில் காவிரி– குண்டாறு திட்டம்

- ராமநாதபுரம் மாவட்டம் வறண்ட பகுதியாக இருப்பதால் மேட்டூர் அணையின் உபரி நீரை கால்வாய் வெட்டி இணைக்கும் வகையில் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம் ரூ.14,000 கோடியில் நிறைவேற்றப்படும்.

## சட்டப்பேரவைத் தலைவர் பதவிக்கு சிறப்புச் சேர்த்தவர் பி.எச்.பாண்டியன்

- திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி அருகே கோவிந்தப்பேரியில் தமிழக சட்டப்பேரவை முன்னாள் தலைவர் பி.எச். பாண்டியன் நினைவாக கட்டப்பட்ட மணிமண்டபத்தை துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், பி.எச்.பாண்டியன் சிலையை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் திறந்து வைத்தனர்.
- நான்குனேரி-பச்சையாறு திட்டம், நான்கு னேரி- கொடுமுடியாறு திட்டங் களுக் காக வழக்குரைஞராக உச்சநீதிமன்றத்தில் வாதாடி அத்திட்டத்தை ஒரு காலவரையறைக்குள் செயல்படுத்தும் உத்தரவைப் பெற்றுத் தந்தார்.
- தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, மத்திய அரசு 10,000 டன் அரிசியை விடுவிக்க உச்சநீதிமன்றத்தில் வாதாடி வெற்றி கண்டார்.
- வாழ்நாள் சாதனையாளர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.
- 26 ஆண்டுகாலம் பல்வேறு நீதிமன்றங்களில் தன் வாதத்தை எடுத்து வைத்து, பொதுநல வழக்குகள் மட்டுமின்றி அரசியலமைப்புச் சட்ட வழங்குகளிலும் வாகை சூடியவர்.

## குறைதீர் மேலாண்மைத் திட்டத்துக்கும் அம்மா அழைப்பு மைய எண் தகவல் தொழில்நுட்பத் துறை உத்தரவு

- முதலமைச்சரின் குறைதீர் மேலாண்மைத் திட்டத்துக்கு, அம்மா அழைப்பு மைய எண்ணே (1100) பயன்படுத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

## தமிழகத்தில் வேலையின்மை விகிதம் குறைவு

- தமிழக அரசின் முயற்சிகளால், முதலீட்டு ஒப்பந்தங்கள் அடுத்தடுத்து மேற்கொள்ளப் பட்டு, தொழில் சூழல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.
- கடந்த 5 ஆண்டுகளில் வேலையின்மை விகிதமானது மிகக் குறைந்த அளவாக 0.5 சதவீதமாக உள்ளது.

## "மூன்றாவது கண்" திட்டம்

- உலக அளவில் கண்காணிப்பு கேமராக்கள் அதிகம் உள்ள பெரு நகரங்களின் விவரங்கள்

குறித்து "சர்ப்ஷார்க்" என்ற நிறுவனம் 138 நாடுகளில் ஆய்வு நடத்தியது.

- உலகில் எந்தெந்த மாநகரங்களில் அதிக சிசிடிவி கண்காணிப்பு இருக்கிறது என்கிற வரைப்படத்தை இந்த நிறுவனமே வெளியிட்டிருக்கிறது.
- இதில் சதுர கிலோ மீட்டருக்கு 657 கண்காணிப்பு கேமராக்களுடன் சென்னை முதலிடம் பிடித்துள்ளது. தற்போது சென்னையில் 2 லட்சத்து 80 ஆயிரம் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. இந்த பட்டியலில் 2 ம் இடத்தை 480 கேமராக்களுடன் ஐதராபாத்தும், 289 கேமராக்களுடன் டெல்லி 3-ம் இடத்தையும் பிடித்துள்ளன.

## கல்லூரி மாணவர்களுக்கு 2 ஜிபி இலவச இணைய இணைப்பு அட்டைகள்

- தமிழகத்தில் உயர்கல்வி பயிலும் 9.69 லட்சம் மாணவர்களுக்கு ஏப்ரல் வரை தினசரி 2 ஜிபி இலவச இணைய இணைப்பு அட்டைகள் வழங்கப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.
- தமிழக அரசு எடுத்த பல்வேறு சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, உயர்கல்வி பயிலும் மாணவர்களின் சேர்க்கை விகிதம் தமிழகத்தில் 32 சதவீதத்தில் இருந்து 49 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- மாணவ-மாணவிகள் வசதிக்காக ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலத்தில் நாளொன்றுக்கு 2 ஜிபி அளவு கொண்ட இணைய இணைப்பு அட்டைகள், விலையில்லாமல் அளிக்கப்படும்.
- மடிக்கணினிகள் வழங்குதல்: கல்லூரி மாணவ-மாணவிகளின் நலனுக்காக விலையில்லாத மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்த நிலையில், நான்கு மாதங்களுக்கு இலவச இணைய இணைப்புத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது.

## திருச்சியில் சமுதாய நூலகம் திறப்பு

- தமிழக அரசின் பொது நூலகத் துறை சார்பில் மாநிலத்தில் முதன்முறையாக திருச்சியில் சமுதாய நூலகத் திறப்பு விழா நடைபெற்றது.
- தமிழக அரசு பொது நூலகத் துறை, சமுதாய நூலகம்என்ற புதிய திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், பொதுமக்களிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கவும், மேம்படுத்தவும் அடுக்குமாடி குடியிருப்புகளில் நூலகங்கள் திறக்கப்படவுள்ளன.
- அந்த வகையில் தமிழகத்தில் முதன்முதலாக திருச்சியில் இந்த நூலகம் தற்போது திறக்கப்பட்டுள்ளது.

## பிரதமரின் வீடு திட்டம்: சிறுபான்மையினருக்கு 1,691 வீடுகள் ஒதுக்கீடு

- பிரதமரின் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் சிறுபான்மையினருக்கு 1,691 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேசிய சிறுபான்மையினர் ஆணைய துணைத் தலைவர் ஆதிப் ரஷித் தெரிவித்தார்.
- சிறுபான்மையினர் நலன்களுக்காக 15 அம்சத் திட்டங்கள் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டன.
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமின் இந்தியாவில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டமான பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம், கடந்த 2015-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், 2022ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் வீடு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## மணக்குடி பாலத்துக்கு லூர்தம்மாள் சைமன் பெயர்

- கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றின் குறுக்கே மேலமணக்குடி, கீழமணக்குடி கிராமங்களை இணைப்பதற்கு நெடுஞ் சாலைத் துறை மூலம் உயர் நிலை பாலம் கட்டப்பட்டது.
- இந்தப் பாலத்துக்கு மறைந்த முன்னாள் தமிழக அமைச்சர் லூர்தம்மாள் சைமன் பெயர் சூட்டப்படும் என குமரியில் நடந்த விழாவில் முதல்வர் பழனிசாமி அறிவித்தார்.
- இதையடுத்து, மணக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள பாலத்துக்கு லூர்தம்மாள் சைமன் பாலம் எனப் பெயரிடப்படுகிறது.

## வேளச்சேரி–பரங்கிமலை பறக்கும் ரயில் திட்டம்

- சென்னையில் பறக்கும் ரயில் திட்டத்தை அமைக்க 1985-ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது. சென்னை கடற்கரை முதல் பரங்கிமலை வரை மூன்று கட்டங்களாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டது. முதல் கட்டமாக சென்னை கடற்கரை-மயிலாப்பூர் இடையே 9 கி.மீ தூரத்துக்கு பறக்கும் ரயில் திட்டப்பணி ரூ.266 கோடியில் மேற்கொள்ளப்பட்டு கடந்த 1997 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. இரண்டாம் கட்டமாக மயிலாப்பூர்– வேளச்சேரி இடையே பறக்கும் ரயில் திட்டப்பணி ரூ.877.59 கோடி செலவில் 2007-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது.

## தமிழகத்தில் வாக்காளர் எண்ணிக்கை பெண் வாக்காளர்கள் அதிகம்

- தமிழகத்தில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6 கோடியே 26 லட்சமாக உயர்ந்துள்ளது. தமிழகத்திலேயே அதிக வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. குறைவான வாக்காளர் களைக் கொண்ட தொகுதி சென்னை துறைமுகம் தொகுதி.

## நீர் வாழ் உயிரின நோய் கண்டறியும் ஆய்வகத்துக்கு மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் அடிக்கல்

- காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை பகுதியில் ரூ.19.26 கோடியில் அமைக்கப்பட உள்ள நீர்வாழ் உயிரின தனிமைப்படுத்துதல் மற்றும் நோய் கண்டறியும் ஆய்வகத்துக்கு மத்திய மீன்வளத் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் அடிக்கல் நாட்டினார்.
- இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மையில் நீர்வாழ் உயிரின தனிமைப்படுத்துதல் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இந்தியாவில் தற்போது குறிப்பிட்ட நோய்க் கிருமியற்ற லிட்டோ பினேயஸ் வனாமி சினை இறால்களை தனிமைப்படுத்த நீலாங்கரையில் ஒரே ஒரு நீர்வாழ் உயிரின தனிமைப்படுத்துதல் அமைப்பு மட்டுமே உள்ளது.

## தில்லி குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்கும் தமிழக அலங்கார ஊர்தி

- தில்லியில் 26-ஆம் தேதி நடைபெறும் 72-ஆவது குடியரசு தின அணிவகுப்பில் மாமல்லபுரத்தின் சிற்பக் கலையைத் தத்ரூபமாக காட்டும் தமிழக அரசின் அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பங்கேற்கிறது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக தமிழக ஊர்தி நிகழாண்டும் இடம் பெற்றது.
- முதலில் இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்து கடற்கரைக் கோவிலும் (நடுவில்) ஒரே கல்லிலான அர்ஜுனன் தபசு, மூன்றாவதாக பாண்டவர்களின் ஐந்து ரதங்களில் ஒன்றான சகாதேவன் ரதம் ஆகியவை தமிழக ஊர்தியை அலங்கரிக்கிறது.
- பாரதியின் "பாருக்குள்ளே நல்ல நாடு" என்ற பாடலுடன் 4 பரதநாட்டிய கலைஞர்கள், 8 நாதசுரம் தவில் கலைஞர்களுடன் நாட்டிய நிகழ்ச்சிகளோடு தமிழக அலங்கார ஊர்தி பங்கேற்க இருக்கிறது.

## தமிழகத்தில் சிறந்த காவல் நிலையமாக சேலம் நகர காவல் நிலையம் தேர்வு

- தமிழகத்தில் சிறந்த காவல் நிலையமாக சேலம் நகர காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- பொதுமக்களை வரவேற்பது, சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்வது, வழக்குகளை விரைந்து முடிப்பது உள்ளிட்ட காவல் நிலைய செயல்பாட்டு பணிகளை முன் வைத்து மதிப்பெண் அளித்து சிறந்த காவல் நிலையம் தேர்வு செய்யப்படும்.
- கடந்த 2019-ம் ஆண்டுக்கான சிறந்த காவல் நிலையமாக சேலம் நகர காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சேலம் நகர காவல் நிலையத்தின் சிறப்பான செயல்பாட்டுக்கு 5,558 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் முதலிடம் பிடித்துள்ளது.

## சமூக வளர்ச்சி ஆய்வு மையம்

- சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் டாக்டர் எம்ஜிஆர் நூற்றாண்டு சமூக வளர்ச்சி ஆய்வு மையத்தை முதல்வர் பழனிசாமி திறந்த வைத்தார்.
- சென்னைப் பல்கலைக்கழகத்தின் எம்ஜிஆர் நூற்றாண்டு விழா நிறைவின் போது, பல்கலைக்கழக வளாகத்தில் டாக்டர் எம்ஜிஆர் சமூக வளர்ச்சி ஆய்வு மையம் அமைக்கப்படும் என்று கடந்த 2018-இல் அறிவிக்கப்பட்டது.
- தமிழகத்தின் சமூக, அரசியல் மேம்பாட்டுக்கு எம்ஜிஆர் ஆற்றிய பங்களிப்பை ஆராயும் முதல் உயர்கல்வி நிறுவன ஆராய்ச்சி மையமாக இந்த மையம் விளங்கும்.

## தீயணைப்புத் துறையின் அவசர கால உதவிக்கான செயலி

- தீயணைப்புத்துறை சார்பில் அவசர கால உதவி அழைப்புக்கான தீ" (Thee) எனும் பிரத்யேக செயலி வெளியிடப்பட்டு உள்ளது.

## வாணியம்பாடியில் தோல் தொழில் பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம்

- திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் ரூ.4 கோடியில் அமைக்கப்பட்ட தோல் துறைக்கான திறன் மேம்பாட்டு மையத்தை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி காணொலி மூலம் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மத்திய காலணி பயிற்சி நிறுவனத்தின் கூட்டு முனைப்புடன் ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டடம் சீரமைப்பு, அலுவலகம், கணினி அறைகள், பயிற்சி வகுப்பறைகள், உபகரணங்களுடன் வாணியம்பாடி நகராட்சி கோணாமேடு பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

**புத்தகம் வெளியீடு**

- 'Nuturing Music and Fine Art a Historical Perspective' என்ற புத்தகத்தை டாக்டர் ஜெயலலிதா இசை மற்றம் கலை பல்கலைக்கழகத்தில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

## தேசிய சுகாதார திட்டம் தமிழ்நாட்டின் வழிகாட்டுதல் கருத்தை சிறந்த நடைமுறையாக தேர்ந்தெடுக்கிறது

- மகப்பேறுக்கு முற்பட்ட தாய்மார்களை நிர்வகிப்பதற்காக மகப்பேறியல் நிபுணர்கள் மற்றும் மகளிர் மருத்துவ வல்லுநர்கள் வழங்கிய வழிகாட்டுதல்கள் கருத்துகள் தேசிய சுகாதார திட்டம் (என்.எச்.எம்) சிறந்த நடைமுறைகளில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இந்த முயற்சியின் மூலம், மாநிலத்தில் COVID-19 தொற்றுநோய்களின் போது 2.8 லட்சத்துக்கும் அதிகமான ஆபத்தான நிலையில் இருந்த கர்ப்பிணி பெண்கள் அடையாளம் காணப்பட்டனர்.
- COVID-19 தொற்றுநோய்களின் போது உயர் ஆபத்து ஆன்டினாட்டல் (AN) தாய்மார்களின் மேலாண்மை என்ஹெச்எம் அறிமுகப்படுத்தியது.
- தமிழ்நாடு சமீபத்தில் இந்தியாவில் பொது சுகாதார அமைப்புகளில் நல்ல பிரதிபலிப்பு நடைமுறைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த 7வது தேசிய உச்சி மாநாட்டில் (National Summit on Good Replicable Practices and Innovations in Public Health Care Systems) வழங்கப்பட்டது.
- நவம்பர்-டிசம்பர்2019 இல் தொடங்கப்பட்டது.
- சென்னை மாநகராட்சியின் தேர்தல் தூதராக இந்திய கிரிக்கெட் வீரர் வாஷிங்டன் சுந்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தேசிய அறிவியல் மாநாடு

- திருச்சுழி வட்டம் நரிக்குடி அருகே உள்ள விடத்தாகுளம் அரசுப்பள்ளி மாணவிகள் பா.தேவகி மற்றும் க.குமரபாரதி ஆகிய இரு மாணவிகள் சமர்ப்பித்த அறிவியல் ஆய்வறிக்கையானது, தேசிய அறிவியல் மாநாட்டிற்கு தேர்வாகி சிறப்பிடம் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இந்த அறிவியல் ஆய்வறிக்கைப் போட்டி நடத்தியது.

## சென்னை மாநகராட்சி தேர்தல் தூதராக வாஷிங்டன் சுந்தர் நியமனம்

- சென்னை மாநகராட்சியின் தேர்தல் தூதராக இந்திய கிரிக்கெட் வீரர் வாஷிங்டன் சுந்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- சென்னையில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளிலும் முதல்முறை வாக்காளர்களை ஊக்குவிப்பதற்காக வாஷிங்டன் சுந்தரை சென்னை மாநகராட்சி நியமித்துள்ளது.

## தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் திறப்பு

- தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கான தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் சென்னை கிளையை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாரமன் திறந்து வைத்தார்.
- நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சமரச தீர்வு காண்பதற்காக "கம்பெனிகள் சட்டம் – 2013"ன் கீழ் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயங்கள் (என்சிஎல்டி) நாடு முழுவதும் கடந்த 2016-ல் தொடங்கப்பட்டன.
- இந்த தீர்ப்பாயங்கள் பிறப்பிக்கும் தீர்ப்புகளை எதிர்த்து டெல்லியின் உள்ள தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் (என்சிஎல்ஏடி) மட்டுமே மேல்முறையீடு செய்ய முடியும். இந்த தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் கிளையை தென் மாநிலங்களுக்கு மையமாக சென்னையில் அமைக்கப்பட்டு உள்ளது.

## கல்லூரியில் செயற்கைக்கோள் கட்டுப்பாட்டு மையம்

- காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட குன்னம் பகுதியில் ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் 12 பேர் அடங்கிய குழுவினர் உருவாக்கிய யுனிட்டிசாட்-ஜேஐடிசாட் செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ளது.
- இதற்காக கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரைதள கட்டுப்பாட்டு மையத்தை இஸ்ரோ தலைவர் கே.சிவன் திறந்து வைத்தார். 460 கிராம் எடையுள்ள யுனிட்டிசாட்-ஜேஐடிசாட் என்ற நானோ செயற்கைக்கோள் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2022-ஆம் ஆண்டு இந்தியாவின் 75-ஆம் ஆண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கொண்டு 75 செயற்கைக்கோள்களை தயாரித்து விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 'நம்ம சென்னை" சுயபட மேடை

- சென்னை மெரீனா கடற்கரையில், "நம்ம சென்னை சுயபட மேடை"யை (செல்ஃபி) முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார். பெருநகரங்களான புதுதில்லி, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய நகரங்களில் உருவாக்கப்பட்டுள்ள சிற்பங்களின் தொடர்ச்சியாக சென்னையிலும் தற்போது "நம்ம சென்னை" என்னும் அடையாள சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

## சுகாதாரத் துறையின் கீழ் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி

- சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியை கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.
- சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை அரசே ஏற்று நடத்தும் என அறிவிக்கப்பட்டது.

## உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வுப் பெருவிழா

- சென்னை தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஜெயலலிதாவின் பிறந்த நாள் "தமிழ்த்தாய்-73-தமிழாய்வுப் பெருவிழா"வாக பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் மார்ச் 8-ஆம் தேதி வரை கொண்டாடப்பட உள்ளது.

## புதிய தொழில் கொள்கைக்கு அனுமதி

- முதல்வர் பழனிசாமி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ரூ.52.257 கோடியில் 34 புதிய தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டதுடன், தமிழ்நாடு தொழில் கொள்கை-2021" வெளியிடவும் அனுமதியளிக்கப் பட்டது. பொருளதாரத்தை சீரமைக்க அமைக்கப்பட்ட ரங்கராஜன் குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- முதல்வர் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் 34 முக்கிய முதலீடுகளுக்கு ஒப்புதல் அளித்ததுடன், புதிய தொழில் கொள்கையை வெளியிடவும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.